Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு
# தினமுரசு
THINAMURASU

அற்புதன் அச்சகம்
அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811
373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

முரசு – 05 திருவள்ளுவர் ஆண்டு 2045 ஐப்பசி 04 செவ்வாய்க்கிழமை (21.10.2014) பக்கங்கள் 20 ஓசை – 021

## ஈழக்கோரிக்கையைக் கைவிட்டு பல வருடங்களாகி விட்டது

### சம்பந்தன் தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பும், புலம்பெயர்ந்து வாழும் பெருமளவிலான தமிழ் மக்களும் ஈழக்கோரிக்கையை கைவிட்டு விட்டனரென கூட்டமைப்பின் தலைவர்.இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

மவ்பிம பத்திரிகைக்கு அளித்த பேட்டியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அதில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

ஈழக்கோரிக்கையை கூட்டமைப்பும், புலம்பெயர்ந்தவர்களும் கைவிட்டால் நிறைவேற்று ஜனாதிபதி முறையை ஒழிப்பதற்கு தயாரென ஜனாதிபதி தெரிவித்த கருத்தையிட்டு நாம் மிகவும் கவலையடைகின்றோம்.

தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு ஈழம் குறித்து ஒருபோதும் பேசியதில்லை. நாம் உள்ளூராட்சித் தேர்தல், மாகாண சபைத்தேர்தல் மற்றும் நாடாளுமன்றத்

(19) ஆம் பக்கம் பார்க்க...

## புதுடில்லியில் கோத்தாபய; இந்திய அமைச்சருடன் பேச்சு



இந்தியாவுக்கு சென்றுள்ள பாதுகாப்பு செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷ புதுடில்லியில் நேற்று இந்திய பாதுகாப்பு அமைச்சர் அருண்ஜேட்லியை சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார்.

இந்தச் சந்திப்பின் போது இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டுள்ளது. பிரதமர் மோடி தலைமையிலான பா.ஜ.க. அரசு பதவி ஏற்ற பின்னர் கோத்தாபய ராஜபக்ஷ மேற்கொண்டுள்ள முதலாவது இந்திய பயணமென்பது குறிப்பிடத்தக்கது.

# வடக்கில் வாழ்வின் எழுச்சி ஆறாம் கட்டம் ஆரம்பம்



(யாழ்ப்பாணம்)

வாழ்வின் எழுச்சித் திட்டத்தின் ஆறாம் கட்டம் நேற்று வடக்கின் அனைத்து மாவட்டங்களிலும் வெற்றிகரமாக ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு குடும்பத்தினதும் சுயபொருளாதாரத்தை உயர்த்துவதன் ஊடாக மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் நோக்குடன் தேசிய ரீதியாக இத்திட்டம் செயற்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் ஆறாம் கட்டமே வடக்கிலும் நேற்று சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

இந்த வகையில், யாழ்ப்பாண மாவட்டத்திற்கான வாழ்வின் எழுச்சி தேசிய நிகழ்ச்சித் திட்டத்தின் ஆறாம் கட்டத்துக்கான மாவட்ட ஆரம்ப விழா அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நேற்று நடைபெற்றது.

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரியில் மேற்படி நிகழ்வு இடம்பெற்றது.

எங்கள் வீட்டுத்தோட்டத்திலிருந்து எங்கள் மரக்கறிகள் என்ற தொனிப்பொருளை அடிப்படையாகக் கொண்டு இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இதன்மூலம் நச்சுக்கலப்பற்ற மரக்கறிகளை வீட்டுத்தோட்டத்திலிருந்து பெற்றுக் கொள்வதனூடாக மரக்கறி வகைகளை சுயமாக உற்பத்தி செய்ய முடி

(19) ஆம் பக்கம் பார்க்க...

## வவுனியாவிலும் வாழ்வின் எழுச்சி

திவிநெகும திட்டத்தின் ஆறாம் கட்டப் பணிகள் நேற்று வவுனியா வடக்கு புளியங்குளம் தெற்கு கிராம அலுவலர் பிரிவில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

வவுனியா வடக்கு பிரதேச செயலர் க.பரந்தாமனின் வழிகாட்டலில் புளியங்குளம் தெற்கு கிராம அலுவலர் பிரிவில் நடை

(19) ஆம் பக்கம் பார்க்க...

## யாழ்தேவி இயந்திரம் தடம்புரண்டது

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி நேற்றுக் காலை வந்த தபால் புகையிரதத்தின் இயந்திரம் யாழ்.ரயில் நிலையத்தில் தடம்புரண்டுள்ளது.

காலை வந்த ரயிலின் இயந்திரத்தை மற்றைய தண்டவாளத்திற்கு மாற்றுவதற்கு முற்படுகையிலேயே இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது. விலகிய இயந்திரப் பெட்டியை மீண்டும் தண்டவாளத்தில் ஏற்றி வைக்கும் பணி நேற்று மாலை வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டு ரயில சேவை சீராக்கப்பட்டுள்ளது.

## தேசத்தின் மகுடம் கண்காட்சி வடக்கில் நடாத்த முயற்சி

### அமைச்சர் டக்ளஸ் தகவல்

வடமாகாணத்தில் தேசத்தின் மகுடம் கண்காட்சியை (டயட்ட கிருல்ல) 2016 இல் நடத்த வேண்டும் என நான் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் கோரிக்கை விடுத்துள்ளேன்.

இவ்வாறு தேசத்தின் மகுடம் கண்காட்சி இடம்பெறுமாயின் யாழ்.மாவட்டம் உள்ளிட்ட வடக்கு மாகாணம் பெரு வளர்ச்சி, அபிவிருத்தியை அடையும்.

இவ்வாறு பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நேற்றுத் தெரிவித்தார்.

பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரியில் வாழ்வின் எழுச்சி தேசிய நிகழ்ச்சி திட்டத்தின் மாவட்ட மட்ட நிகழ்வை நேற்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆரம்

(19) ஆம் பக்கம் பார்க்க...

## வடக்கு மாகாண சபையில் ‘தில்லுமுல்லு’ பேரவைத் தலைவர் மீது கண்டனம்

(யாழ்ப்பாணம்)

சர்வாதிகாரமாகச் செயற்பட்டு வருகின்றார் பேரவைத் தலைவர் சி.வி.கே. சிவஞானம். இதற்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமைப்பீடமும் ஒத்துழைக்கிறதா அல்லது ஒத்தூதுகிறதா? இவ்வாறு செயற்பட்டால் நாம் பதவிகளைத் துறக்க வேண்டி ஏற்படும் என எச்சரித்தார் வடமாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம்.

யாழ். ஊடக அமையத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு சாடினார்.

எனது பிரேரணையை நிகழ்ச்சி நிரலில் சேர்க்காது இருப்பது எனது மனித உரிமையை மீறும் செயல்.

இதைத்தான் இன்று அவைத் தலைவர் செய்கின்றார். இது சர்வாதிகாரச் செயற்பாடு.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒரு சிலரின் நிகழ்ச்சி நிரலுக்காக எனது பிரேரணையை நிறைவேற்றத் தடை செய்வது மிகத்தவறு.

அப்படியானால் தமிழ் மக்களுக்கான இனப்பிரச்சினைத் தீர்வில் நாளை நீங்கள் என்னென்ன தில்லுமுல்லு செய்யப்போகிறீர்களோ தெரியாது. இது தமிழ் மக்களுக்கு எழுந்துள்ள சந்தேகம்.

இதில் ஒளிவு மறைவு கிடையாது. பகிரங்கமாகச் சொல்கிறேன்.

ஒரு இலட்சத்துக்கு மேற்பட்ட அப்பாவி மக்கள் உயிர்த்தியாகம் மற்றும் போராட்ட வீரர்களின் உயிர்த்தியாகத்தை சொச்சைப் படுத்தும் நிலை தொடர்ந்து கொண்டே செல்கின்றது.

தொடர்ந்து இவர்கள் சொல்லிக்கொண்டே இருக்கிறார்கள். முதலமைச்சர் கூட ஓமந்தையில் சொல்லியிருக்கிறார். இதற்கு

(19) ஆம் பக்கம் பார்க்க...

## முதலமைச்சர் விக்கி விரைவில் இந்தியாவுக்கு

வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் எதிர் வரும் 5 ஆம் திகதி இந்தியாவுக்குச் செல்லவுள்ளார். இந்தியாவில் ஒருவார காலம் தங்கியிருக்கும் அவர் அங்கு அரசியல் பிரமுகர்கள் பலரைச் சந்திப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை தமிழ்நாட்டில் நடைபெறும் நிகழ்வொன்றிலும் முதலமைச்சர் நினைவுப்பேருரை ஒன்றை ஆற்றுவார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கன மழை காரணமாக 300 குடும்பங்கள் பாதிப்பு

### யாழ். அரச அதிபர் தகவல்

யாழ்.மாவட்டத்தில் கடந்த மூன்று தினங்களாக பெய்த கனமழை காரணமாக 300 வரையான குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்துள்ளார்.

யாழ்.பிரதேச செயலக எல்லைக்குட்பட்ட நாவாந்துறை பிரதேசத்தில் உள்ள 300 குடும்பங்கள் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டுள்ளனர். அப்பகுதியில் வெள்ள நீர் அதிகளவில் தேங்கியுள்ளமையினால் சுகாதார பிரச்சினைகள் மற்றும் குடிநீர் பிரச்சினைகள் உருவாகியுள்ளன.

இந்நிலையில் அப்பகுதியில் தேங்கியிருக்கும் வெள்ள நீரை

(19) ஆம் பக்கம் பார்க்க...



# வலி.மேற்கில் பதவியிழந்த உபதவிசாளர் மீளவும் சபைக்கு உறுப்பினராவார்

## வர்த்தமான பத்திரிகையில் வெளியீடு

(விலி.மேற்கு)

வலி.மேற்கு பிரதேச சபையில் தொடர்ச்சியாக மூன்று மாதங்களுக்கு மேல் கூட்டத்திற்கு சமுகமளிக்காத நிலையில் பதவியிழந்த உப தவிசாளர் மீண்டும் வர்த்தமானப் பத்திரிகையில் வெளியானதையடுத்து உறுப்பினர் பதவியில் மீள இணைத்துக்கொள்ளபபடவுள்ளார்.

வலி.மேற்கு பிரதேச சபையில் உபதவிசாளராக பதவி வகித்தவர் நவரத்தினம் சிவரஞ்சன். மேற்படி நவரத்தினம் சிவரஞ்சன் மூன்று மாதங்களுக்கு மேல் சமுகமளிக்காத நிலையில் அவரது பதவி வறிதாகியது.

இந்த நிலையில் சபையில் ஆளும் . கட்சி, எதிர்க்கட்சி இணைந்தவகையில் வாக்கெடுப்பு அடிப்படையில் மூன்றாவது நிலையில் உள்ள உறுப்பினர் த.நடனேந்திரனை உபதவிசாளராக நியமிப்பதற்கு துரித நடவடிக்கை எடுக்கப்பட்டது.

எனினும் சபையின் உயர் தலைமைப் பீடம் இதனை விரும்பாத நிலையில் மீண்டும் தமிழரசுக்கட்சியின் முன்னாள் செயலாளர் நாயகம் மாவை சேனாதிராஜாவின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டதையடுத்து மீளவும் பதவியழந்த சிவரஞ்சன் சபைக்கு வரவுள்ளதாக தெரியவருகிறது.

இதற்கான 15.10.2014 ஆம் திகதிய வர்த்தமான பத்திரிகையின் மூலம் வலி.மேற்கு பிரதேச சபையினர் தெரிவத்தாட்சி அலுவலர் பொ.குகநாதன் அறிவித்துள்ளார்.

இதேவேளை தமிழரசுக் கட்சியின் செயலாளர் நாயகம் பதவியிழந்து சென்ற ஒருவரை வலிந்து இழுத்து மீள சபைக்கு கொண்டுவந்தால் இன்னொரு உறுப்பினருக்கு கிடைக்கவிருந்த உபதவிசாளர் பதவி இல்லாது செய்துவிட்டதாக ஏனைய கூட்டமைப்பு சபை உறுப்பினர்கள் தமிழரசுக்கட்சியின் தலைவர் மீது பாய்ந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

உறுப்பினர் த.நடனேந்திரன் கூட்டணி கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர் என்பது குறிப்பிடத்தக்கது.

# கிளி.மாணவி கிரிசாந்தி தேசிய ரீதியில் 3 ஆம் இடம்



(கிளிநொச்சி)

கிளிநொச்சி இந்துக்கல்லூரி மாணவி செல்வி செல்வநாயகம் கிரிசாந்தி உலக குடியிருப்பு தின கட்டுரைப்போட்டியில் 3 ஆம் இடத்தைப் பெற்றுள்ளார்.

தேசிய வீடமைப்பு அதிகார சபையால் நாடாளாவிய ரீதியில் தமிழ் மொழி மூலம் நடத்தப்பட்ட மேற்படி போட்டியில் இம் மாணவி சாதனை படைத்துள்ளார்.

இப்போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வு கொழும்பு சுகததாச விளையாட்டரங்கில் நடைபெற்றது.

# 6 மாத காலமாக குடிநீரில்லை; நவாலி வடக்கு மக்கள் அலைச்சல்

(மானிப்பாய்)

நவாலி வடக்கில் கடந்த ஆறுமாத காலத்திற்கு மேலாக குடிதண்ணீர் வழங்கப்படாத நீர்த்தாங்கிக்கு குழாய் மூலம் வரும் குடி நீரை வழங்க வேண்டும்.

இவ்வாறு யாழ்.தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபைக்கு நவாலி ஹேமலதா ஞாபகார்த்த சனசமூக நிலையம் அவசர வேண்டுகோளை விடுத்துள்ளது. சுன்னாகத்திலிருந்து குழாய் மூலம் வரும் குடி நீரையே இவ்வாறு கேட்டுள்ளனர்.

# தேசிய ரீதியிலான கட்டுரைப்போட்டி மாணவி யசோதாவுக்கு வெள்ளிப்பதக்கம்

கொழும்பு பல்கலைக்கழக இந்து மன்றத்தினால் நடாத்தப்பட்ட அகில இலங்கை கட்டுரைப்போடடியில் சுழிபுரம் விக்ரோறியாக்கல்லூரி தரம் 11 மாணவி கணேசநாயகம் யசோதா இரண்டாம் இடம்பெற்று வெள்ளிப் பதக்கத்தினைப் பெற்று கல்லூரிக்கு பெருமை சேர்த்துள்ளார்.

கொழும்பு பல்கலைக்கழக இந்து மன்றத்தினால் நடாத்தப்பட்ட அகில இலங்கை ரீதியிலான மத்திய பிரிவு போட்டியிலேயே சுழிபுரம் விக்ரோரியாக் கல்லூரி மாணவிக்கு நேற்று முன்தினம் கொழும்பு இராமகிருஷ்ண மண்டபத்தில் வைத்து வெள்ளிப்பதக்கமும், தேசிய சான்றிதழும் வழங்கி கௌரவிக்கப்புட்டுள்ளார்.

நாடு தழுவீய ரீதியில் இந்து சமயமும், கலைகளின் வளர்ச்சியும் என்னும் தலைப்பில் எழுதிய சிறப்புக் கட்டுரைக்கே வெள்ளிப்பதக்கம் கிடைத்துள்ளது.

மேற்படி மாணவி செல்வி கணேசநாயகம் யசோதா ஏற்கனவே மாகாண மட்டத்தில் இடம் பெற்ற ஆங்கில ரீதியிலான போட்டிகளில் சிறப்புப் பரிசிலும்,. விருதுகளும் பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# தீபாவளி தினத்தன்று தடகள விளையாட்டுக்கள்

(கோப்பாய்)

தீபாவளி தினத்தை முன்னிட்டு கோப்பாய் கண்ணகையம்மன் கோவிலடி சனசமூக நிலையமும், ஸ்ரார் விளையாட்டுக்கழகமும் இணைந்து நடாத்தும் தடகள விளையாட்டுப் போட்டி நாளை புதன்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு கோப்பாய் ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தில் விளையாட்டுக் கழகத்தலைவர் ப.ருஷாந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது.

விளையாட்டுப்போட்டிக்கு பிரதம விருந்தினராக யாழ்.கல்வியற் கல்லூரி பீடாதிபதி எஸ்.அமிர்தலிங்கமும், சிறப்பு விருந்தினராக யாழ்.மாவட்ட விளையாட்டு அதிகாரி எம்.ஆர். மோகனதாஸ், கௌரவ விருந்தினர்களாக இலங்கை செஞ்சிலுவைச்சங்க வலி.கிழக்குப் பிரிவின் செயலாளர் இ.மயில்வாகனம், முன்னாள் ஸ்ரார் விளையாட்டுக்கழக உறுப் பினர் கோ.சடகோபன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

காலை 6.00 மணிக்கு ஐந்துமையில் மரதன் ஓட்டப்போட்டியும் நடைபெறவுள்ளன. (08)


# கொட்டும் மழையிலும் தீபாவளி வியாபாரம்



(அச்சுவேலி)

தீபாவளிக் கொண்டாட்ட வியாபாரம் களைகட்டியுள்ளது. கொட்டும் மழையிலும் வியாபாரம் சூடு பிடித்துள்ளது. நாளை தீபாவளிப் பண்டிகை இடம்பெறுவதை முன்னிட்டு நேற்று புடவை வியாபாரிகள் மற்றும் அலங்காரப் பொருள் வியாபாரிகள் வியாபாரத்தில் ஈடுபடுவதைக் காணமுடிந்தது.

பொதுமக்கள் பல்வேறுபட்ட உடுபுடவைகள் மற்றும் ஏனைய பொருட்களை கொள்வனவு செய்வதில் ஆர்வம் காட்டி வருகின்றனர். வியாபாரிகள் தமது பொருட்களை விற்பதற்கு நுகர்வோரை கூவிக் கூவி அழைப்பதனைக் காணமுடிகின்றது. (25,இ,85)



பிரமாண அடிப்படையிலான மூலதன நிதி ஒதுக்கீட்டில் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்திற்கு கொள்வனவு செய்யப்பட்ட கணனி தொகுதிகள், பக்ஸ் இயந்திரம் என்பனவற்றை அதிபர் எஸ்.சேதுராஜாவிடம் வடமாகாண சபை உறுப்பினர் எஸ்.சிவயோகன் கையளிப்பதனைக் காணலாம். (01)

# சோ.ப. தலைமையில் தீபாவளி

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி சைவ வித்தியாவிருத்திச் சங்கத்தின் தீபாவளி திருநாள் விழா நாளை புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு சங்க மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

சங்கத்தலைவர் சோ.பத்மநாதன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக 'ஆறுதல்' நிறுவன இயக்குநர் சுந்தரம் டிவகலாலா, சிறப்பு விருந்தினராக பருத்தித்துறை பிரதேச செயலர் த.ஜெயசீலன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (33)


சிறு விளம்பரம்

டயான பிளாஸ்ரிக்

நீசைக்கிள் (மீள் சுழற்சி)

அனைத்து வகையான கழிவு பிளாஸ்ரிக், பொலித்தீன் என்பன விலைக்கு வாங்கப்படும். ரூபா 30 தொடக்கம் ரூபா 70 வரை.

இல.108 பலாலி வீதி யாழ்ப்பாணம்.
(இலுப்பையடி சந்தி அருகாமை)

021 222 8680,
077 592 5088.

(C/3800)





# தமிழ் விழா இன்று

(யாழ்ப்பாணம்)

குருநகர் சென்ஜேம்ஸ் மகாவித்தியாலய முத்தமிழ் விழா இன்று முற்பகல் 10 மணிக்கு றேமரன் அரங்கில் செல்வன் ல.லோயஸ் தலைமையில் இடம்பெறும்.

பிரதம விருந்தினராக வடமாகாண உதவிக்கல்விப் பணிப்பாளர் திருமதி கௌ.முகுந்தன், சென்.ஜேம்ஸ் கல்வி முன்னேற்றக் கழகச் செயலாளர் கி.மா.நெல்சன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

தமிழ் விழா சிறப்புற நடாத்த சென்.ஜேம்ஸ் பழைய மாணவர் சங்கம் (பிரான்ஸ்) அனுசரணை வழங்கியுள்ளது. (27)

# 753,811 இலக்க பேருந்து சேவையை நவாலி வரை நடாத்த கோரிக்கை

(சுன்னாகம்)

பருத்தித்துறை மற்றும் கொடிகாமம் ஆகிய பகுதிகளிலிருந்து மானிப்பாய் வரை நடைபெறும் 753 மற்றும் 811ஆம் இலக்க பேருந்துகளின் சேவையினை நவாலி வரை நடாத்துமாறு பொதுமக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

குறித்த பேருந்துகள் மானிப்பாய் வரையில் நடைபெறுவதால் கொடிகாமம் மற்றும் பருத்தித்துறை செல்லும் நவாலி மற்றும் அராலி, வட்டுக்கோட்டை மக்கள் நவாலி வரை நடந்து செல்ல வேண்டியுள்ளது.

இந்நிலையில் குறித்த பேருந்து சேவைகளை நவாலி வரை நடாத்துவதன் மூலம் பல பிரதேச பொதுமக்கள் நன்மை அடைவார்கள் என சுட்டிக்காட்டப்படுகின்றது.

எனவே, இது தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுத்து சேவையை நடாத்த ஆவன செய்யுமாறு பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (66)

# தொழில் முயற்சியாளர்களுக்கு முல்லையில் விசேட பயிற்சி

(துணுக்காய்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய் பிரதேச செயலகத்திற்குற்பட்ட இரசாயன உற்பத்தி தொழில் முயற்சியாளர்களுக்கான நான்கு நாள் விசேட பயிற்சி நெறி நேற்றுடன் நிறைவு பெற்றுள்ளதாக இலங்கை கைத்தொழில் அபிவிருத்தி சபையின் முல்லைத்தீவு மாவட்ட உதவிப் பணிப்பாளர் எஸ்.ரஜனிகாந்த் தெரிவித்தார்.

துணுக்காய் பிரதேச செயலாளர் பிரிவில் இரசாயன உற்பத்திப் பொருட்களை உற்பத்தி செய்யும் முயற்சியாளர்களுக்கு மெழுகுவர்த்தி, ஊதுபத்தி, சவர்க்காரம், கற்பூரம் உள்ளிட்ட பொருட்களின் உற்பத்தி, பாதுகாப்பு, சந்தை வாய்ப்பு என்பனவற்றுக்கான பயிற்சிகளும், ஆலோசனைகளும் இதன்போது வழங்கப்பட்டன.

இப்பயிற்சி நெறி கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி நான்கு நாட்கள் நடைபெற்றது. துணுக்காய் பிரதேச செயலகத்தில் நடைபெற்ற இப்பயிற்சி நெறியில் இருபதுக்கும் அதிகமான தொழில் முயற்சியாளர்கள் கலந்து கொண்டனர் என அவர் மேலும் தெரிவித்தார்.

# கற்கை விடுமுறை

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக 10ஆவது பிரிவு கல்வி முதுமாணி மாணவர்களுக்கான (M.Ed) கற்கை விடுமுறை எதிர்வரும் டிசம்பர் 1ஆம் திகதி வரை வழங்கப்பட்டுள்ளது.

வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சி. சத்தியசீலன் இதற்கான துரித நடவடிக்கையை எடுத்துள்ளார். கல்வி முதுமாணி மாணவர்கள் தமது கற்கை விடுமுறையை அதிகரித்து வழங்குமாறு யாழ். பல்கலைக்கழக உயர்மட்ட பீடாதிபதிக்கு ஊடாக விண்ணப்பித்த கோரிக்கையை அடுத்தே கல்வி முதுமாணி ஆசிரிய மாணவர்களுக்கான கற்கை விடுமுறை மேலும் அதிகரித்து வழங்கப்படவுள்ளது.

இதற்கான கடிதம் அந்தந்த பாடசாலைகள் மற்றும் வலயக் கல்வி அலுவலகங்களுக்கும் அனுப்பி வைக்கப்படும் என வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

# துவிச்சக்கர வண்டி அன்பளிப்பு

(வேலணை)

வேலணை மத்திய மகாவித்தியாலயத்தில் கடந்த வருடம் க.பொ.த. (சா/த) பரீட்சையில் 9 பாடங்களிலும் அதிதிறமைச் சித்திகளைப் பெற்ற செல்வி கஸ்மி லக்சிகா என்ற மாணவிக்கு வேலணை முச்சக்கரவண்டி சங்கத்தினரால் கல்வி நடவடிக்கைக்காக துவிச்சக்கர வண்டி ஒன்று வழங்கப்பட்டுள்ளது.

வேலணை கிழக்கு 2ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த மேற்படி மாணவிக்கே இவ்வாறு துவிச்சக்கர வண்டி அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளதுடன் அதனை வேலணை பிரதேச சபை தவிசாளர் சி. சிவராசா மாணவியிடம் வழங்கி வைத்தார். (05)



எழுவைதீவு மணிவாசகர் சனசமூக நிலையத்தினரால் அறிவக வளாகத்தில் அண்மையில் பயன்தரு மரங்கள் நாட்டப்பட்டதனைக் காணலாம். (48)

# தமிழற்ற அரசியல் பிரச்சினையை எப்பிடித் தீர்க்கலாம் –12

வடபுலத்தான் எழுதுவது...

ஏகப்பிரதிநிதிகள் நாங்கள் எண்ட கனவோடயும் கருத்தோடயும் இருந்தபடியால்தான் பெரிய பலமான அமைப்பாக இருந்த புலிகளே தோற்றுப்போனவை.

ஏகப்பிரதிநிதிகள் எண்டிறது, ஜனநாயக அடிப்படைக்கு முரணான ஒரு சங்கதி.

உலகம் இண்டைக்குப் பன்மைத்துவப் பங்கேற்பு, பன்மைத்துவச் சிந்தனை எண்ட வகையில மாறியிருக்கு. ஒற்றைப்படையான விசயமெல்லாம் மலையேறின சங்கதிகளாப் போச்சுது.

ஆர் ஏகப்பிரதிநிதித்துவம் எண்டு கதைக்கினமோ அவையை ஒரு மாதிரி, ஜனநாயகத்துக்கு விரோதமாகப் பாக்கிற ஒரு பார்வை எல்லா இடத்திலயும் வளர்ந்து கொண்டிருக்கு.

ஆனால், தமிழர்கள்தான் இன்னும் பழைய – மேட்டுக்குடி மனப்பாங்கோட – பிரபுத்துவச் சிந்தனையோட இருக்கினம்.

இதில இன்னொரு வேடிக்கை என்னெண்டால்... இண்டைக்கு உலகம் முழுக்கப் பரந்து வாழுகிற தமிழாக்கள், தாங்கள் வாழுகிற நாடுகளில எல்லாம் பல சமூகங்களும் எப்பிடிப் பன்மைத்துவத்தை ஏற்றுக்கொண்டு வாழுகினம் எண்டதைப்பற்றிச் சிந்திக்கிறேல்ல.

அங்கையெல்லாம் பன்மைத்துவத்துக்கு இடமில்லையெண்டால், இவைக்கும் அங்கை இடமில்லாமல் போயிருக்கும்.

ஆனால், அங்கை இனவாதமில்லை. பிரச்சினை இல்லை. ஒடுக்குமுறை இல்லை எண்டு ஒரு பில்டாக்கதையை இவை விடலாம்.

எந்த நாட்டில இனவாதமும் சுரண்டலும் ஒடுக்குமுறையும் இல்லை?

ஆனானப்பட்ட அமெரிக்காவில இருந்து அவுஸ்ரேலியா வரையில ஒடுக்குமுறை எல்லா இடத்திலயும் இருக்கு.

அண்மையில கூட அமெரிக்காவில் கறுப்பினச் சிறுமி ஒருத்தியைத் தாக்கியதால பெரிய பிரச்சினை வந்ததெண்டு உலகம் முழுக்கப்பேசப்பட்டுதே...

இப்பிடித்தான் கனடா, அவுஸ்ரேலியா போன்ற நாடுகளில இருக்கிற பூர்வகுடிகள் மிக மோசமாகத்தான் நடத்தப்படுகினம்.

அங்கே இதை மென்நிலையில் செய்கிறார்கள். இஞ்ச வன்முறையில செய்கிறார்கள். அவ்வளவுதான் வேறுபாடு.

அங்கே பன்மைத்துவத்துக்கு இடமளிக்கிற ஒரு பண்பு இருக்கிறபடியால இந்த ஒடுக்குமுறை ஒரு பெரிய பிரச்சினையாத் தோன்றேல்ல. அவ்வளவுதான்.

ஆகவே இலங்கையில பல்லினச் சமூகங்கள் வாழவேண்டிய ஒரு சூழல் எப்பவும் இருக்கிறதால நாங்கள் விரும்பினால் என்ன விரும்பாமல் விட்டால் என்ன, பன்மைத்துவத்தை ஏற்றுத்தான் ஆகவேணும்.

இது தமிழாக்களுக்கு மட்டுமில்லை. சிங்கள ஆட்களுக்குந்தான் பொருந்தும். அவர்களிலயும் இதை ஏற்றுக்கொள்ள விரும்பாத ஒரு பழைய குழு இருக்கு.

இந்த நாடு சிங்களவர்களுக்கு மட்டும்தான் சொந்தமான நாடு. இது பௌத்த நாடு. மற்றவர்கள் சிங்களப் பௌத்தர்களோட அனுசரித்துத்தான் போகவேணும் எண்டு சொல்லிக் கொண்டிருக்கிற இந்தக் குழு, இந்த நாட்டை ஒரு நாளும் உருப்பட விடாது.

இதுவும் ஒரு ஏகத்துவப் பித்து நிலைதான்.

பெரிய பலத்தோட இருந்து கலக்கிக் கொண்டிருந்த புலியான புலிகளே ஏகப்பிரதிநிதித்துவக் காய்ச்சலால் அழிஞ்சு போனதை ஒருதரும்தான் படிப்பினையாகக் கொள்ளேல்ல.

ஒரு காலம் புலிகளின் ஏகப்பிரநிதித்துவ நிலைப்பாட்டால இந்தச் சம்பந்தன், செல்வம் அடைக்கலநாதன், சுரேஸ் பிரேமச்சந்திரன், சிவாஜிலிங்கம், சித்தார்த்தன் எல்லாம் நல்லாப் பாதிக்கப்பட்டிருந்தவை.

அப்ப புலிகளின் ஏகப்பிரநிதித்துவ நிலைப்பாட்டை ஏற்றுக்கொள்ள முடியாது எண்டு முழங்கினோர் சூனாப்பினா எண்ட மண்டைக்காய் சுரேஸ் பிரேமச்சந்திரன்.

அப்ப அப்பிடி நிண்டவர் இப்ப மாறி நிக்கிறார்.

இப்ப தங்களைத் தவிர வேற ஆருக்கும் இடமில்லை எண்டு நினைக்கிறார்.

இனப்பிரச்சினையைத் தீர்க்கிறது, அதிகாரத்தைப் பகிர்கிறது, தீர்வைக் காணுகிறது எண்டது ஒரு பெரிய செயல்பாடு.

அதைத் தனியே இரண்டு தரப்பு மட்டும் எதிரும் புதிருமாக இருந்து கொண்டு பேசித் தீர்க்கேலாது.

அப்பிடிப் பேசித்தீர்க்க முடியாது எண்டதை வரலாறும் கடந்த கால அனுபவமும் எங்களுக்கு சொல்லிக் கொண்டிருக்கு.

ஆனால். விரும்பியோ விரும்பாவிட்டாலோ இலங்கை அரசாங்கத்தோடதான் பேசித்தீர்க்க வேணும் எண்டதையும் வரலாறு சொல்லுது.

இலங்கை அரசாங்கத்தோட மட்டும் பேசி இதுக்குத் தீர்வைக் கான முடியாது எண்ட உண்மையும் தெளிவாயிருக்கு.

சர்வதேச மத்தியஸ்தம் கூட தனியே வெற்றியைத் தர முடியாது எண்டதும் கடந்தகால உண்மை.

அப்பிடி வெளியாற்ற மத்தியஸ்தம் வெற்றியைத் தரும் எண்டால், இந்தியாவின்ரை மத்தியஸ்தமும் நோர்வேயின்ரை மத்தியஸ்தமும் ஏன் பிழைச்சது?

பேச்சுகள் வெற்றியைத் தரோணும் எண்டால், நாங்கள் பன்மைத்துவத்தை ஏற்றுக்கொண்டு எல்லாருக்கும் இடமளிக்கும் மனப்பாங்கோட எல்லாத் தரப்போடயும் உறவை வைச்சுக்கொண்டுதான் பேச வேணும்.

இதுதான் தீர்வுக்கான முதற்படி.

உன் நல்ல செயல்களின் மூலம் பிறருக்கு வழி காட்டியாக இரு. - இங்கர்சால்

தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## மாகாண சபையும் மக்களும்!

வடக்கு மாகாண சபையின் ஒரு வருட சாதனை என்று சொல்லிக்கொள்ள ஒன்றுமேயில்லை என்பது வடக்கு மாகாண சபையைப் பொறுப்பேற்று நடத்திக் கொண்டிருப்பவர்களுக்கும் தெரிந்திருக்கிறது. அவர்களது கட்சிப் பத்திரிகையும் அதை ஒப்புக்கொண்டிருக்கிறது.

ஆனாலும் மாகாண சபை ஒன்றும் சும்மா இருந்துவிடவுமில்லை. சிலபல சுவாரசியச் சாதனைகளைச் செய்துமிருக்கிறது.

ஜனாதிபதிக்கும் மத்திய அமைச்சுக்களுக்கும் கடிதங்கள் மேல் கடிதங்கள் எழுதி சொகுசு வாகனங்களைப் பெற்றுக் கொண்டது, முதலமைச்சருக்கு மூன்று லட்ச ரூபா வாடகையில் வீடு பிடித்தது முதல் மற்ற மற்ற மாகாண அமைச்சர்களுக்கு உறுப்பினர்களுக்கு வேண்டிய வசதிகளையும் விடாமல் முயற்சித்துப் பெற்றுக்கொண்டது....

உறுப்பினர் அனந்தி தனக்கு வாகனப் பெற்றோலுக்கு நிதி ஒதுக்கவில்லை என்று கோவித்துக்கொண்டு ஒருநாள் சபைக்கு சைக்கிளில் வந்தது, மறக்காமல் போட்டோ பிடித்துப் ப்த்திரிகையில் போட்டுக்கொண்டது....

மத்திய அரசாங்கத்தின் கீழுள்ள மாகாண சபையில் இருந்து கொண்டு மத்திய அரசைக் கண்டித்துச் சர்வதேசத்திற்கு விண்ணப்பித்துத் தீர்மானங்கள் நிறைவேற்றிக் கொண்டது....

இவற்றுக்கெல்லாம் அப்பால் சிவாஜியர் ஐங்கரத்தார் கஜதீபன் சயந்தன் சர்வேஸ் மற்றும் சக்கட்டுகளின் சிம்மக் கர்ஜனைகளால், இங்கே நடந்து கொண்டிருப்பது வெறும் மாகாண சபை மட்டுமல்ல, மத்திய அரசை நடுநடுங்க வைக்கும் வார்த்தைகளால் தனியலகொன்றை நோக்கிப் பயணித்துக்கொண்டிருக்கும் புரட்சியுமாகும் என்று உலகெலாமுள தமிழ் உள்ளங்களைக் குளிர வைத்த சாதனை...

இன்னொருபுறம், மாகாண சூழலியல் விவசாய அமைச்சரின் சாதனைகளும் சாமானியமானதல்ல. பாத்தீனியம் பிடுங்க ஒதுக்கிய காசுக்கு அங்கங்கே சிற்சில வேடிக்கை காட்டிவிட்டுப் பிறகு பாத்தீனியத்தை வளரவிட்டுக் கொண்டிருப்பது, சிறீதரனோடு சேர்ந்து யாழ்ப்பாணத்துக்கு இரணைமடுக் குடிநீர் வரவிடாமல் தடுத்தது....

பழரசம், நிலத்தடிநீர் சேமிப்பு, பிளாஸ்ரிக் கழிவு சுழற்சி, மண் காப்பு என்று ஆவேசமாக அவ்வப்போது அறிவிக்கும் திட்டங்கள் ஏதாவது நடக்குதா இல்லையா என்று யாரும் கண்டுபிடித்து விட முடியாதவாறு மர்மத்தைப் பேணிவருவது....

வடக்கில் இராணுவத்தினரின் பிரசன்னம் மட்டும் பிரச்சினையல்ல அவர்கள் எங்கள் பிரதேசத்திலேயே தங்கள் மலங்களைக் கழித்துக் கொண்டிருப்பதும் பிரச்சினைதான் என்ற புதிய சுற்றுச்சூழல் தீங்கு ஒன்றை உலகுக்கு வெளிப்படுத்திய இன மேதைமையையும் தமிழுணர்வுள்ள யாரும் பாராட்டாமலிருக்க முடியாது.

மாகாண கல்வியமைச்சரின் சாதனைகள் சிலவற்றையும் சொல்லி இந்த ஒருவருட சாதனைப் பட்டியலை முடிக்கலாம் என்றால், இப்போது அவர் என்ன செய்துகொண்டிருக்கிறார் என்றே தெரியவில்லை. அவர் இப்போதும் பிஸியாகத்தான் இருக்கிறார் அவரது “கெஸ்ட் ஹவுஸ் பார்ட்டிகளில்” என்று சொல்லப்படுவதை நம்பலாமா தெரியவில்லை.

அவரது தேர்தல் வெற்றிக்காக “உழைத்த” வாத்திமாருக்கெல்லாம் அவரவர்கள் விரும்பிய இடங்களுக்கு மாற்றல் எடுத்துக் கொடுத்து முடித்துவிட்ட பிறகு ஓய்வு எடுப்பதைத் தவிர அவர் வேறு என்னதான் செய்துகொண்டிருப்பது?

இந்த மாகாண மந்திரிப் பதவியை வைத்துக்கொண்டு என்னத்தைத்தான் செய்யலாம்? ஏதோ மத்திய அரசு தருகிற சம்பளத்தையும் வாகனத்தையும் எடுத்துக் கொள்ளலாம்... மற்றும்படி மக்களுக்குச் செய்ய வேண்டும் என்று நினைத்தாலே மத்திய அரசு ஒன்றுஞ் செய்ய விடுகுதில்லையே...

ம்.. இப்படியே மற்ற நாலு வருடத்தையும் ஓட்டிவிடுவார்கள். மாகாண அரசைச் செயல்பட விடாத மத்திய அரசைப் பழிவாங்க மக்கள் திரண்டு வாக்களிக்காமலா விடப்போகிறார்கள்?

- ஆசிரியர்

# புலிகள் மீதான தடைநீக்கம்
# பின்னணியில் எதிர்க்கட்சித் தலைவர்

### - அமைச்சர் கெஹலிய தெரிவிப்பு -

ஐரோப்பிய ஒன்றியம் விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்கிய பின்னணியில் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்கவுக்கு நெருங்கிய தொடர்புகள் இருக்கக் கூடுமென்ற, நியாயமான சந்தேகம் எழுந்திருப்பதாக ஊடக தகவல் துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்தார்.

டயஸ்போராக்கள் தங்களது தனிநாடு, சுயநிர்ணயம் ஆகிய கனவுகளை நனவாக்க வேண்டுமென்பதற்காக ஜனாதிபதி கதிரையில் எதிர்க் கட்சித் தலைவரான ரணில் விக்ரமசிங்கவை அமர்த்த வேண்டுமென்பதில் குறியாகவுள்ளனர்.

அரசியல் இலாப நோக்கில் எதிர்க்கட்சித் தலைவரும் அடிக்கடி டயஸ்போராக்களை இரகசியமாகவும் வெளிப்படையாகவும் சந்தித்து வருகின்றார்.

எனவே இவ்வாறானதொரு சூழ்நிலையில் டயஸ் போராக்களினதும் தமிழ் மக்களினதும் மனங்களை வெல்வதற்காக விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்க ஐரோப்பிய ஒன்றியத்தில் எதிர்க்கட்சித் தலைவர் ஏதேனும் பங்களிப்பு செய்திருக்கலாமென்றே ஊகிக்கத் தோன்றுகின்றது என்றும் அமைச்சர் கெஹலிய தெரிவித்தார்.

எதிர்க் கட்சித் தலைவர் ரணில விக்ரமசிங்க ஐரோப்பாவுக்கான விஜயத்தினை மேற்கொண்டு நாடு திரும்பியிருந்த நிலையிலேயே புலிகள் மீதான தடை நீக்கப்பட்டதாக அறிவிப்பு வெளிவந்தது. இதற்கு முன்னரும் டயஸ்போராக்களை சந்திப்பதற்காக ரணில் பல தடவைகள் இங்கிலாந்து மற்றும் மலேஷியாவுக்குச் சென்று வந்துள்ளார்.

ஐ.தே.க.வுக்கு மட்டுமன்றி பொதுவாகவே அனைத்து எதிர்க் கட்சியினரதும் டயஸ் போராக்களினதும் நீண்டநாள் கனவுகளில் இதுவும் ஒன்றாகுமெனவும் அமைச்சர் கூறினார்.

உண்மையில் ஐரோப்பிய ஒன்றியம் இதுவரையில் புலிகள் மீது விதித்திருந்த தடை வெறும் வாய் வார்த்தையாகவே இருந்தது. அங்கு வாழும் டயஸ் போராக்கள் முழு சுதந்திரத்துடன தமது செயற்பாடுகளை முன்னெடுத்து வந்தனர். ‘தடை’ என்பதற்கு பெறுமதியிருக்கவில்லை, அர்த்தம் இருக்கவில்லை எனினும் நாம் அதனை சரியான முறையில் முகாமைத்துவம் செய்து வந்தோம். தொடர்ந்தும் நாம் விழிப்புணர்வுடன் செயற்படுவோம். எனவே பொதுமக்கள் புத்தி சாதுரியமாக உண்மைத் தன்மையினை புரிந்து செயற்பட வேண்டும் என்றும் அமைச்சர் கேட்டுக் கொண்டார்.

## தேசிய தேர்தல்களை கண்காணிக்க வருகிறது விசேட ஆசியகுழு

(கொழும்பு)

இலங்கையில் எதிர்காலத்தில் நடைபெறவுள்ள தேசிய தேர்தல்களைக் கண்காணிக்க விசேட குழுவொன்றை அனுப்பத் தயார் நிலையில் இருப்பதாக ஆசியாவின் தேர்தல் கண்காணிப்பு வலயம் தெரிவித்துள்ளது.

அதன்படி 30 பேர் கொண்ட குழுவை இலங்கைக்கு அனுப்ப தயார் என ஆசிய தேர்தல் கண்காணிப்பு வலயம் அறிவித்துள்ளது.

இதேவேளை, இதுகுறித்து சர்வதேச தேர்தல் கண்காணிப்பு அமைப்புகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருவதாக ‘பவ்ரல்’ அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.

# ஊர்காவற்றுறையில் 150 இந்திய வீட்டுத்திட்டம்

ஊர்காவற்றுறை பிரதேச செயலகப் பிரிவில் இந்திய வீட்டுத்திட்டத்தின் கீழ் 130 வீடுகளின் கட்டுமானப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக பிரதேச செயலர் அன்ரன் யோகநாதன் எழிலரசி, நேற்று முன்தினம் தெரிவித்தார்.

இந்திய வீட்டுத்திட்டத்தில் 150 வீடுகள் நிர்மாணிக்கும் பணிகள் இவ்வருடம் முதல் ஆரம்பிக்கப்பட்டன.

இவற்றில் 20 வீடுகளுக்கான கட்டுமானபபணிகள் முடிவடைந்து பயனாளிகளிடம் கையளிக்கப்பட்டுள்ளன.

மிகுதி 130 வீடுகளின் கட்டுமானப்பணிகள், இந்த வருட இறுதிக்குள் முடிக்கப்பட்டு பயனாளிகளிடம் கையளிக்கப்படும்.

இதனைத்தவிர, கடந்த 2012 - 2013ஆம் ஆண்டுகளில் வடக்கு, கிழக்கு வீட்டுத்திட்டத்தின் கீழ் [illegible] வீடுகள் நிர்மாணிக்கப்பட்டு பயனாளிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் கூறினார்.

# கூட்டமைப்புக்கு வாக்களித்த எமக்கு இதுவரை எதுவும் கிடைக்கவில்லை

### பாண்டியன்குளம் மக்கள் குமுறல்

எமக்கான அபிவிருத்திக்காகவே நாம் கூட்டமைப்பிற்கு வாக்களித்திருந்த போதிலும் அவர்கள் எமக்கான அபிவிருத்தியில் எவ்விதமான அக்கறையையும் கொண்டிருக்கவில்லை யென முல்லைத்தீவு பாண்டியன்குளம் மக்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் சுட்டிக்காட்டியுள்ளனர்.

மாந்தை கிழக்கு பாண்டியன் குளம் பிரதேச செயலகத்தில் அப்பகுதி மக்களின் தேவைப்பாடுகள் பிரச்சினைகள் தொடர்பில் நேற்று இடம்பெற்ற மக்கள் சந்திப்பின் போதே அவர்கள் இவ்விடயத்தை சுட்டிக்காட்டியுள்ளனர்.

அந்த மக்கள் மேலும் தெரிவிக்கும் போது யுத்தத்தால் பாதிக்கப்பட்ட எமது பகுதிகளை அபிவிருத்தியால் கட்டியெழுப்ப வேண்டுமென்பதுடன் எமது வாழ்வாதாரத்தை மேம்படுத்த வேண்டுமென்பதற்காகவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கு வாக்களித்து நாடாளுமன்றத் தேர்தலிலும் வடக்கு மாகாண சபைத் தேர்தலிலும் வெற்றி பெறச் செய்திருந் தோம்.

அவ்வாறு தேர்தலில் வெற்றி பெற்றவர்கள் இற்றைவரை எமக்கான அபிவிருத்திகளையோ வாழ்வாதார மேம்பாடுகளையோ முன்னெடுக்க முடியாதவர்களாகவும் விரும்பாதவர்களாகவும் இருப்பதைக் கண்டு நாம் மிகவும் மனவேதனையடைகின்றோம்.

பிரதேச சபைக்குட்பட்ட வீதிகள் அனைத்தும் எவ்விதமான புனரமைப்புக்களும் செய்யப்படாத நிலையில் இன்றும் அவ்வாறேதான் காணப்படுகின்றன.

இவ் வீதிகளைத் செப்பனிட்டுத்தருமாறு நாம் கூட்டமைப்பினரின் வசமுள்ள பிரதேச சபைகளுக்குச் சென்று முறைப்பாடுகளைச் செய்த போதிலும் அவர்கள் இவ்விடயத்தில் பாராமுகமாகவே இருக்கின்றனர்.

இதுபோன்று பல்வேறுபட்ட விடயங்களில் மக்களது பிரச்சினைகளில் அவர்கள் அக்கறையற்று இருப்பது எமக்கு மிகுந்த வேதனையை தருகின்றது.

அவர்கள் எமக்கான அபிவிருத்திகளை விடுத்து தமக்கான சொகுசு வாகனங்களையும், உல்லாச வாழ்க்கையையும் அனுபவித்து வரும் நிலையில் நாம் அன்றாடம் அவல வாழ்வையே வாழ்ந்து வருகின்றோம் என்றும் தெரிவித்தனர்.

இதன்போது மக்களது பிரச்சினைகள் மற்றும் தேவைப்பாடுகள் தொடர்பில் கவனம் செலுத்திய அமைச்சர், பாண்டியன்குளம் பிரதேச செயலர் பிரிவில் இந்திய வீடமைப்புத் திட்டத்தின் பிரகாரம் 974 வீடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாகவும் இதனடிப்படையில் முதலாம், இரண்டாம், மூன்றாம் கட்டங்களுக்கான வீடமைப்பு கட்டுமானப் பணிகள் நிறைவடைந்துள்ள நிலையில், நான்காம் கட்டத்துக்காக மேலும் 250 பேருக்கு வீடுகள் கிடைக்கப் பெறவுள்ளதாகவும் தெரிவித்ததுடன், `வடக்கின் வசந்தம் திட்டத்தின் ஊடாக இதுவரை மின்சாரம் கிடைக்கப் பெறாத கிராமங்களுக்கு காலக் கிரமத்தில் மின்சாரம் கிடைப்பதற்கான நடவடிக்கைகள் துறைசார்ந்தோர் ஊடாக முன்னெடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் தெரிவித்தார்.

### யு.எஸ்.எயிட் நிறுவனமும் நொதேன் பாம்ஸூம் இணைந்து

# வடக்கில் புதிய சந்தைகளை உருவாக்கி வேலை வாய்ப்புக்கள் வழங்க ஏற்பாடு



(யாழ்ப்பாணம்)

சர்வதேச அபிவிருத்திக்கான ஐக்கிய அமெரிக்க அமைபபின் பிரதி துணை நிர்வாகி, மன்பிரீத் ஆனந்த் கடந்த 11 ஆம் திகதி வவுனியா மறுகரம்பாளையில் ஒரு புதிய விவசாய செயலாக்க தொழிற்சாலையை திறந்து வைத்தார்.

யு.எஸ்.எயிட் மற்றும் இலங்கையின விவசாயம் சார்ந்த வியாபார அங்கமான நொதேன் பாம்ஸ் (northern farme) இன் அரசு - தனியார் கூட்டு திட்டத்தின் கீழ் இந்த தொழிற்சாலை நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

நவீன இயந்திரங்களை கொண்ட இந்த தொழிற்சாலையின் ஊடாக அப்பகுதிகளில் வசிக்கும் குடும்பங்களின் அன்றாட பாவனைக்குத் தேவையான அரிசி, தினை (குரக்கன்), உளுந்து, மற்றும் எள்ளண்ணெய் போன்றவற்றைப் பெற்றுக்கொடுக்க வாய்ப்பு கிடைப்பதனால் முன்னாள் போர் பகுதிகளில் வாழும ஆயிரக்கணக்கான விவசாயிகளின் மாதாந்த வருமானம் அதிகரிக்கும். அதேவேளை இப்பகுதியைச் சேர்ந்தவர்களுக்கு நிரந்தர வேலை வாய்ப்புக்களை வழங்குவதற்கும் இந்த தொழிற்சாலை துணைபுரியும்.

திறப்பு விழாவில் பேசிய மன்பிரீத் ஆனந்த் "அர்ப்பணிப்புடனும் கடின உழைப்புடனும் இயங்கி வரும் நொதேன் பாம்ஸ் போன்ற சிறிய வியாபாரங்கள் வளர்ச்சி அடைய உதவி வழங்க இயலுகின்றமை குறித்து நாம் மகிழ்ச்சி அடைகின்றோம். இலங்கை மக்களின் அபிவிருத்திக்காக அமெரிக்காவினால் வழங்கப்பட்டுள்ள உதவிகளின் வரலாற்றுப் பட்டியலில் இந்த தொழிற்சாலையும் இடம் பெறுவது குறித்து நாம் பெருமை அடைகின்றோம்" என்று தெரிவித்தார்.

usaid-northern farms கூட்டாக 66 மில்லியன் இலங்கை ரூபாயை இத்திட்டத்திற்கு வழங்குகின்றது. இதில் யு.எஸ்.எயிட் இன் பங்களிப்பு 32.2 மில்லியன் இலங்கை ரூபாவாகும். இதனூடாக செயலாக்க உபகரணங்கள். வாகனங்கள் ஒரு கழிவு நீர் மேலாண்மை அமைப்பு. பொதி பொருட்கள் மற்றும் மூலப் பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டன. இந்த பங்களிப்பின் மூலம் தொழிற்சாலையும், அலுவலக கட்டடங்களும் வாங்கப்பட்டன.

பாம்ஸின் வளர்ச்சியை வலுப்படுத்துவதற்காக நிதி மற்றும் மனித வள மேலாண்மை சந்தை அபிவிருத்தி, உணவு பதப்படுத்துதல், மற்றும் தொழிலசார் பாதுகாப்பிற்கான உதவிகளை வழங்க இலங்கை வர்த்தக சபையுடன் யு.எஸ்.எயிட் ஒத்துழைத்து வருகிறது.

மன்பிரீத் ஆனந்த். கிளிநொச்சியில் மோதல்களினால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு வேலை வாய்ப்புக்களை வழங்கி வரும் சிவனருள் தொழிற்பயிற்சி மற்றும் உற்பத்தி மையத்தின் (svtpc) புதிய தங்கு விடுதி மற்றும் களஞ்சியசாலை கட்டுமான பணிகளுக்காக அடிக்கல் நாட்டினார்.

usaidயும்svtpயும் இணைந்து இதற்காக 36 மில்லியன் ரூபாய் உதவித்தொகையை வழங்கியது. இத்திட்டத்தின் கீழ் பெருமபாலும் பெண்களும் ஊனமுற்றவர்களும் அடங்கிய svtpc இன பணியாளர்களுக்கு தங்குமிட வசதிகளும், மேலும் அரிசி, மாவும், பொடி மிளகாய் மற்றும் மசாலா உற்பத்தி விநியோக திறனை விரிவாக்கும் வாய்ப்பும் கிடைக்கும்.

northern farms svtpc இன் நடவடிக்கைகளுக்கு உதவி வழங்கும் usaid vega/biz+ திட்டம் நாடு முழுவதும் சிறிய நடுத்தர வியாபாரங்களுக்கு நிதி தொழில்நுட்ப நிர்வாக உதவிகளை வழங்கி வருகின்றது. இவ்வாறான வியாபா ரங்களுக்கு யு.எஸ்.எயிட் வழங்கி வரும் உதவிகள் இலங்கையின் அபிவிருத்தி மிகவும் குறைவாக உள்ள பகுதிகளில் உள்ளூர் பொருளாதாரத்திற்கு அவசியமான ஊக்கத்தை அளித்து வருகின்றது.

## மாற்றுத்திறனாளி குடும்பங்களுக்கு தனியார் நிறுவனத்தால் உதவி

வவுனியாவை தலைமை அலுவலகமாக கொண்டு இயங்கும் ஓகன் நிறுவனம் கிளிநொச்சி மாவட்டத்தில் மாற்றுத்திறனாளிகளாக உள்ள பெண்களை தலைமைத்துவமாகக் கொண்ட வறிய குடும்பங்களுக்கு நவீன மலசல கூட வசதிகளை ஏற்படுத்தி கொடுக்கவுள்ளது.

இதற்கான அனுமதியை பெறுவதில் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபரிடம் விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

மாவட்டத்தின் 4 பிரதேச செயலக பிரிவுகளையும் உள்ளடக்கிய வகையில் பயனாளிகள் தெரிவு இடம் பெற்றுள்ளது. கொமோற் இணைக்கப்பட்ட மலசலகூடம் மாற்றுத் திறனாளிகளுக்கு ஏற்ற வகையில் கட்டிக் கொடுக்கப்படவுள்ளது. இதன் மூலம் இம் மாவட்டத்தில மாற்றுத் திறனாளிகளுக்கு சிறந்த சுகாதார நிலை ஏற்படுத்திக் கொடுக்கப்படவுள்ளது. (90)

## பட்டபின் கல்வி டிப்ளோமா கற்கை நெறிக்கு விண்ணப்பம்

தேசிய கல்வி நிறுவகத்தால் நடாத்தப்படும் பட்டப்பின் கல்வி டிப்ளோமா கற்கை நெறிக்காக 2015 - 2016 கல்வியாண்டில் தமிழ் மொழி மூல மாணவர்களைச் சேர்த்துக் கொள்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

52 வயதிற்குட்பட்ட கல்விசார் பணியை மேற்கொள்ளும் அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் கல்விசார் அலுவலர்கள் இக்கற்கை நெறிக்கு விண்ணப்பிக்கத் தகைமையுடையவராவர்.

இக்கற்கை நெறியானது யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா ஆகிய வடபுலப்பிரதேசங்கள் உள்ளிட்ட பத்து இடங்களில் நடாத்தப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. விண்ணப்பங்களை உரிய படிவங்களில் நிரப்பி எதிர்வரும் நவம்பர் மாதம் 11 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்ப வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## வெளிவந்துள்ளன "தமிழியல் விருது" 2014 முடிவுகள்

எழுத்தாளர் ஊக்குவிப்பு மையம் ஆண்டு தோறும் ஈழத்திலும் வெளிநாடுகளிலும் வாழ்கின்ற ஈழத்துத் தமிழ்ப் படைப்பாளிகளை ஊக்குவிக்கும் வண்ணம் "தமிழியல் விருது" வழங்கி வருகின்றது.

2014 ஆம் ஆண்டுக்கான 6 ஆவது தமிழியல் விருது பெறும 25 விருதாளிகளின் பெயர் விபரங்களை எழுத்தாளர் ஊக்குவிப்பு மையம் வெளியிட்டுள்ளது.

**உயர் தமிழியல் விருது**

எழுத்தாளர் ஊக்குவிப்பு மைய ஸ்தாபகர் ஓ.கே. பாக்கியநாதன் உயர் தமிழியல் விருது பெறும் இலக்கிய மேம்பாட்டுக்கு உரமாய் உழைத்த மிகச் சிறந்த மூத்த படைப்பாளி டாக்டர் ஜின்னாஹ ஷரிபுத்தீன்

**தமிழியல் விருது**

தலா ரூபா 15,000 பணத்துடன் விருது பெறும் தமிழ் இலக்கிய மேம்பாட்டுக்கு உரமாய் உழைத்த 5 மூத்த படைப்பாளிகள் பேராசிரியர் வே.அந்தனிஜான் அழகரசன் (அமெரிக்கா) பேராசிரியர் த.கலாமணி (யாழ்ப்பாணம்), நுணாவிலூர் கா.விஜயரத்தினம் (லண்டன்), ஆ.தங்கராசா (மட்டக்களப்பு), நந்தினி சேவியர் (திருகோணமலை),

**தமிழ்ப்பணியாளர் தமிழியல் விருது**

ரூபா 15,000 பணத்துடன் விருது பெறும் அயல்நாட்டுப் படைப்பாளி

நாவலாசிரியர் கு.சின்னப்பாரதி (நாமக்கல் தமிழ்நாடு)

**இனநல்லுறவு தமிழியல் விருது**

ரூபா 10,000 பணத்துடன் விருது பெறும் இன நல்லுறவுக்காக உழைத்த சிங்கள மொழிப் பணியாளர்

எஸ்.கொடகே (ஸ்தாபகர் கொடகே சாகித்திய விருது)

**ஓவியருக்கான தமிழியல் விருது**

ரூபா 10,000 பணத்துடன் விருது பெறும் என்.எஸ் ஞான குருபரன்

**சிறந்த வடிவமைப்புக்கான தமிழியல் விருது**

ரூபா 10, 000 பணத்துடன் விருது கே.எம்.மஸாஹிம் (நூல் உயிரின் உண்மைகள்)

**சிறந்த சஞ்சிகைக்கான தமிழியல் விருது**

ரூபா 10,000 பணத்துடன் விருது பெறும் தாய் வீடு (கனடா)

**சிறந்த நூலுக்கான தமிழியல் விருது**

2013 இல் வெளிவந்த தமிழியல் விருது சிறந்த 13 நூல்கள்

**சிறுகதை**

ரூபா 10,000 பணத்துடன் விருது கோ.சேனாதிராஜா எழுதிய குதிரைகளும் பறக்கும்

**நாவல்**

ரூபா 10,000 பணத்துடன் விருது தமிழ்க்கவி எழுதிய ஊழிக காலம்

**கவிதை**

ரூபா 10,000 பணத்துடன் விருது கவிஞர் த.ஜெயசீலன் எழுதிய எழுதாத ஒரு கவிதை ரூபா 10,000 பணத்துடன் விருது த.உருத்திரா எழுதிய ஆண் கோணி.

(தொடரும்...)





யாழ்.கொட்டடி சனசமூக நிலையத்தில் நடைபெற்ற முதியோர் தினவிழாவில் ஓய்வுபெற்ற வர்த்தகர் க.தர்மலிங்கம், சாரங்கா நகைமாளிகை அதிபரினால் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்படுவதையும் கௌரவிக்கப்பட்ட முதியோர்களையும் காணலாம். (105)

# ஐ.நா.வின் செயற்பாடுகளில் கடுமையான அரசியல் தலையீடு

## அமைச்சர் பீரிஸ் குற்றச்சாட்டு



ஐக்கிய நாடுகள் அமைப்பு கடுமையாக அரசியல் மயப்படுத்தப்பட்டுள்ளதாக வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் குற்றஞ்சாட்டியுள்ளார்.

ஒட்டுமொத்த ஐக்கிய நாடுகள் அமைப்பின் பொறிமுறைமையும் அரசியல் மயப்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

69ஆவது ஐக்கிய நாடுகள் தின நிகழ்வுகளில் பங்கேற்ற போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய நாடுகள் அமைப்பில் கடுமையான அரசியல் தலையீடுகள் காணப்படுவதாகத் தெரிவித்த அவர்

சட்டங்கள்,விதிகள் தேவைக்கு ஏற்ற வகையில் மாற்றியமைக்கப்படுவதாகவும் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் அமைப்பினை தேவையற்ற வகையில் விமர்சனம் செய்யவில்லை எனவும், அமைப்பின் பொறிமுறைமையை பார்க்கும் எவருக்கும் பிரச்சினைகளை புரிந்துகொள்ள முடியும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஒவ்வொரு நாடுகளும் ஒவ்வொரு விதமாக கவனிக்கப்படுவதாகவும்,

ஐக்கிய நாடுகள் அமைப்பின் கொள்கை அமுலாக்கத்தின் போது ஒரே விதமான அணுகுமுறைகள் பின்பற்றப்படாமை வருத்தமளிப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் அமைப்பின் பொறிமுறைமையை அனைத்து தரப்பினரும் நம்பி ஏற்றுக்கொள்ளக்கூடிய பின்னணி உருவாக்கப்பட வேண்டுமென அவர் தெரிவித்துள்ளதோடு,

சில நாடுகளுக்கு எதிராக விதிக்கப்படும் தடைகள் சில நாடுகளுக்கு எதிராக விதிக்கப்படுவதில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# 4 இறங்குதுறைகள் சீனாவின் வசம்

அம்பாந்தோட்டை துறைமுகத்தின் நான்கு இறங்குதுறைகளை செயற்படுத்தும் உரிமை சீன நிறுவனத்துக்கு வழங்கப்பட்டுள்ளது. எனினும் இது தொடர்பில் முன்கூட்டிய கேள்விப்பத்திரமோ அல்லது அறிவித்தல்களோ விடுக்கப்படவில்லை.

ஏற்கனவே சீன கடன்திட்டத்தின் கீழ் அம்பாந்தோட்டை துறைமுகம் அமைக்கப்பட்ட போது குறித்த நான்கு இறங்குதுறைகளையும் இயங்குவதற்கான உடன்படிக்கை ஏற்படுத்திக்கொள்ளப்பட்டதாக துறைமுக அதிகாரசபையின் தலைவர் பிரியத் பி விக்கிரம தெரிவித்துள்ளார்.

சீனாவின் எக்ஸிம் வங்கியிடம் இருந்து அம்பாந்தோட்டை துறைமுக முதல் கட்ட அமைப்புக்காக ஒதுக்கப்பட்ட 361 மில்லியன் டொலர்களில் 85வீதகடன் பெற்றுக்கொள்ளப்பட்டது.

துறைமுகத்தின் இரண்டாம் கட்ட அமைப்புக்காக 808 மில்லியன் டொலர்கள் செலவிடப்பட்டன.

இதில் 100 வீத நிதியும் சீன வங்கியிடம் இருந்து கடனாக பெறப்பட்டது.

இதற்காக இரண்டு வீத வட்டியும் மீளச்செலுத்தலின் போது வழங்கப்படவேண்டும்.

எனினும் முதல் கட்ட கடனுக்கு 6.3 வீத வட்டி வழங்கப்பட்டது என்றும் விக்கிரம குறிப்பிட்டுள்ளார்.

சீனாவுடன் மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கையின்படி (Supply, Operate and Transfer (SOT) அமைப்பு, இயக்கம் மற்றும் கையளித்தல் என்ற நியதி கடைப்பிடிக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

# வரவு-செலவுத் திட்டத்தில் பல்வேறு அனுகூலங்கள்

## ஜனாதிபதி தெரிவிப்பு


தேர்தலை இலக்காக கொண்டு வரவு-செலவுத் திட்டத்தை வெளியிட்டு பொதுமக்களை ஏமாற்றுவதற்கு தாம் தயாராக இல்லை என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இந்தமுறை வரவு செலவு திட்டம் இலங்கை பிரஜைகளுக்கு அனுகூலத்தை வழங்கக் கூடிய ஒன்றாகவே அமையும் என அவர் குறிப்பிட்டார்.

மக்கள் வாழ்க்கையை மேம்படுத்தக் கூடிய வகையிலும், நாட்டின் எதிர்காலத்தை கருத்தில் கொண்டும் பலயோசனைகளை அதில் உள்ளடக்கியுள்ளதாக ஜனாதிபதி தெரிவித் தார்.

தொழிற்சங்க பிரதிநிதிகளுடன் நேற்று முன்தினம் முற்பகல் அலரி மாளிகையில் இடம்பெற்ற சந்திப்பில் மேலும் உரையாற்றிய ஜனாதிபதி. கடந்த 10 வருடங்களாக அரசாங்கம் முறையான பொருளாதார முகாமைத்துவத்துடன் செயற்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

இதன்காரணமாக, தொழில் புரியும் வர்க்கத்தினருக்கு பல நிவாரணங்களை வழங்கியுள்ளதாகவும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ குறிப்பிட்டார்.



தொழிற்சங்க பிரதிநிதிகளுக்கும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கும் இடையிலான சந்திப்பொன்று நேற்று முன்தினம் காலை ஜனாதிபதி காரியாலயத்தில் இடம்பெற்றது.

இதன்போது எண்பதுகளில் ஜுலை மாத வேலைநிறுத்தத்தின் போது செய்த சேவைக்கு பாராட்டுத் தெரிவிக்கும் வகையில் அகில இலங்கை அரசாங்க கட்டட சங்கத்தின் தலைவர் பி.வி. சிரிசேன மற்றும் செயலாளர் டி.ரண்மண்டல ஆகியோருக்கு ஜனாதிபதி நினைவுச்சின்னங்களை வழங்கினார்.

இந்நிகழ்வில் அமைச்சர்களான தினேஷ் குணவர்தன- பஷில் ராஜபக்ஷ- காமினி லொக்குகே- குமார வெல்கம- மேல்மாகாண ஆளுநர் அலவி மௌலான- நாடாளுமன்ற உறுப்பினர்களான திலங்க சுமதிபால- ஜனாதிபதி செயலாளர் ல்லித் வீரதுங்க ஆகியோர் கலந்துகொண்டனர்.

# ஐரோ. ஒன்றிய நீதிமன்ற தீர்ப்பு புரிந்து கொள்ள தவறிய அரசு

## விசனமடையும் ஐ.தே.க.



தமிழீழ விடுதலைப் புலிகள் தொடர்பில் ஐரோப்பிய ஒன்றிய நீதிமன்றின் தீர்ப்பினை அரசாங்கம் புரிந்துகொள்ளத் தவறியுள்ளதாக ஐக்கிய தேசியக்கட்சி குற்றம் சுமத்தியுள்ளது.

ஐரோப்பிய ஒன்றிய நீதிமன்றின் தீர்ப்பு பற்றிய புரிதல் இன்றி அரசாங்கம் கருத்துக்களை வெளியிட்டு வருவதாகத் தெரிவித்துள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க புலம்பெயர் தமிழர்களுடன் பேச்சுவார்த்தை நடாத்தியதாக வெளியான குற்றச்சாட்டுக்களில் உண்மையில்லை என கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் கபீர் ஹாசீம் தெரிவித்துள்ளார்.

கட்சிக் கூட்டங்கள் மற்றும் சில தேவைகளுக்காக ரணில் விக்ரமசிங்க லண்டன் சென்றதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

ரணில் விக்ரமசிங்க புலம்பெயர் தமிழர்களை சந்தித்ததன் பின்னரே இவ்வாறு புலிகளுக்கு எதிரான தடையை ஐரோப்பிய ஒன்றியம் நீக்கியதாக சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்களில் உண்மையில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

தீர்ப்பு பற்றிய புரிதல் இல்லாத அமைச்சர்கள் பிழையான கருத்துக்களை வெளியிட்டு வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறானவர்கள் அமைச்சர்களாக கடயைமாற்ற தகுதியற்றவர்கள் எனவும் அவர் தெரிவித்துள்ளார். அமைச்சர் விமல் வீரவன்ச அண்மையில் வெளியிட்ட கருத்துக்கு பதிலளிக்கும் வகையிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

ஐரோப்பிய ஒன்றிய நீதிமன்றின் தீர்ப்பிற்கு எதிராக ஏன் அரசாங்க சட்டத்தரணிகள் ஆஜராகவில்லை என்பதனை விமல் வீரவன்சவின் தலைவரிடம், வீரவன்ச கேட்கவேண்டுமென தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் மீது குற்றம் சுமத்துவதனை விடுத்து தங்களது கடமைகளை அமைச்சர்கள் உரிய முறையில் செய்தாலே நாட்டை. காப்பாற்றிவிட முடியும் என அவர் குறிப்பிட்டுள்ளார். தமிழீழ விடுதலைப் புலிகளின் சர்வதேச விவகாரப் பொறுப்பாளர் குமரன் பத்தமநாதனுக்கு அரசாங்கம் அடைக்கலம் வழங்கியுள்ளதாகவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

# புலிகள் மீதான தடை நீக்கம் புலம்பெயர் சிங்கள மக்கள் ஆபத்தில்

## வெளிவிவகார அமைச்சு அறிவிப்பு

தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடையை ஐரோப்பிய ஒன்றியம் நீக்கியதன் காரணமாக, ஐரோப்பாவில் வாழ்ந்து வரும் சிங்கள மக்களுக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்குவதற்கு ஐரோப்பிய ஒன்றிய நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

இந்த தடை நீக்கமானது ஐரோப்பிய நாடுகளில் வாழ்ந்து வரும் பெரும்பான்மையான சிங்களவர்களின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக அமைந்துள்ளது.

இலங்கையர்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் நோக்கில் ஐரோப்பிய ஒன்றியத்துடன் இணைந்து செயற்படத் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் குறித்து உன்னிப்பாக அவதானிக்கப்பட்டு வருவதுடன், பிரச்சினைகள் குறித்து ஐரோப்பிய நாடுகளுக்கு தெளிவுபடுத்தப்படும் எனவும் வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது.

# கைது

தமிழீழ விடுதலைப் புலிகளின புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த முக்கிய உறுப்பினர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

போரின் பின்னர் இராணுவத்தினரிடம் சிக்காது யாழ்ப்பாணம் மல்லாகம் பிரதேசத்தில் வசித்து வந்தவரே கைது செய்யப்பட்டவராவார்.

குறித்த நபர் தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆயுத மற்றும் புலனாய்வுப் பிரிவுகளின் முக்கிய பதவிகளை வகித்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

கட்டாருக்கு தப்பிச் செல்ல முயறசித்த போதே குறித்த நபரை,புல்னாய்வுப் பிரிவினர் கைது செய்துள்ளனர்.

கடந்த 18ஆம் திகதி குறித்த நபரை விமான நிலையத்தில் வைத்து புலனாய்வுப் பிரிவு அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

சந்தேக நபர் பயங்கரவாத தடுப்புப் பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

# தனிச்சிங்கள மொழிச்சட்ட பயனால் தமிழ் மொழிக்கே சமஅந்தஸ்து

## இனங்களை அடிமைப்படுத்தக் கூடாது என்கிறார் ராஜித

40 வருடங்களுக்கு முன் கொண்டு வரப்பட்ட தனிச் சிங்கள மொழிச் சட்டத்தால் நாம் கண்ட பயன் ஏதுமில்லை. மாறாக 40 வருடங்களின் பின்னர் சிங்களத்துடன் இணைந்ததாக தமிழ் மொழிக்கும் சம அந்தஸ்து கொடுக்கப்பட்டுள்ளது என அமைசசர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

நாட்டில் சுதந்திரத்திற்காக அன்று சிங்கள தலைவர்களுடன் தமிழ், முஸ்லிம் தலைவர்களும் ஒன்று சேர்ந்து போராடினர். இந்த ஒற்றுமையின் காரணமாகவே நாட்டுக்கு சுதந்திரம் கிடைத்தது.

ஆறு தசாப்தங்களுக்கு முன்னர் எமது தாய் நாட்டிற்கு கிடைத்த சுதந்திரத்தைப் பேணிப் பாதுகாப்பதற்கு சகல சமூகத்தவரும் கைகோர்த்து செயற்பட வேண்டும். சிங்கள தலைவர்களுடன் சேர். பொன்னம்பலம் இராமநாதன், அருணாச்சலம், மகாதேவா, ரி.பி. ஜாயா போன்ற தலைவர்கள நாட்டிற்குச் செய்த தியாகங்கள் மறக்க முடியாதவை. நாம் எத்தகைய அபிவிருத்திப் பணிகளை மேற்கொண்டாலும் மனிதத்துவப் பண்புகளை கட்டியெழுப்பத்தவறினால் அதில் பயனில்லை. மனித உள்ளம் சீர் பெறவேண்டும். ஒரு இனம் இன்னொரு இனத்தை அடிமைப்படுத்த முடியாது எனவும் தெரிவித்தார்.






மன்.அடம்பன் மகாவித்தியாலயத்தின் ஆசிரியர் தினநிகழ்வின் போது ஆசிரியர்கள் அழைத்து வரப்படுவதையும், ஆசிரியர்களின் நிகழ்வுகள் இடம் பெறுவதையும் காணலாம்.

# தமிழருக்கான தீர்வு

# மாகாண சபை அல்ல

## என்கிறார் சி.வி.கே.

(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்களுக்கான தீர்வு, மாகாண சபை என்று நாம் ஒரு போதும் சொல்லவில்லை. தேர்தல் பிரசார காலத்திலும் சரி, தற்போதும் சரி அவ்வாறு நாம் கூறவில்லை என வடமாகாண அவைத்தலைவர் சி.வி.கே.சிவஞானம் தெரிவித்தார்.



தமிழரசுக் கட்சியின் யாழ். மாவட்ட கிளையின் மாவட்ட மாநாடு, நல்லூர் இளங்கலைஞர் மண்டபத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய அவர், "அதிகாரம் என்பது தானாக வராது. அது உருவாக்கப்பட வேண்டும். அதிகாரம் இல்லை என்று சொல்பவர்கள் அதை பெற முயற்சிக்க வேண்டும்" என்று கூறினார்.

"காணி அதிகாரம் மத்திய அரசுக்கே" சொந்தம் என உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்தமை எமக்குத் தெரியும் ஆனால், 13 ஆவது திருத்தம் மாகாண சபைக்கு காணி அதிகாரம் உண்டு என கூறுகிறது. வடமாகாண சபையால் எவ்வித பயனும் இல்லையென எள்ளி நகையாடு பவர்கள் இருக்கின்றனர்.

வடமாகாண சபை 140 பிரேரணைகளை நிறைவேற்றி இருக்கிறது. வடமாகாணத்தில் இடம்பெறும் காணி சுவீகரிப்பு மீள்குடியேற்றங்கள் தொடர்பில் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை வடமாகாண சபை மேற்கொண்டு வருவதாக அவர் மேலும் கூறினார்.

# ஷம்போவில் இரு காலாவதி திகதிகள்

# விற்பனை நிறைவேற்று அதிகாரிக்கு தண்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் விற்கப்பட்ட ஒருவகை ஷம்போவில் இரண்டு காலாவதி திகதிகள் அச்சிடப்பட்டமை தொடர்பில் அந்நிறுவனத்தின் விற்பனை நிறைவேற்று அதிகாரிக்கு யாழ்.நீதவான் நீதிமன்றத்தால் 50 ஆயிரம் ரூபாய் தண்டம் விதிக்கப்பட்டுள்ளதாக யாழ்.பாவனையாளர் அதிகார சபை பொறுப்பதிகாரி த.வசந்தசேகரம் தெரிவித்தார்.

இரண்டு காலாவதி திகதிகள் அச்சிடப்பட்ட ஷம்போ வகையொன்று யாழ்ப்பாணத்திலுள்ள வர்த்தக நிலையங்களில் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்தமை தொடர்பில் கடந்த மூன்று மாதங்களுக்கு முன்னர் கண்டுபிடிக்கப்பட்டு, குறித்த அந்த ஷம்போ நிறுவனத்தின் விற்பனை நிறைவேற்று அதிகாரிக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

இதன்போது, நீதவான் 15 ஆயிரம் ரூபாய் தண்டம் விதித்ததுடன், இவ்வாறு இரண்டு காலாவதி திகதியிடப்பட்டு விற்பனை செய்த ஷம்போக்களை 2 மாதங்களுக்குள் விற்பனை நிலையங்களிலிருந்து மீளப்பெறவேண்டும் எனவும் உத்தரவிட்டார். இருந்தும், 2 மாதங்கள் கடந்த நிலையிலும் விற்பனை நிலையங்களிலிருந்து ஷம்போ பைக்கற்றுக்கள் மீள எடுக்கப்படவில்லை.

இவ்விடயம் நீதிமன்றத்தின் கவனத்திற்கு மீண்டும் கடந்த வெள்ளிக்கிழமை கொண்டுசெல்லப்பட்டதை அடுத்து, மேற்படி விற்பனை நிறைவேற்று அதிகாரிக்கு 50 ஆயிரம் ரூபாய் தண்டம் விதித்த நீதவான், விநியோகிக்கப்பட்ட ஷம்போக்களை விரைந்து மீளப்பெறும்படி உத்தரவிட்டார் என பாவனையாளர் அதிகார சபை பொறுப்பதிகாரி மேலும் கூறினார்.

# இந்துசமய பொது அறிவுப்போட்டி வெற்றி பெற்ற மாணவர் விபரம்

இந்துகலாசார அலுவல்கள் திணைக்களம் நடாத்திய இந்துசமய பொது அறிவுப்போட்டியில் பருத்தித்துறை நெல்லண்டை அம்பாள் அறநெறிப் பாடசாலை 4 ஆம் ஆண்டு மாணவி செல்வி.எஸ்.அபிநயா தேசிய மட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்று பாராட்டுப்பெற்றுள்ளார்.

இவ் அறநெறிப்பாடசாலையை சேர்ந்த ஏனைய பரிசு பெற்ற மாணவர்களில்,

தரம் 7 இல் செல்வி எஸ்.சரத் டிலக்சனா மாவட்ட மட்டத்தில் 1 ஆம் இடத்தையும், அதே தரத்தில் செல்வி எஸ்.ஸ்ரீவேணுகா, தரம் 9 இல் செல்வன் ரீ.அஜந்தன் ஆகியோர் மாவட்டமட்டத்தில் 2 ஆம் இடத்தையும் தரம் 7 இல் செல்வன் ரீ.சாருஜன் மாவட்ட மட்டத்தில் 3 ஆம் இடத்தையும் பெற்றுள்ளார். (01)

# சாதாரண தரப் பரீட்சை கருத்தரங்கு தும்பளையில்

பருத்தித்துறை தும்பளை நாவலர் விளையாட்டுக்கழகம் 2014 ஆம் ஆண்டு க.பொ.த. (சா/த) பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான இலவச கல்விக்கருத்தரங்கை எதிர்வரும் 25, 26 ஆம் திகதிகளில் பருத்தித்துறை தும்பளை சைவ பிரகாச மகா வித்தியாலய மண்டபத்தில் பிற்பகல் 3.30 மணிக்கு நடாத்தவுள்ளது.

யாழ்.மாவட்டத்தின் சிறந்த கல்வி வளவாளர்கள் இக்கருத்தரங்கில் கருத்துரைகளை வழங்கவுள்ளனர். தமிழ், கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம், வரலாறு ஆகிய பாடங்களுக்கான கருத்தரங்குகள் இங்கு நடைபெறும். (01)

# திருக்குடமுழுக்கு

கிளிநொச்சி, பூநகரி, கிராஞ்சி சிவபுரம் அருள்மிகு சிவசுப்பிரமணியர் தேவஸ்தான திருக்குடமுழுக்கு நன்நீராட்டு பெரும் சாந்திவிழா நாளை புதன்கிழமை இடம்பெறவுள்ளது. இதில் இன்று செவ்வாய்க்கிழமை அடியார்களின் எண்ணெய்க் காப்பு சாத்தும் நிகழ்வு இடம்பெறும். தொடர்ந்து 12 தினங்கள் மண்டலாபிஷேகம் இடம்பெறவுள்ளதுடன் நாளை மறுதினம் வியாழக்கிழமை கந்த சஷ்டி விரதம் ஆரம்பமாகி 6 நாட்கள் விசேட பூசை வழிபாடுகளும் இடம்பெறவுள்ளன.

இதில் 29 ஆம் திகதி சூரன்போர் இடம்பெறவுள்ளது. இவ் உற்சவ காலத்தில் விசேடசமய சொற்பொழிவு, அறநெறி பாடசாலை மாணவர்களின கலைநிகழ்வுகளும் சமய அறிவுப்போட்டி, பரிசில் வழங்கல் கூட்டுப்பிரார்த்தனை என்பனவும் இடம் பெறவுள்ளன.

# "நாம் நண்பர்கள்" அமைப்பின் 'புத்தகப்பை' சவால்

"நாம் நண்பர்கள்" அமைப்பின் வறிய மாணவர்களின் கல்வி வளர்ச்சி செய்றப்பாட்டிற்காக 'புத்தகப்பை' சவாலை ஆரம்பித்துள்ளனர். இச் சவால் நேற்றுமுன்தினம் மாலை 5 மணிக்கே வெளியிடப்பட்டிருந்தாலும் குறுகிய நேரத்தில் இருவர் தங்களது உதவிகளை வழங்கியுள்ளனர்.

வறிய மாணவர்களின் கல்வி வளர்ச்சி செயற்பாட்டிற்காக தொடங்கப்பட்ட 'புத்தகப்பை' சவாலின் முதலாவது சவாலில் சந்திரராஜா அகிலன் ஒரு தொகை கற்றல் உபகரணங்களை "நாம் நண்பர்கள்" அமைப்பிடம் வழங்கினார். தொடர்ந்து நாம நண்பர்கள் அமைப்பினர் தொடங்கிய புத்தகப்பை சவாலில் யாழ்/இ.ம.கல்லூரி ஆசிரியர் கயூரன் ஒரு தொகை கற்றல் உபகரணங்களைக் கையளித்தார்.

இது கல்வியில் வறுமையினை ஒழிப்போம் என்ற இலக்கிற்காக ஆரம்பிக்கப்பட்டது. எம்முடன் கை கோர்க்க விரும்பும் நண்பர்கள் இச் சவாலில் கலந்து கொள்ளுமாறும் ஆர்வமுள்ளவர்கள் 0776121016/ 0771641413 ஆகிய இலக்கங்களூடாக தொடர்பு கொண்டு இச் சவாலில் இணைந்து கொள்ள முடியும் எனவும் "நாம் நண்பர்கள்" அமைப்பினர் அறிவித்துள்ளனர். (48)

# முரசின் இன்றைய பலன்



(21.10.2014 செவ்வாய்க்கிழமை)

ஜய வருஷம் ஐப்பசி மாதம் 04 ஆம் திகதி.
திரயோதசி / அமிர்த சித்தம்.
பூர நட்சத்திரம் மு.இரவு. 01.55 வரை. பின் அத்தம்.
இராகு காலம 03.02 - 04.32 வரை. சுபநேரம 10.32 - 12.02 வரை.

ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | எதிரியின் அடாவழித்தனம் அகன்று விடல், வெளியூர் பயண மேற்கொள்ளல். |
| ரிஷபம் | நோயின் ஆதிக்கம் விட்டு விலகல், சொத்துப் பங்கீடு சம்பந்தமாக சுமுக நிலை ஏற்படல். |
| மிதுனம் | நண்பரின் துரோக செயலால் வருந்துதல், புத்திர பாக்கியம் கிட்டல். |
| கடகம் | சீதனப்பிரச்சினையால் விவாதப்பேச்சு தடைப்படல், ஊழியர்களைக் கௌரவீத்து நடத்தல் அவசியம். |
| சிம்மம் | நம்பிக்கை வைத்திருந்த ஊழியரால் பதவிக்கு கேடு ஏற்படல். |
| கன்னி | பிள்ளைகளுக்கு குறித்த விடயங்களில் புத்திமதி கூறல் அவசியம், உறவினர்களுடன் முறுகல் நிலை தோன்றுதல். |
| துலாம் | மேலதிகாரிகளின் சீற்றம் தணிய பொறுமை சகிப்புத் தன்மையைத்தக்க வைத்தல், போக்குவரத்தில் அவதானம் தேவை. |
| விருச்சிகம் | வழித்துணைக்குவந்தவரின் செயலால் பதட்டமடைதல். |
| தனுசு | தேகநலம் பாதிக்கப்படுதல், போதைப்பொருட்பாவனையால் குடும் பத்தில் அவல நிலை கண்டு திருந்துதல். |
| மகரம் | உதவி செய்வதைக் கைவிடல், தம்பதியர் மத்தியில் நிலவியிருந்த முரண்பாடு தீர்ந்துவிடல். |
| கும்பம் | விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டதால் துயர்மிகுதல், பதவி கிட்டும் என நம்பிக்கை ஏற்படல். |
| மீனம் | மறுதிருமணம் செய்யமுனைதல், பிறந்தநாளைக் கொண்டாட்டத்தில் பதகளிப்பு ஏற்படல். |

# வில்லியம்ஸ் பிரதர்ஸ் என பேச்சு செரீனா கடும் கண்டனம்



(சிங்கப்பூர்)

ரஷ்ய ரென்னிஸ் அமைப்பின் தலைவர் வீனஸ் மற்றும் செரீனா வில்லியம்ஸ் சகோதரிகள் குறித்து தெரிவித்த கருத்துக்கு செரீனா வில்லியம்ஸ் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.


கடந்த வெள்ளிக்கிழமை நிகழ்ச்சி ஒன்றில் பேசிய ரஷ்ய ரென்னிஸ் அமைப்பின் தலைவர் ஷமீல் டர்பிஸ் சேவ் வீனஸ் மற்றும் செரீனா சகோதரிகள் குறித்து கூறுகையில் வில்லியம்ஸ் பிரதர்ஸ் (வில்லியம்ஸ் சகோதரர்கள்) என்று கூறி விட்டார். இதற்கு பெண்கள் ரென்னிஸ் அமைப்பின் (டபிள்யூ.டி.ஏ.) தலைமை செயல் அதிகாரி ஸ்டேசி அலாஸ்டர் இந்த கருத்துகள் மனதைப் புண்படுத்துபவை, தரக்குறைவானவை மற்றும் எங்களது விளையாட்டில் இத்தகைய பேச்சுக்கு முழுமையாக இடம் கிடையாது என தெரிவித்துள்ளார்.

டபிள்யூ.டி.ஏ.வானது உடனடியாக நடவடிக்கை எடுத்ததுடன், டர்பிஸ்சேவுக்கு 25 ஆயிரம் டொலர் அபராதமும் விதித்துள்ளதுடன், ஒரு வருடத்துக்கு அமைப்பில் இருந்து அவரை தகுதி நீக்கம் செய்துமுள்ளது.சர்வதேச ஒலிம்பிக் குழுவின் உறுப்பினராகவுள்ள டர்பிஸ்சேவ் அதிகாரபூர்வ அளவில் நேற்று முன்தினம் மன்னிப்பு கேட்டு கொண்டார். எனினும் இதனால் மகிழ்ச்சியற்ற நிலையில் இருக்கும் வில்லியம்ஸிற்கு இது போதுமானதாக இல்லை.

அவர் அதிக அளவில் பாலியல் ரீதியான முறையில் மற்றும் இன ரீதியில் கருத்து தெரிவித்துள்ளார் என் நான் கருதுகிறேன். எங்களை அவர் தவறான நோக்கில் பார்ப்பதாகவே நான் கருதுகிறேன். என்னால் முடிந்த வரையில் நான் சிறப்பாக செயற்பட்டுள்ளேன். அதனை மட்டுமே என்னால் கூற முடியும். அவரது கருத்தால் நான் மகிழ்ச்சி அடையவில்லை. பெரும்பாலானோர் மகிழ்ச்சியாக இல்லை என்றே நான் கருதுகிறேன் என்று அவர் கூறியுள்ளார்.

செரீனாவுக்கு ஆதரவாக உலக தர வரிசையில் 2ஆவது இடம் வகிக்கும் மரியா ஷரபோவா கருத்து தெரிவித்துள்ளார். அவர் மரியாதையற்ற முறையில் செயற்படுவதாக நான் கருதுகிறேன்.இவ்விடயத்தில் டபிள்யூ.டி.ஏ.உட்பட நிறைய பேர் கண்டன கருத்து தெரிவித்து இருப்பதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன் என்று ஷரபோவா கூறியுள்ளார்.

அவரது தரப்பில் உண்மையில் பொறுப்பற்றவிதம் என்று கூறியுள்ள ஷரபோவா, குறிப்பாக அவரது நிலையில் இது முறையற்றது என தெரி வித்துள்ளார். அவர் விளையாட்டில் மட்டும் இல்லாமல் ஒலிம்பிக் குழுவின் உறுப்பினர் என்ற வகையில் அனைத்து பொறுப்புகளுடனும் இருக்க வேண்டியவர் என்றும் தெரிவித்துள்ளார்.



## ஓய்வை மாற்ற முடியாது

(சிங்கப்பூர்)

மீண்டும் ரென்னிஸ் போட்டிகளில் பங்குபற்றும் நோக்கம் எனக்கில்லை என ஆசியாவின் ரென்னிஸ் மங்கை லிநா தெரிவித்துள்ளார்.

ரென்னிஸ் அரங்கில் சீனாவுக்கு பெருமை தேடித்தந்தவர் லி நா. கடந்த 2011இல் நடந்த பிரெஞ் ஓப்பனில் பட்டம் வென்றதன் மூலம், கிராண்ட்ஸ்லாம் பட்டம் வென்ற முதல் ஆசியர் என்ற வரலாறு படைத்தார். தொடர்ந்து அசத்திய இவர், இந்த ஆண்டு அவுஸ்ரேலிய ஓப்பனில் கோப்பை வென்றார். முழங்கால் காயத்தால் அவதிப்பட்ட இவர், கடந்த மாதம் ஓய்வை அறிவித்தார். இந்நிலையில் இவர், மீண்டும் ரென்னிஸ் போட்டியில் விளையாடப் போவதாக செய்திகள் வெளியாகின.

இதனை மறுத்த லி நா கூறியதாவது, மீண்டும் நான் ரென்னிஸ் போட்டியில் விளையாடப் போவதில்லை. தற்போது எனக்கு 32 வயதாகிறது. அடுத்த ஆண்டு 33ஆவது வயதை அடையப் போகிறேன். கடந்த 32 ஆண்டுகளாக எனது குடும்பத்தை விட்டு பிரிந்துள்ளேன். தற்போது எனது குடும்பத்தின் மீது கவனம் செலுத்த வேண்டிய நேரம் வந்துவிட்டது. போட்டிகளில் பங்கேற்ற காலத்தில், தொடர்ச்சியான அட்டவணை குறித்து கவலை அடைவேன். ஆனால் தற்போது எந்த கவலையும் இல்லை. தவிர எவ்வித பயிற்சியும் மேற்கொள்ளவில்லை. எவ்வித போட்டிகளிலும் பங்கேற்கவில்லை. எனது நண்பர்களுடன் சிறிது நேரம் செலவிடுகிறேன். வீட்டில் ஓய்வில் இருக்கும் சமயங்களில் ஒரு ரசிகை போல ரென்னிஸ் போட்டிகளை பார்த்து மகிழ்கிறேன் என்றார்.

## நியூசிலாந்து அணி அறிவிப்பு

தென்னாபிரிக்க அணிக்கெதிரான ஒரு நாள் போட்டித் தொடருக்கான நியூசிலாந்து அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

தென்னாபிரிக்க, நியூசிலாந்து அணிகளுக்கிடையிலான மூன்று போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் தொடரின் முதல் போட்டி இன்று நியூசிலாந்தின் மவுண்ட் மாங்கானுய் மைதானத்தில் நடைபெறவுள்ளது. இப்போட்டித் தொடரின் முதலாவது ஒரு நாள் போட்டிக்கான நியூசிலாந்து அணி நேற்று முன்தினம் அறிவிக்கப்பட்டது. பின்னங்காலில் ஏற்பட்ட காயம் காரணமாக ரெய்லர் தொடரிலிருந்து விலகி விட்டார். இதே போல் மணிக்கட்டு பிரச்சினையால் வில்லியம்ஸ் முதல் ஆட்டத்தில் ஆடவில்லை. அவர்களுக்கு பதிலாக டீன் பிரான்லி, டாம் லத்தம் சேர்க்கப்பட்டுள்ளனர். தோள்பட்டை காயத்தால் பயிற்சி ஆட்டத்தில் ஆடாத வேகப்பந்து வீச்சாளர் ரிம் சௌத்தி உடற்தகுதி பெற்று விட்டதால் அணியில் இடம் பிடித்துள்ளார். நியூசிலாந்து அணி வருமாறு:- பிரண்டன் மக்கலம் (கப்டன்), கோரி அண்டர்சன், டிரெண்ட் பவுல்ட், டீன் பிரான்லி, மார்ட்டின் குப்தில், மட் ஹென்ரி, டாம் லத்தம், மெக்லெனஹான், நதன் மக்கலம், மில்ஸ், ஜேம்ஸ் நீஷம், லுக் ரோஞ்சி, ரிம் சௌத்தி, டானியல் வெட்டோரி.

## பரா ஆசிய விளையாட்டு விழா இலங்கைக்கு 3 பதக்கங்கள்

(இன்சோன்)

தென்கொரியாவின் இன்சோன் நகரில் நேற்று முன்தினம் ஆரம்பமான பரா ஆசிய விளையாட்டு விழாவில் இலங்கை வெள்ளி மற்றும் இரண்டு வெண்கலப் பதக்கங்களை சுவீகரித்துள்ளது.

42 நீளம் பாய்தல் போட்டியில் அனில் பிரசன்ன வெள்ளிப் பதக்கமொன்றை சுவீகரித்ததோடு 44 நீளம் பாய்தலில் துமீர மதுரங்க வெண்கலப் பதக்கத்தை வெற்றி கொண்டார்.

மகளிருக்கான 200 மீற்றர் 47 ஓட்டப் போட்டியில் இந்துமதி கருணாதிலக வெண்கலப் பதக்கத்தை பெற்றுக் கொண்டார்.

பதக்கம் வென்ற வீரர்களுக்கு விளையாட்டுத்துறை அமைச்சகம் வாழ்த்துத் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மீண்டும் வட்சன்

தென்னாபிரிக்க அணிக்கெதிரான ருவெண்ரி-20 போட்டிக்கான அவுஸ்ரேலிய அணி நேற்று அறிவிக்கப்பட்டுள்ளது.அவுஸ்ரேலிய - தென்னாபிரிக்கா அணிகளுக்கிடையேயான ருவெண்ரி-20 போட்டித் தொடர் (3 ஆட்டம்) எதிர்வரும் 5ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. இந்தப் போட்டிக்கான அவுஸ்ரேலிய அணி அறிவிக்கப்பட்டுள்ளது. வட்சன், கமரூன் வையிட், போலிஞ்சர் ஆகியோர் அணிக்கு மீண்டும் திரும்பியுள்ளனர். புதுமுக விக்கெட் காப்பாளர் பென்டங் அணியில் இடம் பெற்றுள்ளார். அவர் சமீபத்தில் உள்ளூர் போட்டியில் 229 ஓட்டங்கள் குவித்து சாதனை புரிந்தார். அணி விபரம்: ஆரோன் பிஞ்ச் (கப்டன்), வட்சன், வையிட், ரிச்சர்ட்சன், ரியர்டன், மடிசன், போல்க்னர், பென்டங், பென்கட்டிங், கும்மின்ஸ், கமரூன் போய்ஸ், அபோட், போலிஞ்சர்.

## அசத்திய மெஸ்சிக்கு தேவை 2 கோல்கள்



(மட்ரிட்)

ஸ்பெயினில் நடைபெறும் லா லிகா கால்பந்து சம்பியன்ஷிப் போட்டித் தொடரில், பார்சிலோனா அணி நட்சத்திர வீரர் மெஸ்சி தனது 250ஆவது கோலை அடித்து அசத்தினார்.

எய்பர் அணியுடன் நேற்று முன்தினம் நடைபெற்ற லீக் ஆட்டத்தில் பார்சிலோனா அணி 3-0 என்ற கோல் கணக்கில் அபாரமாக வென்றது. அந்த அணியின் ஸாவி 60ஆவது நிமிடத்திலும், நெய்மர் 72ஆவது நிமிடத்திலும் கோல் அடித்தனர். இதனைத் தொடர்ந்து, 74ஆவது நிமிடத்தில் நெய்மர் கடத்திக் கொடுத்த பந்தை மெஸ்சி மின்னல் வேகத்தில் கோல் கம்பத்துக்குள் திணித்தார். பார்சிலோனா அணியில் இணைந்து பத்து ஆண்டுகளை நிறைவு செய்துள்ள அவர், ஸ்பானிஷ் லீக் லா லிகா கால்பந்து போட்டித் தொடர் வரலாற்றில் அதிக கோல் அடித்த வீரர் என்ற மகத்தான சாதனையைப் படைக்க இன்னும் 2 கோல் மட்டுமே தேவை. தெல்மோ ஸரா 251 கோல் போட்டு (1950) முதலிடத்திலுள்ளார்.

## ஊக்கப்படுத்திய 1983



(கொழும்பு)

1983ஆம் ஆண்டு இந்திய அணி உலகக் கிண்ணத்தை வென்றமை என்னை ஊக்கப் படுத்தியது என இலங்கை அணியின் முன்னாள் கப்டன் அர்ஜுன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

1983இல் இந்திய அணியின் கப்டனாகவிருந்த கபில்தேவ் உலக கோப்பையை கையில் ஏந்தி நின்றதை நான் பார்த்தேன். இது என்னை ஊக்கப்படுத்தியது. கவாஸ்கர், கபில்தேவ் ஆகியோரைத் தவிர்த்து பெரிய நட்சத்திர வீரர்கள் இல்லாத இந்திய அணி வலிமையான மே.தீவுகள் அணியை வீழ்த்தியது. இதை வைத்து இலங்கையால் உலக கோப்பையை ஏன் வெல்ல முடியாது என்று நினைத்தேன்.


இதேபோல 1992இல் இம்ரான்கான் தலைமையில் பாகிஸ்தான் உலக கோப்பையை வென்றதையும் என்னால் நம்ப இயலவில்லை.

இதுவும் என்னை ஊக்குவித்தது. இது போன்ற சூழல் இன்றைய நிலையில் இல்லை. இது மிகவும் கவலை அளிக்கும் ஒன்றாகவுள்ளது. வர்த்தக மயமாக கிரிக்கெட் மாறிவிட்டது எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.



தாய்லாந்தின் தலைநகர் பாங்கொக்கில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஃபிட்வே கிளாஸிக் 3.0 கிராண்ட் பொடிபில்டிங் போட்டியில் பங்குபற்றியோரைக் காணலாம். பல்வேறு நாடுகளைச் சேர்ந்த நூற்றுக்கும் மேற்பட்டோர் இப்போட்டிகளில் பங்குபற்றினர்.

# பதக்கம் வென்ற நானாட்டான் நாயகனுக்கு பாராட்டு



(மன்னார்)

அகில இலங்கை பாடசாலைகளுக் கிடையிலான தேசிய மட்ட உயரம் பாய்தல் போட்டியில் வெள்ளிப் பதக்கம் வென்ற மன்னார் நானாட்டான் மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த ஜோர்ச்அன்ரூ டிலைக்சனுக்கு பாடசாலை சமூகம் மற்றும் விளையாட்டுத்துறை சார்ந்தோர் வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளனர்.

அகில இலங்கை பாடசாலைகளுக் கிடையிலான 30ஆவது தேசிய மட்ட. தடகளப்போட்டி அண்மையில் கொழும்பு சுகததாஸ விளையாட்டரங்கில் நடைபெற்றது. மன்னார் மாவட்டம் சார்பாக அதிகளவிலான வீரவீராங்கனைகள் கலந்து கொண்டனர்.

இப்போட்டியில் மன்னார் மாவட்டத்திற்கு இரண்டு பதக்கங்கள் கிடைக்கப்பெற்றன. இதில் கடந்த 06ஆம் திகதி நடைபெற்ற 21 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான உயரம் பாய்தல் போட்டி நிகழ்வில் மன்னார் நானாட்டான் மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த ஜோர்ச் அன்ரூ டிலைக்சன் 1.90 மீற்றர் உயரத்தை கடந்து இரண்டாம் இடத்தைப் பெற்று வெள்ளிப்பதக்கத்தை தனதாக்கிக் கொண்டார்.

எனவே மன்னார் மாவட்டத்தில் பதக்கங்கள் அடிப்படையில் நானாட்டான் மகா வித்தியாலயம் முதல் இடத்தினைப் பெறுகின்றது. 2013ஆம் ஆண்டும் மன்னார் மாவட்டத்திற்கு தேசிய மட்டத்தில் ஓர் இடமே கிடைக்கப்பெற்றது. இவ் வெற்றிக்கு உரித்தான மாணவனும் மேற்குறித்த ஜோர்ச் அன்ரூ டிலைக்சனே ஆவார்.

அதுவும் நானாட்டான் மகா வித்தியாலயத்திற்கே உரித்தானதாகும். இவ்வெற்றிக்கு பல வழிகளிலும் உறுதுணையாக இருந்த பாடசாலை அதிபர் அருட்சகோதரர் ரெஜினோல்ட், உடற்கல்வி ஆசிரியரும் பயிற்றுவிப்பாளருமான ஆசிரியர் எஸ்.சிறிதேவகரன் (ஸ்ரான்லி) இப் பாடசாலையின் உடற்கல்வி ஆசிரியை திருமதி றூபா தேவராசா ஆகியோருக்கு பாடசாலை சமூகம் பாராட்டுதல்களையும் நன்றிகளையும் தெரிவித்து நிற்கின்றது.




அகில இலங்கை பாடசாலைகளுக்கிடையிலான தடகளப் போட்டியின் பெண்களுக்கான பளு தூக்கலில் தங்கம் வென்ற வேம்படி மகளிர் உயர் தரப் பாடசாலை வீராங்கனை டினோஜா ஜெரார்ட் ஜொய்சி அதிசிறந்த பளு தூக்கல் வீராங்கனையாகத் தெரிவு செய்யப்பட்டார். அவருக்கான விருது வழங்கப்படுவதைக் காணலாம். இப்போட்டி அண்மையில் கொழும்பு சுகததாஸ உள்ளக விளையாட்டு அரங்கில் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

# கால்பந்து போட்டி; யாழ். மத்தி, ஹென்றியரசர் வெற்றி

(இளவாலை)

யாழ். மத்திய கல்லூரி மற்றும் இளவாலை ஹென்றியரசர் கல்லூரி அணிகளுக்கிடையிலான நட்புறவுக் கால்பந்துப் போட்டியில் இரு அணிகளும் ஒவ்வொரு வெற்றியை பதிவு செய்துள்ளன.

யாழ். மாவட்ட பாடசாலை அணிகளுக்கிடையிலான நட்புறவுக் கால்பந்துப் போட்டி தற்போது நடைபெற்று வருகின்றது. இதில் யாழ். மத்திய கல்லூரி மற்றும் இளவாலை ஹென்றியரசர் கல்லூரி அணிகளுக்கிடையிலான போட்டி கடந்த வாரம் ஹென் றியரசர் கல்லூரி மைதானத்தில் நடை பெற்றது. இதில் 14, 16, 18, 21 ஆகிய வயதுப் பிரிவு அணிகளுக்கிடையில் போட்டிகள் நடைபெற்றன.

14 வயதுப்பிரிவு அணிகளுக்கிடையிலான போட்டியில் இரு அணிகளும் சமபலம் கொண்டு மோதிக் கொண்டன. இறுதியில் யாழ். மத்திய கல்லூரி அணி 3-2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

16 வயதுப் பிரிவு அணிகளுக் கிடையிலான போட்டியில் இரு அணிகளும் ஒன்றுக்கொன்று சளைத்தவை அல்ல என்பதை வெளிப்படுத்தும் வகையில் முட்டி மோதிக் கொண்டதால் இரு அணிகளாலும் ஒவ்வொரு கோலையே பெற்றுக்கொள்ள முடிந்தது. இதனால் இப்போட்டி சமநிலையில் நிறைவடைந்தது.

18 வயதுப் பிரிவு அணிகளுக் கிடையிலான போட்டியில் ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்திய இளவாலை ஹென்றியரசர் கல்லூரி அணி 2-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

21 வயதுப் பிரிவு அணிகளுக் கிடையிலான போட்டியில் இரு அணிகளும் ஒவ்வொரு கோலைப் போட்டுக் கொண்டமையால் இப்போட்டி சமநிலையில் நிறைவுற்றது.

நிறைவில் இரு அணிகளும் ஒவ்வொரு பிரிவில் வெற்றிபெற்றன. (93)

# முதல் டெஸ்ட் நாளை ஆரம்பம்

(டுபாய்)

அவுஸ்ரேலிய, பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான இரு போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் முதல் ஆட்டம் நாளை டுபாயில் நடைபெறவுள்ளது. ஏற்கனவே, நடைபெற்ற மூன்று போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் தொடரை பாகிஸ்தான் அணி இழந்திருப்பதால் டெஸ்ட் தொடரைக் கைப்பற்றிக் கொள்ள முயற்சிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. அத்துடன் யுனிஸ்கான், அசார் அலி போன்றோர் பாகிஸ்தான் அணியின் வெற்றிக்குப் பெரும் பங்காற்றுவார்கள் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. இதேவேளை, ஒரு நாள் தொடரை கைப்பற்றியது போன்று டெஸ்ட் தொடரையும் கைப்பற்றுவோம் என அவுஸ்ரேலிய அணி பயிற்றுநர். டரன் லீமன் தெரிவித்துள்ளார்.

# நிர்மலன் நினைவுக் கிண்ண கால்பந்து
# முல்லைத்தீவு சென். யூட் சம்பியன்



(முள்ளியவளை)

அமரர் முருகுப்பிள்ளை நிர்மலன் நினைவு தினத்தை முன்னிட்டு நடாத்தப்பட்ட கால்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் வெற்றிக் கிண்ணத்தை முல்லைத்தீவு சென்.யூட் அணி கைப்பற்றிக்கொண்டது.

இப்போட்டித் தொடரின் முதல் சுற்று ஆட்டங்கள், வவுனியா மற்றும் முல்லைத்தீவில் நடைபெற்றன. வவுனியா மாவட்ட அணிகளுக்கிடையில் நடாத்தப்பட்ட போட்டியில் முதலாமிடத்தை யங்ஸ்ரார் அணியும் இரண்டாமிடத்தை அல் மதர் அணியும் பிடித்துக் கொண்டன.

முல்லைத்தீவு மாவட்ட அணிகளுக்கிடையில் நடாத்தப்பட்ட போட்டியில் சென்.யூட் அணியும் முள்ளியவளை வளர்மதி அணியும் முதலிரு இடங்களைப் பிடித்தன.

இந்நிலையில் இரு மாவட்டங்களிலும் முதலிடத்தைப் பிடித்துக் கொண்ட அணிகளுக்கிடையிலான இறுதிப் போட்டியும், இரண்டாமிடத்தைப் பிடித்துக் கொண்ட அணிகளுக்கு மூன்றாமிடத்திற்கான போட்டி கடந்த 15ஆம் திகதி முள்ளியவளை விநாயர் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றது.

மூன்றாமிடத்திற்கான போட்டியில் முள்ளியவளை வளர்மதி அணியும் வவுனியா அல் மதர் அணியும் மோதின. இதில் ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்திய வளர்மதி அணி 3-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று மூன்றாமிடத்தைப் பிடித்துக் கொண்டது.

தொடர்ந்து நடைபெற்ற இறுதிப் போட்டியில் சென்.யூட்




அணியும் யங்ஸ்ரார் அணியும் மோதின. இரு அணிகளும் ஒன்றுக்கொன்று சளைத்தவை அல்ல என்பதை வெளிப்படுத்தும் வகையில் முட்டி மோதின. இதன் காரணமாக இரு அணிகளாலும் இறுதி வரை கோல் எதனையும் பெற்றுக்கொள்ள முடியவில்லை. நிறைவில் தண்ட உதை மூலம் வெற்றி தோல்வி தீர்மானிக்கப்பட்டது. இதில் சென்.யூட் அணி 4-3 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டது.

## விபுலானந்தன் கூடைப்பந்து
# இன்றைய ஆட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மத்திய கல்லூரியின் மாணவர் முதல்வர் சபையினால் நடாத்தப்பட்டு வரும் அமரர் பொன். விபுலானந்தன் நினைவுக் கிண்ண கூடைப்பந்தாட்டத் தொடர் யாழ். மத்திய கல்லூரியின் கூடைப்பந்தாட்டத் திடலில் நடைபெற்று வருகின்றது.

இதில் இன்றைய தினம் இரு போட்டிகள் நடைபெறவுள்ளன. இதில் முதல் போட்டியில் சென். ஜோண்ஸ் கல்லூரி எதிர் மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேச பாடசாலை, யாழ். மத்திய கல்லூரி எதிர் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணிகள் மோதவுள்ளன.

இன்றுடன் லீக் சுற்றுப் போட்டிகள் யாவும் நிறைவடைவுள்ளன. இதில் புள்ளிகள் அடிப்படையில் நான்கு அணிகள் அரையிறுதி ஆட்டத்திற்கு தெரிவு செய்யப்படும் எனவும், அரையிறுதி ஆட்டங்கள் எதிர்வரும் 24ஆம் திகதி நடைபெறவுள்ளதாகவும் போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, இப்போட்டித் தொடரின் இறுதி ஆட்டம் எதிர்வரும் 30ஆம் திகதி நடைபெறுவதற்கான ஏற்பாடுகள் யாவும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்தனர்.

# “பகுஜன் ஹிதய.. பகுஜன் சுகய..”

- அ.மார்க்ஸ் -

**பு**த்த பகவனுக்கும் நபிகள் நாயகத்திற்கும் பல வேறுபாடுகள் உள்ளது போலவே பல ஒற்றுமைகளும் உண்டு. இருவருடைய பாதைகளும் “நடு-நிலைப் பாதைகள்” (Middle Paths). இருவரிடத்திலும் extreme நிலைப் பாடுகளைக் காணல் அரிது.

நபிகளின் பாதையில் பாலியல் உணர்வு மறுப்பு (துறவு) புனிதப் படுத்தப் பட்டதில்லை. இந்து மற்றும் கத்தோலிக்க மதங்களில் துறவு நிலைக்கு கூடுதல் மரியாதைகள் உண்டு. புத்த பிக்குகள் என்போர் மக்கள் மத்தியில் அற வழிகளை அடையாளம் காட்டுபவர்கள் மட்டுமே. மற்றபடி பிறப்பு, திருமணம் முதலானவற்றைப் புனிதப்படுத்தும் பொறுப்பு (solemnize) அவர்களுக்குக் கிடையாது. இஸ்லாத்திலும் கூட கிறிஸ்தவத்தில் பாதிரிமார்களுக்கு உள்ளதைப்போல மவுலவிகளுக்கு, இறைவனுக்கும் மனிதர்களுக்கும் இடையேயான தொடர்புக் கண்ணி என்கிற சிறப்பு உரிமை கிடையாது.

மாமிசம் உண்பதில் கூட சமணத்தைப் போல பவுத்தம் extreme நிலைப்பாடுகள் எடுப்பதில்லை. விருந்துகளுக்காகவும், கேளிக்கைகளுக்காகவும் பிராணிகளைக் கொல்வதை மட்டுமே (அகல்பாய மாம்சம்) பவுத்தம் தடை செய்தது.

புத்தர் தன் பாதையை ”மத்திம பதிபாதம்” (நடுநிலைப் பாதை) எனப் பிரகடனம் செய்தார்.



இப்படி நிறையச் சொல்லலாம்.

புத்தருக்கும் நபிகளுக்கும் உள்ள இன்னொரு ஒற்றுமை இருவருமே நுணுக்கமான மயிர் பிளக்கும் தத்துவ விசாரங்களில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டதில்லை.

புத்தர் வாழ்ந்த காலத்தில் (கி.மு 6ம் நூற்றாண்டு) கங்கைச் சமவெளியில் இப்படியான மயிர் பிளக்கும் விவாதங்கள் நடை பெற்றுக் கொண்டிருந்தன. புத்தர் அவற்றில் கவனம் செலுத்தவில்லை. ஆனால் அதே நேரத்தில் அவர் தன் நியாயங்களை மக்கள் மத்தியில் சொல்லாமலும் இருந்ததில்லை. இறுதி முடிவை அவர் மக்களிடமே விட்டார். “உனக்கு நீயே விளக்கு”. என்றார்.

அப்படியானால் தம்ம பதம்?

அது உன் சிந்தனைக்கு ஒரு கைப்பொருளே. அதை அப்படியே ஏற்க வேண்டுமென்பதில்லை. இறுதி முடிவு உன்னுடையதே என்றார்.

புத்தரின் முக்கிய சீடர்களில் ஒருவரான மாலுங்க்ய புத்தன் இதை ஏற்கவில்லை. ஆன்மா பற்றியும் கர்ம வினைகள் பற்றியும் மிகக் கடுமையான விவாதங்கள் கங்கைச் சமவெளியில் நடை பெற்றுக் கொண்டுள்ளபோது நீங்கள் இவற்றில் கலந்து கொள்ளாமலும் உங்கள் நிலைப்பாட்டைச் சொல்லாமலிருந்தாலும் எப்படி?” நீங்கள் இதற்கு பதில் சொல்லாவிட்டால் நான் சங்கத்திலிருந்து விலகிக் கொள்வேன் என பகவன் புத்தரிடம் கெடு விதித்தான்.

புத்தர் திருவாய் மலர்ந்தருளினார். உலக வரலாறு கண்ட மாபெரும் பேராசிரியன் அல்லவா அவர்...

“மாலுங்க்ய புத்தா, ஒரு வீடு தீப்பற்றி எரிகிறது. உள்ளே மக்கள் இருக்கின்றனர்.. என் கவலை அந்த மக்களைக் காப்பாற்றுவது எப்படி என்பதுதான். மாறாக அந்தத் தீ எப்படி உருவானது, அதற்குக் காரணகர்த்தா யார் என்கிற விவாதத்திற்கு எனக்கு இப்போது நேரமில்லை.

அந்த மனிதன் மீது விஷ அம்பு தீண்டிவிட்டது. நான் அவனைக் காப்பாற்ற முனைகிறேன். அந்த விஷத்திற்கு யார் காரணம், அது எப்படி ஏற்பட்டது என்பது குறித்து யோசிக்க இப்போது எனக்கு நேரமில்லை..”

இது புத்த வாக்கு.

மாலுங்க்ய புத்தன், ”புத்தம் சரணம் - சங்கம் சரணம் - தர்மம் சரணம்” என்றான்.

வேறென்ன சொல்ல இயலும்?

புத்த பகவனிடம் ”நன்மை எது, தீமை எது? இரண்டிற்கும் என்ன வேறு-பாடு?” எனக் கேட்டார்கள்.

புழுமுனு ∴ நுஏஜடு இரண்டிற்குமான வேறுபாடு... நல்லது, எது கெட்டது எது?....

எத்தனை முக்கியமான, மதவியலுக்கு மிகவும் அடிப்படையான கேள்வி.

தத்துவங்கள் பதில் தேடி அலையும் அந்தக் கேள்விக்கு புத்த பகவன் மிக எளிதாக தன் பதிலை எந்தத் தயக்கமும் இன்றிச் சொன்னார்.

”பகுஜன் ஹிதய.. பகுஜன் சுகய..”

பெரும்பாலானவர்களுக்கு (பகுஜன்) எது இதமளிக்கக் கூடியதோ, சுகமளிக்கக் கூடியதோ அதுவே நல்லது. பெரும்பாலானவர்க்கு இதம் அளிக்க இயலாதனவற்றையே நாம் தீமை எனலாம்...

எளிய பதில்தான். மிக எளிய பதில்தான். ஆனால் இதன் ஆழம் ”பகுஜன்” என்கிற அந்த ஒற்றைச் சொல்லில் அடங்கியுள்ளது.

பகுஜன்... வெகு ஜனம்.. பெரும்பாலான மக்கள்..

”எல்லோருக்கும்” என்கிற சொல்லை பகவன் உச்சரிக்கவில்லை. ”பெரும்பாலானவர்க்கு” என்றார்.

எல்லோருக்கும் நல்லதாகவோ, தீயதாகவோ எதுவும் இருக்க இயலாது. ஒருவருக்கு நல்லதாக உள்ளது மற்றவர்க்குத் தீயதாக இருக்கலாம்.

அப்படியானால் நல்லது கெட்டதை எப்படித் தீர்மானிப்பது?

பெரும்பாலானவர்க்கு எது நல்லதோ அதுவே நல்லது

பெரும்பாலனவர்க்கு எது தீமையானதோ அதுவே தீது..

”பகுஜன் ஹிதய... பகுஜன் சுகய...”

# கே.வி. மகாதேவன் 15



- பி.ஜி.எஸ்.மணியன் -

“**தை** பிறந்தால் வழி பிறக்கும்” படம் தயாரிப்பில் இருந்த அதே நேரத்தில் மகாதேவனின் நண்பரான ஏ.பி. நாகராஜனின் கதை வசனத்தில் கே. சோமு இயக்கத்தில் இன்னொரு படம் தயாரானது.

எம்.ஆர். ராதா, சௌகார் ஜானகி முக்கிய வேடங்களில் நடித்த “நல்ல இடத்து சம்பந்தம்”.

படங்களில் கோரஸ் பாடிக்கொண்டிருந்த நிர்ம்லா என்ற பாடகியின் மகள்தான் லூர்த்துமேரி ராஜேஸ்வரி. அம்மாவுடன் ஒரு கோரஸ் பாடகியாக திரை இசைத் துறையில் கால்பதித்த லூர்துமேரி ராஜேஸ்வரியின் குரல்வளம் ஏ.பி. நாகராஜன் - கே.வி. மகாதேவன் ஆகியோரது கவனத்தை கவர்ந்ததன் விளைவு “நல்ல இடத்து சம்பந்தம்” படத்தில் மூன்று பாடல்கள் பாடும் முத்தான வாய்ப்பு இவருக்கு கிடைத்தது.

ஏற்கெனவே எம்.எஸ். ராஜேஸ்வரி அந்தக் காலகட்டத்தில் பிரபலமாக இருந்தார். இவரும் ராஜேஸ்வரி என்றால் பெயர்க்குழப்பம் ஏற்படுமே? அதைத் தவிர்ப்பதற்காக அவரது பெயரை கொஞ்சம் சுருக்கி புதிதாக நாமகரணம் செய்தார் ஏ.பி. நாகராஜன்.

லூர்துமேரி ராஜேஸ்வரி - எல்.ஆர். ஈஸ்வரி என்னும் இசைக்குயிலாக மாறி கே.வி.மகாதேவனின் இசை அமைப்பில் முதல் முதலாக “நல்ல இடத்து சம்பந்தம்” கிடைக்க அதைப் பற்றிக்கொண்டு வலது காலெடுத்து வைத்தார்.

“நல்ல இடத்து சம்பந்தம்” - நகைச்சுவை நடிகர் வி.கே. ராமசாமியும், ஏ.பி. நாகராஜனும் இணைந்து “மக்களைப் பெற்ற மகராசிக்கு” பிறகு தயாரித்த படம்.

எல்.ஆர். ஈஸ்வரி ஒரு பாடகியாக அறிமுகமான இந்தப் படத்தில் அவருக்கு மூன்று பாடல்கள்.

“புதுப் பெண்ணே புதுப்பெண்ணே நிமிர்ந்து பாரு” என்ற பாடலை எல்.ஆர். ஈஸ்வரியுடன் சேர்ந்து பாடியவர்கள் கஸ்தூரி, சூலமங்கலம் ராஜலக்ஷ்மி.

ஆனால் படத்தில் பிரபலமான பாடல் என்றால் அது மருதகாசி எழுதிய “பொண்ணு மாப்பிளே ஒண்ணா போகுது ஜிகுஜிகு வண்டியிலே” பாடல் தான். இந்தப் பாடலையும் கஸ்தூரி, சூலமங்கலம் ராஜலக்ஷ்மி இருவருடனும் சேர்ந்து பாடியிருந்தாலும், மூவர் குரலிலும் ஈஸ்வரியின் குரல் தனியாக ஒலித்து அவரை அடையாளம் காட்டியது.

“இவரே தான் அவரு.” பாடல் எல்.ஆர். ஈஸ்வரி தனியாகப் பாடிய முதல் பாடல்.

1958ஆம் ஆண்டு கே.வி. மகாதேவனின்



எல்.ஆர். ஈஸ்வரி

இசை அமைப்பில் வெளிவந்த படங்களில் கண்டிப்பாக ஒன்று அல்லது இரண்டு பாடல்களாவது “ஹிட்” பாடல்களாகி விடும்.

“பெரிய கோவில்” என்ற படம். கே.சோமுவின் இயக்கத்தில் ஏ.பி. நாகராஜனின் கதை வசனத்தில் வெளிவந்த படம்.

பிரேம் நசீர், எம். என். ராஜம், கண்ணாம்பா, வி.கே. ராமசாமி, கள்ளபார்ட் நடராஜன், சந்திரகாந்தா ஆகியோர் பிரதான வேடங்களில் நடித்திருந்தனர்.

மருதகாசி எழுதி கண்ணாம்பா பாடுவதாக அமைந்த “கண்ணே கமலப்பூ காதிரண்டும் வெள்ளரிப்பூ” என்று தொடங்கும் பாடல் பி. லீலா பாடிய மிகச் சிறந்த பாடல்களில் ஒன்று.

தன் மகனின் குழந்தைக்கு பாட்டுப்பாடி ஒரு தாய் சாப்பிடவைப்பது போன்ற ஒரு காட்சி அமைப்பு. சாதரணமாக இந்த மாதிரி “குழந்தையைக் கொஞ்சும் பாடலா. கூப்பிடு ஆர். பாலசரஸ்வதியை” என்று அவரைத்தான் கூப்பிட்டு பாடவைப்பார்கள்.

ஆனால்.. மகாதேவனோ பி. லீலாவைப் பாடவைத்திருக்கிறார். பி. லீலாவின் குரல் சற்று காத்திரம் மிகுந்த குரல். அழுத்தம் தொனிக்கும் குரல். அந்தக் குரலில் இப்படி ஒரு மென்மையான பாடலா என்று வியக்க வைக்கிறது “கண்ணே கமலப்பூ” பாடல்.

பெரிய கோவில் படத்தில் பிரபலமான இன்னொரு ஜோடிப்பாடல்.

“வலை வீசம்மா வலை வீசு. வாளை மீனுக்கு வலை வீசு” பாடல். சீர்காழி கோவிந்தராஜனும், பி. சுசீலாவும் பாடி இருக்கிறார்கள். வலையை இருவரும் வாளைமீனுக்கு வீசவில்லை. கேட்பவர்கள் மனதுக்கு அல்லவா வீசி இருக்கிறார்கள்!.

தொடர்ந்து சின்னப்பா தேவரின் “செங்கோட்டைச் சிங்கம்” படத்துக்கு இசை அமைத்தார் கே.வி. மகாதேவன். படம் வெற்றி பெறவில்லை என்பதால் பாடல்களும் நம் செவிப்புலன்களை ஈர்க்கத் தவறிவிட்டன.

அதே ஆண்டு (1958) கே.வி. மகாதேவன் - ஏ.பி. நாகராஜன் - கே. சோமு ஆகிய மூவர் கூட்டணி இன்னொரு மகத்தான வெற்றிச் சாதனையைப் புரிந்தது.

தமிழ்ப் புத்தாண்டு தினத்தில் வெளிவந்த அந்தப் படத்தில் இடம் பெற்ற பாடல்கள் மகாதேவனின் திறமையை மிகச் சிறப்பாக வெளிப்படுத்தி ஒரு முதல் தரமான இசை அமைப்பாளர் என்ற புகழை அவருக்கு கொண்டுவந்து சேர்த்தன.

அந்தப் படம் தான் “சம்பூர்ண ராமாயணம்”.

(தொடரும்)

"மெட்ராஸ்" திரைப்படம், "கறுப்பர் நகரம்" என்கிற வரவிருக்கும் திரைப்படத்தின் நகல் என்ற குற்றச்சாட்டு இணையத்தில் பரபரப்பாக விநியோகப்பட்டுக் கொண்டிருக்கிறது. மெட்ராஸ் திரைப்படம் (படத்தில் வெளிப்படையாக இல்லாவிட்டாலும்) தலித் அரசியல் எழுச்சியைப் பற்றி உரையாடுவதால் இது வெற்றி பெற்று விடக்கூடாது அல்லது அதிகம் பாராட்டப்பட்டு விடக்கூடாது என்று சிலர் விரும்புவதாக தெரிகிறது.

ஆதிக்கச்சாதி உணர்வுள்ளவர்களுக்கு இந்தக் கட்டுரை உற்சாகத்தை அளிக்கக்கூடும். கட்டுரையில் விவரிக்கப்பட்டிருக்கும் தகவல்களிலேயே எதைக் குறித்து இயங்குகிறது என்பதை நோக்காமல் சில சாயல்களைப் பார்த்தே இது நகல் என்று முடிவு செய்வது நம்மிடையே சினிமா குறித்த அபத்தமான அறிவையே காட்டுகிறது.

மெட்ராஸ் திரைப்படக் கதையின் சாயலில் ஏற்கெனவே கமல் நடித்த சத்யா, பாரதிராஜாவின் என்னுயிர்த் தோழன், செல்வராகவனின் புதுப்பேட்டை போன்றவை வந்திருக்கின்றன. எனவே அவைகளிலிருந்து மெட்ராஸ் திருடப்பட்டது என்று ஒருவர் சொல்வராயின் அவருக்கு ஒரு திரைப்படத்தை அணுகுவதில் உள்ள முதிர்ச்சியின்மையையே அது சுட்டிக் காட்டுகிறது.




# "மெட்ராஸ்" நகலா?

- சுரேஷ் கண்ணன் -


நிறைய குளறுபடிகள் இருப்பதை அந்தக் கட்டுரையை நிதானமாக வாசித்தால் உணர முடியும்.

முதலில் கறுப்பர் நகரம் வெளிவந்தால்தான் இதற்கும் மெட்ராஸ் திரைப்படத்திற்குமான ஒற்றுமைகளைப் பற்றி பேச முடியும். கறுப்பர் நகரம் வெளிவந்த பிறகு அதற்கும் மெட்ராஸுக்குமான பல ஒற்றுமைகள் தெரியவந்து அது நகல் என்று அறியப்பட்டால் மெட்ராஸ்ஸின் இயக்குநரை காட்டமாக விமர்சிப்பதில் தவறில்லை. ஆனால் நீதியை நிலைநாட்ட அதற்குள் ஏன் இத்தனை அவசரமும் பதட்டமும்?

"வெயில்" திரைப்படம், சினிமா பாரடைசோ என்னும் அயல்சினிமாவின் நகல் என்று அது வந்த காலத்தில் உரையாடப்பட்டுக் கொண்டிருந்ததை கேள்விப்பட்டு தமிழ் திரைப்படத்தைப் பார்த்த பிறகு சிரிப்பாக வந்தது. இரண்டிலும் சினிமா தியேட்டர் வருவதால் அது நகல் என்று சில அரைகுறைகள் உடனடியாக முடிவு செய்து விட்டன. படத்தின் மையம்

ஒரு திரைப்படத்தின் மையம், அதை நோக்கி படம் இயங்கும் விதம், பின்புலம், அதன் நுண்விவரங்கள் சித்தரிக்கப்பட்டிருக்கும் விதம், திரைக்கதை, அது முன்வைக்கும் நீதி மற்றும் அரசியல் என்று பல வி'யங்களினால்தான் ஒரு நவீன படைப்பு வேறுபடுகிறது. இல்லையெனில் நம்முடைய புராண சம்பவங்களிலிருந்துதான் ஒரு நவீன திரைப்படத்தின் கதை திருடப்பட்டிருக்கிறது என்று எளிதாக தரவுகளை முன்வைக்க முடியும். அவசரமாக தீர்ப்பெழுதி விட முடியும்.

பல காலமாக புழுத்துக் கொண்டிருந்த தமிழ் சினிமாவில் சமீபத்தில்தான் சில குறிப்பிடத்தக்க மாற்றங்கள் உருவாகிக் கொண்டு வருகின்றன. விளிம்பு நிலைகள் மையத்தை நோக்கி நகர்ந்து வருகின்றன. அதையும் இத்தகைய உள்நோக்கம் கொண்ட அரசியலும் தவறான பரப்புரையும் பாழ்படுத்தி விடுமோ என்கிற கவலையால்தான் இதை எழுதவேண்டியிருக்கிறது.



# பாத்திரங்கள் பளபளக்க...

* வெள்ளிப் பாத்திரங்களுக்கு பற்பசையை நன்கு தடவி பின் தேய்த்தால் பளபளப்பாக இருக்கும்.

* வெள்ளிப் பாத்திரங்களைக் கழுவும் தண்ணீரில் சிறிது பாலைச் சேர்த்தால் வெள்ளிப் பாத்திரங்கள் பளபளக்கும்.

* செம்பு மற்றும் பித்தளைப் பாத்திரங்கள் மேல் படிந்திருக்கும் பச்சை நிறத்தைப் போக்க வினீகரையும், உப்பையும் கலந்து நன்கு தேய்த்துக் கழுவ வேண்டும்.

* பாத்திரங்களைக் கழுவும் நீரில் அவ்வப்போது சிறிது வினீகரைச் சேர்த்து கழுவினால் பாத்திரங்கள் மின்னும்.

* கண்ணாடிப் பாத்திரங்களைக் கழுவும் தண்ணீரில் சிறிது துணிகளுக்குப் போடும் நீலத்தைக் கலந்து கழுவிப் பின்னர் வெந்நீரில் கழுவினால் பளபளக்கும்.

* கண்ணாடி, பீங்கான் கப், டம்ளர்கள் அழுக்காக கறை படிந்திருந்தால் தண்ணீரில் எலுமிச்சைச் சாறைப் பிழிந்து அந்த நீரை கண்ணாடி டம்ளர், பீங்கான் கப்பில் ஊற்றி பல மணி நேரம் வைத்துவிட வேண்டும். பிறகு எடுத்துத் தேய்த்தால் பளிச்சிடும்.

* குளிர் காலங்களில் முகம் பார்க்கும் கண்ணாடிகளில் சவர்க்கார நீரை நன்கு தடவி பின்னர் மெல்லிய துணியால் துடைத்தால் புகை படிந்தது போல் ஆகாமல் பளபளக்கும்.

* பிளாஸ்க்கில் உள்ள துர்வாடையைப் போக்க அதன் உள்ளே மோர் மற்றும் உப்பு ஊற்றி நன்றாக குலுக்கி அதை கொட்டிவிட்டு தண்ணீரை ஊற்றிக் குலுக்கி கழுவ் வேண்டும்.

* உலோகங்களின் மேல் உள்ள துருவைப் போக்க பேனா மை கொண்டு துடைக்க வேண்டும்.

* தோல் பேர்ஸ், பெட்டிகளின் மேல் சிறிது எலுமிச்சைச் சாற்றை ஒரு பழைய துணியால் நன்கு தேய்த்தால் புதிது போல் மின்னும்.

* மெல்லிய டிஷ்யூ மற்றும் செய்தித்தாள்களால் துடைத்தால் கண்ணாடி ஜன்னல்கள் பளபளக்கும்.



# தீட்டும், துடக்குக் கழித்தலும்

## வெளிவாயன் வேலாயுதன் சொல்லுவது....

இந்து சமயத்திலை ஆசௌசம், தீட்டு எண்டு இருக்குதல்லே. இதுகளையெல்லாம் கரைச்சுக் குடிச்சவர்தான் எங்கடை விக்கியண்ணை. அவருக்கு நல்லாய்த் தெரியும் பொருளுகளிலை தீட்டு இல்லை. மனிசரிலைதான் இருக்குதெண்டு. அரிசியிலை தீட்டு இல்லை. ஆனால் மனிசராலை சமைக்கப்பட்ட சோறு தீட்டுப் பொருள். துடக்கு வீட்டுக்காரர், அவையோடை கை அலம்பினவை எல்லாரும் தீட்டுக்கு உரியவைதான்.

அதாலைதான் ஜனாதிபதி வந்த நேரம் விக்கியண்ணை வரேல்லை. அதுக்கு முதல் பேச அழைச்ச போதும் போகேல்லை. இந்தியாவுக்கு வாங்கோ எண்டு கூப்பிடேக்கையும் போகேல்லை. தீட்டுப் பட்டிடுமல்லே.

ஆனால் ஆளுநரைத் தவிர்க்கிறதுக்காக ஜனாதிபதியிட்டை போய் சத்தியப் பிரமாணம் எடுக்கிறது தவறோ தீட்டோ இல்லைப் பாருங்கோ. அதைப் போல ஒருங்கிணைப்புக் கூட்டத்திலை தலைப்பாகை கட்டிக் கொண்டு அடுத்த தீட்டுக்காரரான டக்ளஸோடை சேர்ந்திருக்கிறதும் தப்பில்லை. இதைப் பற்றி ஆசௌச தீபிகை என்ற நூலிலை சொல்லப்பட்டிருக்கு. நீங்கள் படிக்கலாம். (கடையிலை புத்தகமில்லை)

ஜனாதிபதிக்கு என்ன தீட்டு எண்டு கேக்கிறியளே! 2009ஆம் ஆண்டு யுத்தத்திலை இவ்வளவு இழப்புக்களும் ஏற்படக் காரணமாக இருந்தவர். அதுக்குப் பிறகு அபிவிருத்தி எண்டு கட்டடங்களையும், வீதியளையும் அமைச்சுக் குடுத்தும், வாழ்வாதார உதவியளைச் செய்தும் போராட்ட உணர்வைத் திசை திருப்பியவர். இதை ஆமோதிச்சதாலை டக்ளஸ்ஸும் தீட்டுக்கு உரியவர். எனவே இவையோடை உறவைப் பேணுறது தீட்டான விசயந்தானே.

அதாலைதான் இப்ப சுரேசும், செல்வமும், சித்தரும் தீட்டாய்த் தெரியினை. விக்கியண்ணை பேனையைப் பிடிச்சு மரண தண்டனைத் தீர்ப்பைச் சொல்லியிருப்பார். ஆனால் இவை துப்பாக்கியைத் தூக்கியல்லே மரண தண்டனைத் தீர்ப்பை வழங்கினவை. எனவே இவையும் தீட்டுக்கு உரியவையே.


பொருளுகளிலை தீட்டு இல்லை. அரசாங்கத்தாலை மாகாண முதலமைச்சருக்கும், அமைச்சர்மாருக்கும் வழங்கிற சொகுசு கார்களிலை நூறு வீதம் தீட்டு இல்லை. ஏனெண்டால் அது யப்பானிலை தயாரிக்கப்பட்டு இவையின்ரை கை படாமல் புத்தம் புதிசாய் அனுப்பி வைக்கப்பட்டவையல்லே.

அதோடை இவருக்கு பாதுகாப்பு வழங்குகிற அஞ்சாறு சிங்கள பொலிஸும், அவை பயன்படுத்திற வாகனமும் தீட்டு இல்லைப் பாருங்கோ. முந்தின வேலையிலையும் அவைதானே பாதுகாப்புக்கு இருந்தவை. அவை "பப்ளிக் சேவன்ற்" எண்டதாலை அதுவும் தீட்டில்லை. இராணுவம் 'பப்ளிக் சேவன்ற்" இல்லை. அதாலை அவை தீட்டு.

முப்படைத் தளபதி எண்டதாலையும் ஜனாதிபதிக்குத் தீட்டு. அவருக்குக் கீழை இருந்தாலும் முதலமைச்சர் பாதுகாப்புக்கு நிக்கிற பொலிசுக்குத் தீட்டு இல்லை. (இதைப் பற்றி விளங்க வேணுமெண்டால் நீங்கள் லொஜிக் படிக்க வேணும்)

இலங்கை அரசாங்க அமைச்சர்களிலை வாசுதேவ நாணயக்காரவுக்கு மட்டும் தீட்டு இல்லை. அவர் விக்கியண்ணையின்ரை சம்மந்தி என்பதற்காக மட்டும் தீட்டு இல்லை. அவர் இந்த அரசாங்கத்தோடை ஒட்டியிருந்தாலும் அவர் இந்த அரசாங்கத்தின்ரை கொள்கையைப் பிரதிபலிக்கவில்லை பாருங்கோ. அவர் இரண்டு மொழியையும் எப்பிடி பெயர்ப் பலகையிலை கொண்டு வாறது எண்டதிலைதான் குறியாய் இருக்கிறார்.

எனவே அவர் அரசாங்கத்தின்ரை கொள்கையைப் பிரதிபலிக்கவில்லை. எங்கடை அமெரிக்க, மேற்குலக சார்பு நிலைப் பாட்டுக்கு அவர் குறுக்கை நிக்க மாட்டார். இடைக்கிடை சம்மந்தியான விக்கியண்ணைக்கு சாட்டையடி குடுக்கிற மாதிரி ஏதாவது சொன்னாலும் அது அரசாங்கத் தைத் திருப்திப்படுத்தத்தான் பாருங்கோ. நீங்கள் தவறாக அவரை அரசாங்கத்தின்ரை ஆள் எண்டும், தீட்டான ஆள் எண்டும் கருதிப் போடாதேங்கோ.



ஆனால் அடுத்த கூட்டத்திலை ஒரு தீர்க்கமான தீர்மானம் எடுக்க வேணும். மாகாண சபையிலை குழப்பங் காச்சியாய் இருக்கிற சிவாசியரை தள்ளி வைக்கத்தான் வேணும். இந்தச் சபையிலையே அதிகம் தீட்டுப்பட்டவர் அவர்தான். ரெலோவிலை ஆயுதம் தூக்கினவர். பிறகு இந்தியன் ஆமியோடை சேர்ந்து நிண்டவர். அதுக்குப் பிறகு இலங்கை ஆமியோடை கடைசி கொஞ்சக் காலம் பிரபாகர னோடை. காலாதிகாலமாய் ஆயுதத் தீட்டோடை இருக்கிற சிவாசியர் எங்கடை விக்கியண்ணை யைப் பார்த்துக் கை நீட்டி "தமிழினத்தின் துரோகி விக்கி எண்டு சொல்லுற காலம் விரைவிலை வரும்" எண்டு நாக்கிலை நரம்பில்லாமல் சொல்லு றார். எனவே, இந்தத் தீட்டுக்காரனை அடுத்த அமர்விலை எண்டாலும் விலக்கி வைக்க வேணும். அப்பிடி விலக்கியும் சிவாசியர் மாகாண சபைக்கு வந்தால் என்ன செய்யுறது? துடக்கு வீட்டுக்குப் போனால் என்ன செய்யிறனாங்கள்? அள்ளித் தோயுறதுதானே! மாகாண சபைக் கூட்டம் முடிஞ்சதும் வீட்டுக்கு வந்து அள்ளித் தோய்ஞ்சு சிவாசியற்றை துடக்கைக் கழிக்கலாந்தானே!




*(சென்ற வாரத் தொடர்ச்சி....)*

வெளிக்கேற்றை மறைத்தபடி வரிசையாக காட்சிக்கு வைக்கப்படும் சிறிய ரக தென்னங்கன்றுகளை வைத்து வெளியிலிருந்து பார்த்தால் உள்ளே நடப்பது அத்தனை தெளி

அதை கவனிக்காமல் போன துரை வேலனை சுருங்கிய நெற்றியுடன் பார்த்துக்கொண்டே நல்லசிவத்திடம் வந்தார் பிரதீபன். அவர் கையில் சில காகிதங்கள்.

"சார்"

"சொல்லுங்க பிரதீபன், லிஸ்ட் ரெடியா?" "எஸ் சார், தோ" என்ற படி நீட்ட பெற்றுக்கொண்டு "நீங்க போலாம். தேவைப்பட்டா கூப்பிட றேன்" என்றபடியே அவர் தந்த காகிதங்களில் ஆழ்ந்தார் நல்ல சிவம்."சரி சார்" என்ற பிரதீபனோ இவரிடமும் இருந்த அலட்சியத்தை துரைவேலனிடமிருந்ததோடு ஒப்பிட்டு விட்டு என்ன தப்பு செய்தோம்,

அந்தப் பொண்ணு வயித்துல கத்தியால குத்தப பட்டு செத்திருக்கா. அதுவும் வலது பக்கத் துல. ஒரு வலதுகைப் பழக்கத்துக்காரனால குத்தினா, அவளுக்கு இடது பக்கமாதான் குத்த முடியும். அதுவும் இல்லன்னா நடுவுல குத்தலாம். வலது பக்கமா குத்தனும்னா குத்தினவன் இடதுகை பழக்கக்காரனா தான் இருக்கணும்.

# யார் கொலையாளி?

வாகத் தெரியாத படிக்கு மறைத் திருந்தனர். இது அந்த பிரதீபனின் வேலையாகத்தான் இருக்குமென்று நினைத்துக்கொண்டார். தொழில் சுத்தத்தையும், வேலை சுத்தத்தை யும், சரியான நேரத்தில் காட்டு கிறார்கள். தனியார் அல்லவா. ரிசார்ட் பெயர் கெட்டுப்போகாமல் இருக்க எத்தனை வேலைகள் செய்கிறார்கள்?. இவர்களே அரசு வேலைக்கு என்று வந்துவிட்டால் இந்த வேகத்தில் சிந்திப்பார்களா? நடந்துகொள்வார்களா? என்றும் தோன்றியது அவருக்கு.



"என்ன சிவம், கேஸ் எப்படி போகுது?" சத்தம் கேட்டு திரும்பி னார் நல்லசிவம். பக்கவாட்டிலி ருந்து வெளிப்பட்டார் துரை வேலன். உதவி கமிஷனர்.

"சார், நீங்க என்ன சார் இங்க, ஒரு ஃபோன் பண்ணியிருக்கலாமே. ஸ்டேடஸ் அப்டேட் பண்ணிருப் பேனே சார்"

"அட இருக்கட்டும். மினிஸ்டர் ப்ரஷர். அதான் நானே வந்தேன். சொல்லுங்க. கொலையாளிய கண்டுபிடிச்சிட்டீங்களா? அந்தப் பையன் தானா?" அவர் கேட்ட தோரணையில், அவர் தனக்கு முன்பே பிரதீபனை சந்தித்துவிட்டு வந்திருப்பாரோ என்று தோன்றியது.

"தெரியல சார். ஐ ஆம் ஜஸ் கம் போஸிங் சார்".

"ஓகே டேக் யுவர் டைம் பட் ஈவ்னிங் வரை தான் டைம் நமக்கு இங்க இன்வெஸ்டிகேஷன் கன்டின்யூ பண்ண. மினிஸ்டர் ப்ரஷர். என்ன வேணா பண்ணுங்க. ஆனா இங்க பண்ணாதீங்கன்னு. சோ, ஒரு விஷயம் தெளிவாகுது. இதுல மினிஸ்டர் சம்பந்தப்படல. அவ்ளோதான். "சொல்லிவிட்டு சிரித்தார் துரைவேலன். பதிலுக் கோர் சிரிப்பால் அவரை ஆமோ தித்தார் நல்லசிவம்."ஆமா, சார். தட்ஸ் ஸ்ட்ரேயட் சார்"

"ஓகே சிவம். கன்டின்யூ. யார்னு தெரிஞ்சதும் உடனே எனக்கு கால் பண்ணுங்க சரியா?" சொல்லிவிட்டு நல்லசிவத்தை ஏறிட்டார் துரை வேலன். "ஓகே சார்". ஆமோதித்து விட்டு அமைதியாய் சிரித்தார் நல்லசிவம். அவரின் புன்னகையை பார்த்துவிட்டு திரும்பி நடந்தார் துரைவேலன். கேஸில் நல்லசிவம் ஒரு நல்ல க்ரிப்பில் இருப்பதாகத் தோன்றியது அவருக்கும். அவர் இதைத்தெரிந்து கொள்ளத்தான் இத்தனை தூரம் நேரில் வந்திருந் தார் என்பது நல்லசிவத்துக்குத் தெரியும். இந்தப் புன்னகையைத் தான் துரைவேலன் எதிர்பார்க்கி றார் என்பது நல்லசிவத்துக்கும் தெரியும். கடந்து போய்க்கொண்டி ருந்த துரைவேலனுக்கு மரியா தையாய் கையை முகத்துக்கு நேராய் தூக்கி வணக்கம்சொல்ல,

ஏனிப்படி என்று நினைத்தபடியே ஒரு வித ஆயாசத்துடன் திரும்பி நடந்தார். நல்லசிவம் லிஸ்டைப் பார்க்கத்துவங்கிய கொஞ்ச நேரத்தி லேயே, மாணிக்கம் கையில் திறந் திருந்த ஒரு லாப்டாப்புடன் நல்ல சிவத்தின் அருகில் வந்து நின்று நல்லசிவத்தின் காதுகளில் சில விவ ரங்களைக் கூறினார். அவற்றை லாப்டாப்பில் சரிபார்த்துக்கொண்டே வெகு நேரம் அந்த லிஸ்டையே பார்த்துவிட்டு, ஒரு முடிவுக்கு வந்தவ ராய் ஒரு நீண்ட பெருமூச்சுடன் திரும்பி சற்று தொலைவில் அந்த சொகுசு அறைகள் இருந்த திசை யில் நடந்தார் நல்லசிவம். லாப் டாப்பை மூடி கக்கத்தில் சொருகிக் கொண்டே மாணிக்கம் தொடர போகும்வழியில் இன்னும் சில பொலிஸ்காரர்களையும் கையசைத்து வரவழைத்துக்கொண்டார் நல்லசிவம். நேராக, ரிசார்டின் வெளிகேட்டருகே இருந்த முதல்தள சொகுசு அறை நோக்கி நடந்து, மாடி ஏறி, கதவருகே நின்று கதவைத் தட்டினார். கதவைத் திறக்க சற்று நேரமாவதை அவ தானித்தபடியே அவர் அங்கு நிற்கை யில் கதவு மெதுவாகத் திறந்தது. உள்ளிருந்து மாநிறத்தில் ஆறடி உயரத்தில் தொந்தியுடன் ஒருவர் வெளிப்பட்டு

"எஸ்,.... சொல்லுங்க" என்றுவிட்டு கதவை முழுக்கத்திறந்து விட்டார். "ஹலோ சார், ஐ ஆம் சிவம், இன் சார்ஜ் ஆஃப் திஸ் மர்டர் கேஸ். சாரி, உங்க ஹாலிடேல தொந்தரவு பண்றதுக்கு" உள்ளே செல்லாமல் நின்ற இடத்தில் நின்றபடியே சொல்லி விட்டு சிரித்தார் நல்லசிவம்.

"அதனால என்ன பரவால்ல சார், சொல்லுங்க" என்ற சூங்கரின் முகம் சற்று அசூயையுடன் இருப்பதாகத் தோன்றியது. "சங்கர்ங்கறது நீங்கதானே?" "ஆமா சார்" "சங்கர், நீங்க கொஞ்சம ஸ்டேஷனுக்கு வரமுடியுமா?" "ஸ்டேஷனுக்கா? நானா? ஏன் சார்" "இங்க ஒரு கொலை நடந்திருக்கு. எனக்கு உங்க மேல சந்தேகமா இருக்கு. அதனால".

"என்ன!! சார், எது பேசறதா இருந் தாலும் யோசிச்சுப்பேசுங்க"

"கரெக்ட், யோசிச்சுப் பார்த்தா நீங்க தான் கொலையாளின்னு தோண் றது" "வாட், என்ன சார், விளை யாடுறீங்களா?" "யாரு நானா? இலல நீங்களா?" "நீங்கதான. எதை வச்சு சார் என்ன கொலைகாரன்னு சொல்றீங்க?" "உங்க கைய வச்சித் தான்" "என்ன!!.. கையா? என்ன சொல்றீங்க?" "என்ன உளருரீங்க நீங்க. எப்படி சார். அந்தப் பொண்ண எனக்கு சுத்தமா தெரி யாது. அப்புறம் எப்படி அவ்ளோ 'யூரா சொல்றீங்க நாந்தான் கொலை பண்ணினேன்னு" "ஹ்ம்ம் குட்கொஸ் டின். அந்தப் பொண்ணு வயித்துல கத்தியால குத்தப்பட்டு செத்திருக்கா. அதுவும் வலது பக்கத்துல. ஒரு வலதுகைப்பழக்கத் துக்காரனால குத்தினா, அவளுக்கு இடது பக்கமா தான் குத்த முடியும். அதுவும் இல் லன்னா நடுவுல குத்தலாம். வல்து பக்கமா குத்த னும்னா குத்தினவன் இடதுகை பழக்கக்காரனாதான் இருக்கணும். இந்த ரிசார்ட்ல இன் னிக்கு யாருமே அப்படி இல்ல உங்களத்தவிர. யு ஆர் த ஒன்லி லெஃப்ட் ஹான்டர்"

"சோ!!.. சோ வாட் இஃப் ஆம் எ லெஃப்ட் ஹான்டர்?.. நாந்தான் கொன்னிருக்கணுமா? அந்தப் பொண்ண எனக்கு தெரியவே தெரி யாது. நான் எதுக்கு கொல்லணும்?"

"குட். ரெண்டாவது ரீஸன். அந்தப் பொண்ண உங்களுக்குத் தெரியும். ஆனா, இப்ப தெரியாதது மாதிரி நடிக்கிறீங்க. கொலை நீங்க பண்ண லன்னா ஏன் நடிக்கனும்? பொய் சொல்லனும்?""வாட் டு யூ மீன்?"

"ஐ மீன், உங்களுக்கு அந்தப் பொண்ண ஏற்கனவே தெரியும். ஒரு வரு'ம் முன்னாடி பாக்பேன்னு ஒரு கம்பெனில நீங்க ரெண்டு பேரும் ஒண்ணா வொர்க் பண்ணிருக்கீங்க. கம்பெனி மூலமா கிடைச்ச கார் போரெட் ஆஃபர்ல தான் இந்த ரிசார்ட்ல கோல்டன் மெம்பர் ஆகியிருக்கீங்கன்னு இந்த ரிசார்ட்ல பதிவாகியிருக்கு.

உங்க கம்பனி பேர்ல மெயில் ஐடி யூஸ் பண்ணி அந்தப் பொண்ணு கூகிள் க்ரூப் தொடங்கியிருக்காங்க. அதுல நீங்க மெம்பர் ஆயிருக்கீங்க. போன மாசம் , அந்த கம்பெனிய விட்டு உங்கள வெளியேத்தியிருக்காங்க. அதுக்குக் காரணம் அவுங்க உங்க மேல கொடுத்த செக்ஸுவல் ஹராஸ்மெண்ட் கம்ப்ளெய்ன்ட்ன்னு அந்த க்ரூப்ல அப்டேட் பண்ணிருக்காங்க. அது பிறபாடு டிலிட் பண்ணப்பட்டிருக்கு. ஆனா, கூகிளோட இன்டெக்ஸ்ல அது அப்டேட் ஆகல. சோ இப்பவும் சர்ச் ரிசல்ட்ஸ்ல அது வருது. இது போதாதா? அந்தப் பொண்ண பழிவாங்க நினைச்சிருக்கீங்க. அவுங்க நீங்க தங்கியிருக்கிற ரிசார்ட்லயே ட்ரீட்க்கு வந்தது உங்களுக்கு தோதா போயிடிச்சி. அந்தப் பையன் ரெஸ்ட்ரூம் போய்ட்டு வர பத்து நிமி'த்துக்குள்ள ஒருத்தனால கொலைப் பண்ண முடியும்னா அது

## துப்பறியும் சிறுகதை

இந்த ரிசார்ட்டுகுள்ள இருக்குற ஒருத்தனாலதான் முடியும். கொலையாளி ஒரு லெஃப்ட் ஹாண்டர். இந்த ரிசார்ட்ல இன்னிக்கு உங்களைத் தவிர வே லெஃப்ட் ஹான்டர்ஸ் இல்ல. கொலைப்பழி யார் மேலயாச்சும் விழட்டும்னு நீங்க கொலை பண்ணிருக்கீங்க. ஆனா, நீங்க கொலைப்பண்ணும்போது அந்தப் பையன் ரமே' ஒரு வலது கை பழக்கக்காரன்ங்கறத கவனிக்காம விட்டுட்டீங்க." என்றுவிட்டு மாணிக்கத்திடம் திரும்பினார் நல்லசிவம். அதிர்ச்சியாய் சங்கர் நல்லசிவத்தையே பார்த்தபடி நின்றிருந்தான்.

"மாணிக்கம், இவரை அரெஸ்ட் பண்ணி ஜீப்ல ஏத்துங்க. அப்பிடியே இந்த ரூமை தரோவா செக் பண் ணுங்க. கொலைக்கு பயன்படுத்தின கத்திய இவரு வேற எங்கேயும் தூக்கி போடலன்னா அது இங்க தான் இருக்கணும். இங்க இல்லன்னா இவரு எங்கயாச்சும் தூக்கிப் போட்டிருக்கலாம். அத லாக்கப்ல வச்சி விசாரிச்சா தெரிஞ்சிடும். கோ அஹெட்" என்றார் நல்லசிவம்.

"நோ, திஸ் இஸ் அப்சர்டு. யு கான்ட் டூ திஸ். என் வக்கீல் கேட்டுத்தான் நான் பேசுவேன். லீவ் மீ...." என்றவாறே திமிறிய சங்கரை சில காக்கிச்சட்டைகள் வலுக்கட்டாயமாக போலீஸ் ஜீப்பை நோக்கி தள்ளிக்கொண்டு போக, பாண்ட் பாக்கேட்டில் கைவிட்டு செல் ஃபோனை எடுத்து துரைவேலனுக்கு லைன் போட்டார் நல்லசிவம்.

*முற்றும்.*

# நகர்ப்பகுதி பாடசாலைகளை விரும்பும் பெற்றோரின் அபிப்பிராயம் மாறவேண்டும்

- வடமாகாண சபை உறுப்பினர் சித்தார்த்தன் தெரிவிப்பு -

நகரப்புறப் பாடசாலைகளில் கல்வி கற்று வந்தால் சிறந்த பெறுபேறுகளை பெறலாம் என்ற நப்பாசையில் பெரும்பாலான பெற்றோர் நகரப்பகுதியிலுள்ள பிரபல்யமான பாடசாலைகளை நாடுகின்றனர். ஆனால ஐந்தாம் தரப் புலமைப்பரிசில் பரீட்சையில் கிராமத்துப்புற பாடசாலை மாணவர்களே அதிகளவில் சித்திபெற்றுள்ளனர். எனவே பெற்றோர் தமக்கு அயலில் உள்ள பாடசாலைகளில் தமது பிள்ளை களைச் சேர்க்க முன்வர வேண்டும். என வட மாகாண சபை உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரிவித்தார்.

கோண்டாவில் இந்துக் கல்லூரியின் பரிசளிப்புவிழா கல்லூரி அதிபர் க.தவகீஸ்வரன் தலைமையில் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது. அவர்களைக் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

கிராமப்புற பாடசாலைகளின் அதிபர், ஆசிரியர்கள் அர்ப்பணிப்புடன் சேவையாற் றுகிறார்கள். இந்தப்பாடசாலை களுக்கு அரசாங்கம் நகர்புறப் பாடசாலைகளுக்குச் சமனாக எல்லா வளங்களையும் வழங்கி வருகிறது.

இன்று, பாடசாலைக்குச் செல்லும் பிள்ளை வீடு திரும்பி வருவானா என்ற அளவில் நாட்டில் மோசமான நிலைமை காணப்படுகிறது. ஆகவே பெற்றோர் தமக்கு அயலில் உள்ள பாடசாலைகளில் பிள்ளைகளைச் சேர்ப்பதன் மூலம் நேரடியாகக் கண்காணிக்க முடியும்.

எமது பொருளாதாரத்தின் அடிப்படையாக விளங்குவது கல்வி, எல்லாப்பிள்ளைகளும் நல்லமுறையில் கல்வியைப் பெறவேண்டும் ஒவ்வொரு வரும தமது சொந்தக்காலில் நிற்பதற்கு கல்வி உறுதுணையாக இருக்கும் எமது பிள்ளைகள் கல்வியில் மட்டுமன்றி விளையாட்டுத்துறையிலும் முன்னிலையில் நிற்பதற்கு பெற்றோர் ஊக்குவிக்க வேண்டும என அவர் குறிப்பிட்டார். (10)

## நடமாடும் சேவை

(யாழ்ப்பாணம்)

யாழ்.பொதுசன நூலகத்தினால் பாடசாலைகளில் நடமாடும் நூலக சேவை நடத்தப்படவுள்ளது.

யாழ்.மாவட்ட பாடசாலைகளின் இச்சேவையைக் பெறவிரும்பும் பாடசாலைகள் யாழ்ப்பாண பொதுசன பிரதம நூலகருடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

மாணவர்களிடையே வாசிப்பு பழக்கத்தை ஏற்படுத்தும் முகமாகவே இந்நடமாடும் சேவை நடாத்தப்படுவதாக ஏற்பட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.

# முதியோர் தினத்தை முன்னிட்டு நடாத்தப்பட்ட மாணவர்களுக்கான போட்டி முடிவுகள்

நேற்றைய தொடர்ச்சி ...

சர்வதேச முதியோர், சிறுவர், மாற்றாற்றல் உடையோர் தினங்களை முன்னிட்டு நல்லூர் கோட்ட மட்டத்தில் பாடசாலை மாணவர்களிடையே நடாத்தப்பட்ட முதியோர் தொடர்பான கட்டுரை, கவிதை, பேச்சுப்போட்டி முடிவுகள் வெளியாகியுள்ளன.

தரம் 6,7,8

கட்டுரை

அ.பவித்திரா (யா/இந்து மகளிர் கல்லூரி), சி.சிரோமி (யா/கொக்குவில் கிழக்கு நாமகள் வித்தியாலயம்), கி.றோஸ்மேரி (யா/கனகரத்தினம் ம.ம.வி)

கவிதை

க.துஷாந்திகா (யா/இந்து மகளிர் கல்லூரி), ச.கிருத்திகா (யா/கோண்டாவில் இந்துக்கல்லூரி)

பேச்சு

ஜெ.தனுஷா (யா/இந்து மகளிர் கல்லூரி)

தரம் 9,10,11

கட்டுரை

யோ.சுலோசனா (யா/இந்து மகளிர் கல்லூரி), ஜெ.திவ்யா (யா/கோண்டாவில் இந்துக்கல்லூரி), கெ.பிரித்திகா (யா/கொக்குவில் கிழக்கு நாமகள் வித்தியாலயம்)

கவிதை

ச.அர்ச்சனா (யா/இந்து மகளிர் கல்லூரி), ர.நிதர்சனா (யா/கோண்டாவில் இராமகிருஸ்ண வித்தியாலயம்), சு.மேரிநிசா (யா/கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலயம்)

பேச்சு

கை.கிஷாந்தினி (யா/மகளிர் கல்லூரி), வ.கிருஸ்ணலதா (யா/கோண்டாவில் இராம கிருஸ்ண வித்தியாலயம்)


தரம் 12,13

கட்டுரை

இ.வதனா (யா/கோண்டாவில் இராமகிருஸ்ண வித்தியாலயம்), கி.கஸ்தூரி (யா/கனகரத்தினம் ம.ம.வி)

(தொடரும்) (10)

# சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் முதியோர்,மாற்றுவலுவுடையோர் தினவிழா



(சண்டிலிப்பாய்)

வலிகாமம் தென்மேற்கு (சண்டிலிப்பாய்) பிரதேச செயலகமும் சண்டிலிப்பாய் பிரதேச முதியோர் பேரவையும் இணைந்து நடாத்திய சர்வதேச முதியோர், மாற்றுவலுவுடையோர் தினவிழா கடந்த சனிக்கிழமை பிரான்பற்று - பண்டத்தரிப்பு அருளமுதீஸ்வரி கலாபவானந்தசுரபி திருமண மண்டபத்தில் வலிகாமம் தென் மேற்கு (சண்டிலிப்பாய்) பிரதேச செயலர் சுப்பிரமணியம் முரளிதரன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரான்பற்று பெரியவளவு முத்துமாரி அம்மன் தேவஸ்தான பிரதம சிவாச்சாரியார் சிவப்பிரம்மஸ்ரீ நித்திய சிவானந்தக் குருக்களும் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி முதல்வர் வணபிதா. ஜே.ஏ.யேசுதாசன் அடிகளாரும் கௌரவ விருந்தினர்களாக கலந்துகொண்டனர்.

சிறப்பு விருந்தினர்களாக யாழ்.மாவட்ட செயலக பிரதம கணக்காய்வாளர் திருமதி. இராஜேஸ்வரி உதயகுமார், வலிகாமம் வடக்கு (தெல்லிப்பளை) பிரதேச செயலர் க.ஸ்ரீமோகனன், ஓய்வுநிலை யாழ்.மாவட்ட சமூகசேவைகள் அலுவலர் ஆ.ஞானவேல், யாழ்.மாவட்ட சமூகசேவைகள் அலுவலர் வ.செல்வம் மற்றும் சமுதாய மட்டத்திலான புனர்வாழ்வு செயற்திட்ட மாகாண இணைப்பாளர் வ.சுரேஸ்குமார் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

விழாவின் பிரதம விருந்தினர்களாக முதியோர்களுக்கான தேசிய செயலகப் பணிப்பாளர் சுவிந்த எஸ்.சிங்கப்புலி வட் மாகாண சமூகசேவைகள் திணைக்களப் பணிப்பாளர். திருமதி. நளாயினி இன்பராஜ் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

வட மாகாண சமூகசேவைகள் திணைக்களம், முதியோர்களுக்கான தேசிய செயலகம், சமயப்பெரியோர்கள், கிராமிய மட்ட முதியோர் சங்கங்கள், பிரதேச பொது அமைப்புக்கள் மற்றும் வங்கிகள் இதற்கு இணை அனு சரணை வழங்கினர். (90,48)

# பதிவிறக்கப் பெட்டகம்

## ‘எக்ஸைல்’ நாவலில் இருந்து....

* இங்கே ஒரே ஒரு ஹிட் சினிமா கொடுத்தால் போதும், மகாத்மா காந்தியை விடப் பிரபலமாகி விடலாம். ஐ.நா. சபைக்கு அறிவுரை சொல்லலாம். சர்வதேச பயங்கரவாதத்தை ஒழிப்பது எப்படி என்று ஆங்கிலத் தொலைக்காட்சிகளில் பேட்டி கொடுக்கலாம். நாட்டில் வறுமையையும் ஊழலையும் ஒழித்து நல்லாட்சி தருவேன் என்று சொல்லி அரசியலில் குதிக்கலாம். கொலைகார ராஜபக்சவை அண்ட்ராயரோடு மவுண்ட்ரோட்டில் நடக்கவிட்டு இலங்கைத் தமிழர்களுக்கு விடுதலை வாங்கித் தருவேன் என்று வீரமுழக்கம் இடலாம். கை தட்ட லட்சம் பேர் கிடைப்பார்கள். உடனே ஒரு அரசியல் கட்சியை ஆரம்பிக்கலாம். தமிழில் ஒரே ஒரு ஹிட் படம் கொடுத்து விட்டால் போதும்; இத்தனையும் சாத்தியம். உலகில் வேறு எந் தத் தேசத்திலும் இல்லாத வசதி இது.

* நீங்கள் Tom Tykwer இயக்கிய Perfume: The Story of a Murderer என்ற ஜெர்மன் படத்தைப் பார்த்திருக்கிறீர்களா? அந்தக் கதையின் நாயகனைத் தூக்கில் போடுவதற்காக இழுத்துக்கொண்டு போவார்கள். பல பெண்களைக் கொன்றவன் என்பது அவன் மீதான குற்றச்சாட்டு. ஒட்டுமொத்தச் சமூகமே அவனைக் கொல்ல வேண்டும் என்று ஆவேசத்துடன் குரல் கொடுக்கும். சமூக மனத்தின் அடியில் படிந்திருக்கும ஒருவிதமான வன்முறையே இது. எதையாவது, யாரையாவது கொல்ல வேண்டும் என்று எப்போதும் ஆவேசப்பட்டுக்கொண்டே இருக்கும் மனம். ஏற்றத்தாழ்வுகளும் உள் முரண்பாடுகளும் அதிகம் உள்ள இந்தியா போன்ற நாடுகளில் இந்தச் சமூக வன்முறை சர்வ சகஜமாகக் காணக் கிடைப்பதாகும். மிஷல் ஃபூக்கோ, History of Madness–ல் சொல்லும் ‘குற்றமும் தண்டனையும்’ என்ற கருத்தாக்கத்தின் அதே சூழ்நிலை இது.

* ஒருமுறை அஞ்சலி முகநூலில் யாருக்கும் தெரியாமல் ஒரு புனைபெயரில் நுழைந்தாள். அங்கேதான் பெண்கள் என்றால் வழி மேல் விழி வைத்துக் காத்திருக்கிறார்களே? இவள் சென்றதும், இவளுடைய புகைப்படத்தைப் பார்க்காமலேயே, இவள் ஆணா அல்லது உண்மையிலேயே பெண்தானா என்று தெரிந்துகொள்ளாமலேயே ஏதோ ரஜினிகாந்துக்குக் குவிவது போல் குவிந்தார்கள் ரசிகர்கள்.

ஒருமுறை அவன் வந்தனா என்ற பெயரில் ஒரு பொய் அடையாளத்தை உருவாக்கி முகநூலில் நுழைந்தான். ஒரே வாரத்தில் 5,000 ரசிகர்கள் திரண்டனர். இவ்வளவுக்கும் புகைப்படம் எதுவும் போடாமலேயே. எகிப்து போன்ற நாடுகளில தான் முகநூலின் மூலம் அரசியல் புரட்சி உண்டாகும். இந்தியாவில் இதுபோன்ற ரசிகர் மன்றப் புரட்சிகள்தான் சாத்தியம்.

* மனிதர்களாகிய நாம் காலம் மற்றும் வெளி பற்றி அதிகமாகவே பேசுகிறோம். ஆனால் இந்தப் பிரபஞ்சத்திலேயே மனித இனம் மட்டும்தான் எவ்விதக் கட்டுப்பாடும் இன்றி காலம், இடம் பற்றிய தடையே இல்லாமல் இனச் சேர்க்கையில் ஈடுபடுகிறது. ஆனால் விலங்கினங்களோ இனச் சேர்க்கைக்கு என்று ஒரு குறிப்பிட்ட பருவ காலத்தைத் தேர்ந்தெடுக்கின்றன. மற்ற பருவங்களில் அவை கூடுவதே இல்லை. அதே போல் கண்ட இடத்திலும் அவை கூடுவதில்லை.

இடம் விட்டு இடம் பெயரும் பறவைகளைப் பற்றிச் செய்யப்படும் ஆய்வுகளில் அவனை ஆச்சரியம் கொள்ளவைத்த விஷயம் இதுதான். இனச் சேர்க்கை செய்வதற்காக ஒரு மனிதன் அவுஸ்திரேலியாவிலிருந்து இந்தியாவரை வருவானா? ஆனால் நாரைகள் வேடந்தாங்கலுக்கு வருகின்றனவே?

உயிரினங்களின் இனச் சேர்க்கை பற்றி ஆய்வு செய்த ஒருவர், ஒரு குறிப்பிட்ட இனத்தைச் சேர்ந்த பறவைகளில் நூறைப் பிடித்து – ஐம்பது ஆண் பறவை, ஐம்பது பெண் – அவை இனச் சேர்க்கை செய்ய வேண்டிய பருவ காலத்தில் அந்த ஆண் பெண் பறவைகளை ஒரு பிரம்மாண்டமான கூண்டில் அடைத்து வைத்தார். அவைகள் கூடுவதற்கான பருவம் வந்துவிட்டது. ஆனால் அவை கூடுவதற்கான இடம் அந்தக் கூண்டு அல்லவே? அவை அந்த நேரத்தில் ஏதோ ஒரு வேடந்தாங்கலிலோ கோடியக்கரையிலோ இருந்திருக்க வேண்டும். காலம் கனிந்து விட்டது; இடம் கிடைக்கவில்லை. அந்தக் கூண்டின் கம்பிகளில் முட்டி மோதி முட்டி மோதி இறக்கைகள் பிய்ந்து விழுந்து, கடைசியில் அந்த நூறு பறவைகளும் செத்தே போயின என்கிறார் அந்த ஆராய்ச்சியாளர்.

# ஒப்பந்தகாலம் நிறைவுபெறும் வரை பணிப்பெண்கள் பணியாற்ற வேண்டும்

## வேலைவாய்ப்பு பணியகம் அறிவிப்பு

தமது சேவைக்காலம் நிறைவடையும் வரை தொடர்ச்சியாக வெளிநாடுகளில் தங்கியிருக்க கூடிய பெண்கள் மாத்திரம் மத்திய கிழக்கில் பணிப்பெண்களாக செல்ல வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் பிரதிப் பொது முகாமையாளர் மங்கள ரன்தெனிய இந்த தகவலை வெளியிட்டுள்ளார்.

பணிபுரியும் காலம் நிறைவடையும் முன்னர் இடைநடுவில் குறித்த பெண்களை தாயகத்திற்கு அழைத்துவருவது நெருக்கடியான விடயம்.


எனவே, தொடர்ச்சியாக தங்கியிருந்து பணிபுரியும் தகுதி கொண்டவர்கள் மாத்திரம் மத்திய கிழக்கு பணிகளுக்கு விண்ணப்பிக்க வேண்டும்

பெண்ணொருவர் தனது ஒப்பந்த காலத்தை நிறைவு செய்யும் வரை தொழில் புரிய வேண்டும். அந்தக் காலப்பகுதியில் குறித்த பெண்ணின் கணவர் மற்றும் பிள்ளைகளுக்கு புரிந்துணர்வு ஏற்படுத்தப்பட வேண்டும்.

2 வருடங்கள் பணிப் பெண் தொழிலில் ஈடுபடுவது தொடர்பாக அவர்களுக்கு விளக்கமளிக்கப்பட வேண்டும். இவ்வாறான சூழ்நிலையில் மாத்திரமே எதிர்காலத்தில் பணிப்பெண்கள் வெளிநாடுகளுக்கு செல்ல அனுமதிக்கப்படுவார்கள் என அவர் மேலும் தெரிவித்தார்.

# வடக்கு மக்களின் பிரச்சினைக்கு கூட்டமைப்பு தீர்வு பெற்றுத்தராது

## பிரதியமைச்சர் ரோஹண திசாநாயக்க தெரிவிப்பு



(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினால் வடக்கு மக்களின் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்க முடியாது என்று பிரதியமைச்சர் ரோஹண திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரால் வடக்கில் வாழும் எந்தவொரு மக்களின் பிரச்சினையையும் தீர்க்க முடியாது. அதற்குப் பதிலாக அவர்கள் மக்களின் பிரச்சினைகளை திசை திருப்பும் முயற்சிகளை மேற்கொண்டுள்ளனர்.

தமிழ் அரசியல் தலைவர்களின் பின்னால் செல்வதன் மூலம் தமிழ் மக்களுக்கு விமோசனம் கிட்டாது.

வடக்கு மாகாண சபை மூலமாகவும் அவர்களுக்கு எந்த பலனும் கிட்டாது. எனவே அரசாங்கத்துடன் இணைந்து செயற்படுவதே தமிழ் மக்களுக்கு நன்மை பயக்கும் என்றும் பிரதியமைச்சர் திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

## கணனி மயப்படுத்தப்படுகிறது

# பல்கலை மாணவர்களின் கைவிரல் அடையாளம்



நாட்டிலுள்ள அனைத்து பல்கலைக்கழகங்களிலும் கல்வி பயிலும் மாணவர்களது கைவிரல் அடையாளங்கள் கணனி மயப்படுத்தப்படவுள்ளதாக உயர் கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

மாணவர்களின் வரவை உறுதிப்படுத்தும் வகையிலேயே அவர்களது கைவிரல் அடையாளம் பதியப்படவுள்ளது.

எதிரிகாலத்தில் பல்கலைக் கழக மாணவர்களின் வரவினை தனதுஅலுவலக அறையிலிருந்தே பார்க்கவுள்ளதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

# முன்மொழிவுகளை ஏற்காவிடின் பொது வேட்பாளருக்கு ஆதரவு

## ஜாதிகஹெல உறுமய அறிவிப்பு



அரசியலமைப்பை சீர்திருத்துவது தொடர்பாக தமது முன்மொழிவுகளை ஜனாதிபதியிடம் முன்வைக்கவுள்ளதாகவும் இதனை அவர் ஏற்கத் தவறினால் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஹெலஉறுமய பொதுவேட்பாளர் ஒருவரை ஆதரிக்கப்படுவதுடன் ரணில விக்கிரசிங்கவிற்கு எவ்வித ஆதரவும் வழங்கப்படமாட்டாதெனவும் ஜாதிகஹெல உறுமய அறிவித்துள்ளது.

இது தொடர்பாக கட்சியின் பிரதிப்பொதுச் செயலாளரும் மேல்மாகாண சபை அமைச்சருமான உதயகம்மன்பில நேற்று முன்தினம் மகரகமவில் நடைபெற்ற கட்சியின் 11 ஆவது தேசிய மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது,

அரசியல் சீர்திருத்தம் சிறந்த ஆட்சி பொருளாதார அபிவிருத்தி, பௌத்தமத பாதுகாப்பு நிறைவேற்று ஜனாதிபதி முறை ஒழிப்பு, அமைச்சரவையை 25 ஆக குறைத்தல் உட்பட 8 அம்சக் கோரிக்கைகளை நடைமுறைப்படுத்த வேண்டுமென ஜனாதிபதியிடம் வலியுறுத்தவோம் இதற்கு அவர் உடன்பட மறுத்தால் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஏனைய கட்சிகளுடன் இணைந்து பொதுவேட்பாளரை ஆதரிப்போம்.

எக்காரணம் கொண்டும் ரணில் விக்கிரமசிங்கரவை ஆதரிக்க மாட்டோமென அவர் மேலும் தெரிவித்தார்.

# இந்திய மீனவரின் படகுகள் விடுவிக்கப்படவேமாட்டாது

## அமைச்சர் ராஜித திட்டவட்டம்



(கொழும்பு)

இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட வேளை கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்களின் படகுகள் எக்காரணம் கொண்டும் விடுவிக்கப்படமாட்டதெனவும், இந்தப் படகுகள் இலங்கை கடற்படையின் பாதுகாப்பில் இருக்குமெனவும் கடற்றொழில் மற்றும் நீரியல் வளத்துறை அமைச்சர் ராஜிதசேனாரட்ன தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

குறித்த படகுகள் மூலம் தடைசெய்யப்பட்ட முறைகளைப் பயன்படுத்தி எமது கடற்பரப்பில் சட்டவிரோதமான முறையில் இந்திய மீனவர்கள் மீன்பிடியில் ஈடுபட்டனர். இந்திய அரசாங்கம் கூட வடபகுதி கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட இந்திய மீனவர்களை விடுதலை செய்யுமாறு தெரிவித்ததே தவிர, படகுகளை விடுவிக்குமாறு கோரவில்லை

இந்தப்படகுகள் தொடந்தும் கடற்படையின் பாதுகாப்பிலேயே இருக்கும் இந்தப்படகுகளைக் கொண்டு நாம் ஒன்றுமே செய்ய மாட்டோம். ஏனெனில் றோலர் மீன்பிடி எமது கடற்பரப்பில் சட்டவிரோதமானது. எனவே எமது மீனவர்களுக்கு அது பயன்படமாட்டாது என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# கல்நாட்டியகுள வீதியை புனரமைக்க கோரிக்கை



(வவுனியா)

வவுனியா, கல்நாட்டியகுளம் பிரதான வீதியை புனரமைத்துத் தருமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

வவுனியாவின் பழமை வாய்ந்த எல்லைக் கிராமமான கல்நாட்டியகுளம், வேப்பங்குளம ஆகிய பகுதிகள் ஊடாக செல்லும் பிரதான வீதி யுத்தம் முடிவடைந்து 5 வருடங்கள கடந்த நிலையிலும் இன்னமும் திருத்தபடவில்லை.

இப்பகுதியில் பாடசாலை அமைந்துள்ளமையால் மாணவர்கள், ஆசிரியர்கள் வந்து செல்வதில் பெரும் இடர்பாடுகளை எதிர்நோக்குகின்றனர். விவசாய கிராமமாகிய இக் கிராமத்தின் உற்பத்திகளை வெளியில் கொண்டு செல்வதிலும் பிரச்சினைகளை தாம் எதிர்நோக்குவதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

வவுனியா தெற்கு பிரதேச சபையிடம் இது தொடர்பில் பல முறை கூறியும் எந்த நடவடிக்கையும் இதுவரையில் எடுக்கப்படவில்லை

எனவே தமக்கான இந்த போக்குவரத்து பாதையை சீர் செய்து தருமாறு அப்பகுதி மக்கள் உரிய அதிகாரிகளிடம் மீண்டும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# 79 இலங்கை மீனவர்கள் வெளிநாட்டு கடலில் கைது



79 இலங்கை மீனவர்கள் வெளிநாட்டு கடற்பரப்பில் மீன்பிடியில் ஈடுபட்ட வேளை அந்தநாட்டினரால் கைது செய்யப்பட்டுள்ளனரென கடற்றொழில் அமைச்சு தெரிவித்துள்ளது.

4 படகுகளுடன் 24 இலங்கை மீனவர்கள் கடந்த வாரம் பங்களாதேஸ் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். 24 மீனவர்களும் பங்களதேஸ் கரையிலிருந்து 200 கடல் மைல் தொலைவில் சர்வதேச கடற்பரப்பில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இவர்களை விடுவிப்பது தொடர்பில் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்து பங்களாதேஸில் உள்ள இலங்கை பதில் உயர்ஸ்தானிகர் ஏ.ஜி.அபேசேகர தெரிவிக்கையில் வெளிவிவகார அமைச்சினால் உத்தியோகபூர்வ அறிவித்தல் விடுக்கப்படுமாயின் அவர்களை விடுவிப்பதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படுமெனத் தெரிவித்தார்.

இருந்த போதிலும் உத்தியோகபூர்வ அறிவித்தல் இதுவரை தமக்கு கிடைக்கப் பெறவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை 3 படகுகளுடன் 15 இலங்கை மீனவர்கள் மியன்மாரில் கைது செய்யப்பட்டுள்ளனர். இந்த மீனவர்களை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மியன்மாருக்கான இலங்கைத் தூதுவர் எச்.ஆர்.பியசிறி குறிப்பிட்டார்.

மேலும், இலங்கை மீனவர்கள் 40 பேர் இந்தியாவில் கைது செய்யப்பட்டுள்ளதுடன்,அவர்களின் 21 படகுகளும் கைப்பற்றப்பட்டுள்ளன. குறித்த மீனவர்களை விடுவிப்பதற்கு தூதரகத்தின் ஊடாக தமிழக அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடாத்தப்பட்டுள்ளதாக கடற்றொழில் அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

அண்டை நாடுகளின் கடல் எல்லைக்குள் பிரவேசித்து சட்டவிரோதமாக மீன்பிடியில் ஈடுபடுவதனை தவிர்த்துக்கொள்ளுமாறு கடற்றொழில் பிரதி அமைச்சர் சரத் குமார குணரத்ன மீனவர்களிடம் கேட்டுக்கொண்டுள்ளார்.

# ஞானசார தேரர் மீதான குற்றச்சாட்டை முன்வைக்க உத்தரவு

கலகொடஅத்தே ஞானசார தேரருக்கு எதிரான குற்றச்சாட்டுகளை நவம்பர் மாதம் முதலாம் திகதிக்கு முன்னதாக முன்வைக்குமாறு கொழும்பு, கோட்டை நீதவான் திலின கமகே, கொம்பனிவீதி பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

ஜாதிக பல சேனாவின் பொதுச்செயலாளர் விஜித்த தேரர் தாக்கல் செய்திருந்த வழக்கில் ஆஜரான சட்டத்தரணி மைத்திரி குணரத்னவை தூசித்தமை தொடர்பில் செய்யப்பட்டிருந்த முறைப்பாட்டை நேற்று திங்கட்கிழமை விசாரணைக்கு எடுத்துக்கொண்ட போதே நீதவான் மேற்கண்டவாறு உத்தரவிட்டார்.

இந்த விவகாரத்தில் ஞானசார தேரர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# க.பொ.த. (சா/த) மாதிரி வினாத்தாள்
# G.C.E. (O/L) Examination model Paper

## தமிழ்மொழியும் இலக்கியமும்

**பின்வரும் வாக்கியங்கள் ஒவ்வொன்றிலும் தடித்த எழுத்திற் காணப்படும் சொல் பற்றிய வினாவுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

01) ஞாயிறே, இருளை என்ன செய்து விட்டாய்? ஞாயிறு என்பதன் பொருள்
1) சந்திரன் 2) வாரம் 3) கிழமை 4) சூரியன்

02) "மேனி கொதிக்குதடி - தலைசுற்றியே வேதனை செய்குதடி" இங்கு மேனி என்பதன் ஒத்த கருத்து
1) ஆகாயம் 2) உடம்பு 3) மேகம் 4) வெப்பம்

03) "அம்பொன்று வில்லொடிதல் நாண் அறுதல் நான் கிழவன்" இங்கு நாண் என்பதன் பொருள்
1) வெட்கம் 2) கயிறு 3) வில் 4) நடு

04) பழையதைச் சற்றும் விடாமலும் புதியதை முற்றும் வேண்டாமலும் இருத்தல் சாத்தியமன்று. இங்கு சாத்தியம் என்பதன் எதிர்க்கருத்து
1) தீர்க்கக்கூடியது 2) அசாத்தியம்
3) சரதம் 4) உண்மை

05) தாய் பாலகனுடன் ஊருக்குச் சென்றார். பாலகன் என்பதன் பெண்பாற சொல்லாவது,
1) பாடகி 2) பாலகை 3) பாலகி 4) பாலதை

**பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

06) நிலத்தின் உரிமை கொண்டாடுவதற்குச் சான்றாக எழுத்துருவில் அமைந்த உறுதி
1) ஆவணம் 2) பத்திரம் 3) அடமானம் 4) பிடிமானம்

07) பலாவின் பிஞ்சு மூசு என்பது போல மாவின் பிஞ்சு
1) மூசு 2) கச்சல் 3) வடு 4) வடலி

08) அறிஞர் கூட்டத்தை அவை என்று கூறுவது போல உடு
1) கூட்டம் 2) திரள் 3) குழாம் 4) குழு

09) கொண்டல், மேகம், முகில் என்ற பல பொருள் குறிக்கும் ஒரு சொல்
1) கார் 2) ஆகாயம் 3) தென்றல் 4) கருமை

10) சங்கு, புற்று, வளைதல் என்ற சொற்கள் தரும் பொருள்
1) பொந்து 2) வளை 3) இருப்பிடம் 4) குகை

11) தாய் தன் மகனின் வருகைக்காக காத்திருத்தலைக் குறிக்கும் அருஞ்சொற்றொடர்
1) வெள்ளிடை மலை 2) வழி மேல் விழி வைத்து
3) ஆசைகாட்டி மோசஞ் செய்து 4) செல்லும் வகையால்

12) குமரன் வங்கியில் "மனேஜராக" (Manager) கடமை புரிகிறான். இங்கு மனேஜர் என்ற சொல்லின் தமிழ்ச்சொல்
1) ஊழியன் 2) எழுத்தாளன்
3) எழுதுவினைஞன் 4) முகாமையாளர்

13) ஆடு மேய்ப்பவன் இடையன் எனப்படுவது போல யானை செலுத்துபவன்
1) ஆயன் 2) வலவன் 3) பாகன் 4) மாலுமி

14) நிறுத்தற் குறிகளில் விட்டிசைக்குறி எனப்படுவது
1) - 2) 3) :- 4) ,

15) ஆமணக்கு முத்து போல சோளம்
1) மணி 2) விதை 3) பருப்பு 4) கொட்டை

**பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

16) அவள் அவன் கூறியதைக் கேட்டதாகத் தெரியவில்லை. சலனமற்றுக் கிடந்தாள். சலனம் என்பது
1) மயக்கம் 2) அசைவு 3) நேர்மை 4) தெளிவு

17) அமலன் சிறு வயதில் இருந்தே வாலாட்டுவான். வாலாட்டுதல் என்ற மரபுத் தொடரின் கருத்து
1) மகிழ்தல் 2) சேட்டை பண்ணுதல்
3) உலகம் பிடிபடல் 4) வால் வீசுதல்

18) மனதில் தீய எண்ணம் எண்ணிக் கொண்டு வெளியே வேறு விதமாகப் பேசுதல் என்ற கருத்தைத் தரும் பழமொழி.
1) அகத்தின் அழகு முகத்தில் தெரியும்.
2) உள் ஒன்று வைத்துப் புறம் ஒன்று பேசுதல்.
3) உலகம் பல விதம்.
4) ஈர நாவிற்கு எலும்பில்லை.

19) ஓர் ஊருக்கு ஒரு வழியா என்ற பழமொழியில் உட்கருத்து
1) நீதி எங்கும் ஒரு மாதிரியாக அமைய வேண்டும்.
2) கடல் திடலாகும். திடல் கடலாகும்.
3) ஓட்டைக் கப்பலுக்கு ஒன்பது மாலுமி
4) ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்.

20) கள்வரிடம் அகப்பட்ட குமரன் துடிதுடித்தான் என்ற கருத்தைத் தரும் உவமைத்தொடர்
1) மீகாமன் இல்லாத மரக்கலம் போல
2) ஏழை சொல் அம்பலம் ஏறாமை போல
3) வலையிற் சிக்கிய மான் போல
4) வளர்த்த கடா மார்பிற் பாய்ந்தாற் போல

**பின்வரும் வினாக்கள் ஒவ்வொனறுக்கும் மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

21) நெட்டெழுத்து அமைந்த சொல்லாவது
1) தயிர் 2) ஞாயிறு 3) தலை 4) கண்

22) பின்வருவனவற்றுள் செயப்படுபொருள் குன்றிய வினை
1) பாலன் பாட்டுப் பாடினான் 2) மாலதி படித்தாள்
3) குமரன் பந்தை எறிந்தான் 4) நேற்று குமரன் வந்தான்

23) அவன் கிராமத்தவரோடு சென்றான். இங்கு கிராமத்தவரோடு என்பது,
1) 3 ஆம் வேற்றுமை 2) 4 ஆம் வேற்றுமை
3) 5 ஆம் வேற்றுமை 4) 6 ஆம் வேற்றுமை

24) தொழில் + நுட்பம் இதனைச் சொற்புணர்ச்சி விதிக்கமைய புணர்த்தினால் வருவது,
1) தொழினுட்பம் 2) தொழில்நுட்பம்
3) தொழிநுட்பம் 4) தொழில்னுட்பம்

25) பயற்றங்காய் என்ற சொல்லில் காணப்படும் சாரியை
1) அம் 2) அற்று 3) காய் 4) பயறு

26) ஆசிரியனால் நூல் எழுதப்பட்டது என்ற வாக்கியத்தில் எழுதப்பட்டது என்பது
1) எதிர்மறைவினை 2) பிறவினை
3) செய்வினை 4) செயப்பாட்டுவினை

27) தரப்பட்ட சொல் வகைக்குப் பொருந்தாத ஒரு சொல் இடம்பெறும் வரிசை
1) பெயர்ச்சொல் - மனிதன், கோட்டை, பாடல்
2) வினைச்சொல் - உண்டேன், ஓடியது, ஓடும்
3) இடைச்சொல் - மற்று, உம், தோறும்
4) உரிச்சொல் - சால, உறு, சும்மா

28) கொடியிடை, முத்துப்பல், பவளவாய், கண்மலர் இவற்றுள் உவமை அல்லாதது,
1) கண்மலர் 2) கொடியிடை 3) பவளவாய் 4) முத்துப்பல்

29) ஊறல், ஏறல், சாரல் - இவற்றுள் வந்துள்ள தொழிற்பெயர் விகுதி,
1) உ 2) ஏ 3) அல் 4) சால்

30) பின்வருவனவற்றுள் விளித்தொடருக்குப் பொருத்தமான உதாரணம்
1) பரதன் வந்தான் 2) வந்தான் பரதன்
3) வந்த பரதன் 4) பரதா வா

**எழுத்துப் பிழையற்ற வாக்கியத்தை தெரிவு செய்க**

31)
1) சபையில் கொண்டு வரப்பட்ட பிரேரணை ஏற்றுக் கொள்ளப்பட்டது.
2) சபையில் கொண்டு வரப்பட்ட பிறேரணை ஏற்றுக் கொள்ளப்பட்டது.
3) சபையில் கொண்டு வரப்பட்ட பிறேரணை ஏற்றுக் கொல்லப்பட்டது.
4) சபையில் கொண்டு வரப்பட்ட பிரேரணை ஏற்றுக் கொல்லப்பட்டது.

32)
1) அனேகமாகக் காலை வேளையில் அவர்கள் இருக்கமாட்டார்கள்.
2) அநேகமாகக் காளை வேளையில் அவர்கள் இருக்கமாட்டார்கள்.
3) அநேகமாகக் காலை வேழையில் அவர்கள் இருக்கமாட்டார்கள்.
4) அநேகமாகக் காலை வேளையில் அவர்கள் இருக்கமாட்டார்கள்.

**பின்வரும் வினாக்களிலுள்ள வாக்கியத்தின் முற்பகுதிக்கு மிகப் பொருத்தமான முடிக்கும் பிற்பகுதியைத் தெரிவு செய்க.**

33) கமலினியும், விமலினியும் பல விடயங்களில்
1) ஒத்திருக்கின்றோம் 2) ஒத்திருக்கின்றீர்
3) ஒத்திருக்கின்றீர்கள் 4) ஒத்திருக்கின்றனர்

34) சில சினிமாப் பாடல்கள் மக்களின் வாழ்க்கையோடு பின்னிப்பிணைந்து
1) காணப்பட்டது 2) காணப்படுகின்றன
3) காணப்படுகின்றது 4) காணப்படுகின்றவை

35) பூஞ்சோலையில் உள்ள ஒவ்வொரு பூவும்
1) அழகானவை 2) அழகானது
3) அழகுடையன 4) அழகாயிருக்கின்றன

**பின்வருவனவற்றுள் சரியாக எழுதிக் காட்டப்பட்ட சொல்வரிசையைத் தெரிவு செய்க.**

36)
1) திணைக்களம், பெறுமை, துணிவு, வெறுமை
2) கனிவு, வடமொழி, வெக்கம், மருமகள்
3) ஆராய்ச்சி, புலம்பல், தோணி, காய்ச்சல்
4) நிகழ்ச்சி, அறநெறி, மெய்ஞ்ஞானம், அனுசரணை

**பின்வரும் வாக்கியங்கள் ஒவ்வொன்றிலும் புள்ளிக்கோடிட்ட இடத்தை நிரப்புவதற்கு மிகப் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்க.**

37) விளையாட்டுப் போட்டி பற்றிய .............................. சமர்ப்பிக்கும்படி அதிபர் கூறினார்.

1) முடிவு 2) சுருக்கம் 3) பிரசாரம் 4) அறிக்கை

38) வங்கித்துறையில் சிலர் ...................... அடிப்படையில் வேலை செய்கின்றனர்.

1) ஒப்பந்தம் 2) உச்சவரம்பு 3) ஒப்படை 4) வேதனம்

39) ஒவ்வொரு கிராம சேவகர் பிரிவிலும் சனத்தொகை .:........................... செய்யப்பட்டது.

1) மதிப்பீடு 2) கணிப்பீடு 3) ஆய்வு 4) ஆராய்ச்சி

**கீழே சில வாக்கியங்கள் ஒழுங்கின்றிக் காணப்படுகின்றன. அவற்றை ஒழுங்கு பெற வைத்தால் கட்டுக் கோப்பான பந்தியொன்று அமையும். மிகப் பொருத்தமான வைப்பு முறையைத் தெரிவு செய்க.**

40) அ. பெரும்பாலான புற மதத்தாரால் நடாத்தப்பட்டன.
ஆ. அதற்குக் கல்விச்சாலைகள் கருவியாகவும் இருக்கின்றன.
இ. கல்விச் சாலைகள் பல நமது நாட்டில் இருக்கின்றன.
ஈ. அதனால் நமது சிறுவரை சமய நெறியிற் பயில்வதற்கு கல்விச் சாலைகள் வேண்டும்.
உ. புற மதத்தாருடைய முதல் நோக்கம் தமது மதத்தைப் பரப்புவது.

1) இ, அ, உ, ஆ, ஈ 2) ஆ, ஈ, இ, உ, அ
3) இ, ஆ, உ, அ, ஈ 4) உ, ஆ, ஈ, அ, இ

## பகுதி II

1) சுருக்கமான விடை எழுதுக

1. பின்வரும் தொடரை சந்தி பிரித்து எழுதுக. நாவின லனுதினம் புகழ்வாம்

2. அவன் இன்று குறிப்புக்களை எழுதினான். இதனை எதிர்மறை வாக்கியமாக எழுதுக.

3. தான், ஆக என்ற இடைச்சொற்களை வைத்து வாக்கியங்கள் எழுதுக.

4. பின்வருவனவற்றுள் விரித்து எழுதும் போது வளர்க்க வேண்டிய ஆற்றல்கள் இரண்டு எழுதுக. மேலோட்டமாக எழுதல், சிறந்த மொழி வளம், சுருங்கிய விடய ஞானம், ஜயந்திரிபற்ற விளக்கம்.

5. பின்வரும் சொற்களில் வினைமுற்றுக்களை வேறுபடுத்தி எழுதுங்கள். நடந்தான், கடித்து, ஆடுகிறான், அழுது, படித்து, நடித்தாள்.

6. தந்தியடி, சுட்டிக்காட்டு, வெற்றியடை, தட்டிக்கேள் இவற்றை எவ் வகைக் கூட்டு வினைகள் என வகைப்படுத்துக.

7. தொழிற்பெயர், வினையாலணையும் பெயர் இவை ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு உதாரணம் தருக.

8. அங்கதம் என்பதற்கு விளக்கம் தருக.

9. பெயர்ச் சொற்கள் ஆறு வகையையும் எழுதுக.

10. கடல், பாம்பு என்ற சொற்களுக்கு ஒரு பொருட் பல சொற்கள் வீதம் ஒவ்வொன்றுக்கும் மும்மூன்று உதாரணம் தருக.

**02) பின்வருவனவற்றுள் ஒன்றைத் தெரிவு செய்து ஏறத்தாழ 250 சொற்களில் அமையுமாறு விடை எழுதுக. நீங்கள் தெரிவு செய்த விடயத்துக்குப் பொருத்தமான தலையங்கங்கள் இடுக.**

அ) விஞ்ஞானம் மனித குலத்தை ஆக்கப் பாதையில் இட்டுச் செல்கிறது. அழிவுப் பாதையில் இட்டுச் செல்கிறது என்ற கருத்தினைக் கொண்டு விளக்கக் கட்டுரை.

ஆ) பூரண நிலாப் பொழுதன்று கடற்கரையில் நீர் கண்ட காட்சிகளும், உமது மனப் பதிவுகளும் பற்றிய வர்ணனை.

இ) உண்மைகள் என்றும் அழியாது. என்றோ ஒரு நாள் உலகிற்குத் தெரியும். தெரியும் வரை எத்தனையோ சிக்கல்கள், தடுமாற்றங்கள் என்பவற்றைக் காட்டும் வகையில் ஒரு சிறுகதை.

ஈ) எமது ஒழுக்கம் பேண சமய வளர்ச்சியே தேவை. சமயம் மக்களை வாழ்வாங்கு வாழ வழி காட்டுகிறது. சமயத்தைப் பின்பற்றுபவன் தவறு செய்வது குறைவு என்ற கருத்தமைய சொற்பொழிவு.

**03) கீழே தரப்பட்டுள்ள உரைப்பகுதியின் சுருக்கத்தை 40 - 45 சொற்களில் அமையக்கூடியவாறு எழுதுக.**

மக்கள் அனைவரும் விரும்புவது இன்பமே. இன்பத்தை அடைவதற்குக் கருவியாய் இருப்பது செல்வம். செல்வம் கல்விச் செல்வம், பொருட் செல்வம் என இரு வகைப்படும். பொன், மணி முதலிய பொருட் செல்வத்திலும் கல்விச் செல்வம் சிறந்தது. ஏனெனில், கல்விச் செல்வம் அழியாது. பொருட் செல்வம் பங்காளிகளால் பகுத்து எடுக்கப்படும். கள்வர், கயவர், பகைவர் என்போரின் வௌவுதலுக்கு உட்படும். பொருட் செல்வம் வெந்தழலால் சாம்பராகிவிடும். இது அண்டினோர்க்கு அழித்தால் குறையும். எனவே, பொருட் செல்வம் அழியும் தன்மையுடையது. அத்தோடு அது தக்காரிடத்து மட்டுமல்ல தகவிலர் இடத்தும் உண்டாகி நிலைபெறாது. அத்துடன் இது பலரைப் பகையுடையவராக்கும். பொருள் ஈட்டலால் துன்பப்படுவர் பலர். கல்வியோ எவராலும் கவரப்படமாட்டாது. தீ வெள்ளம் முதலியவற்றால் நாசமுறாது. பிறருக்கு கொடுக்க கொடுக்கக் கூடும். இது ஒருபோதும் அழியாது. கல்வியோ கரையில்லாதது. எனவே, எல்லா நூல்களையும் கற்றல் இயலாது. பாலும், நீரும் கலந்து இருக்கும்போது பாலை மட்டும் தனித்துக் குடிக்கும் அன்னப்பறவை போன்று நாம் அறம், பொருள், இன்பம், வீடு என்னும் உறுதிப் பொருட்களை உணர்த்து நூல்களைத் தெரிந்து கற்றல் வேண்டும்.

**04) பின்வரும் பந்தியை வாசித்து கீழ் தரப்பட்டுள்ள வினாக்களுக்கு பூரணமான வாக்கியங்களில் விடை எழுதுக.**

உலகில் பல வகையான ஆற்றல்கள் உள்ளன. இந்தப் பரந்த அண்டமே ஆற்றலின் வடிவம் என்று கிடக்கிறது. நமது கண்ணில் படுகின்ற ஒவ்வொரு பொருளும் ஆற்றலின் மாற்று உருவமே. எல்லா வகையான ஆற்றல்களும் இயக்க ஆற்றலையோ அல்லது நிலை ஆற்றலையோ சார்ந்துள்ளன. வெப்பம் ஒரு வகை ஆற்றல் ஆகும். எல்லாப் பொருளிலும் வெப்ப ஆற்றல் உண்டு.

1. இப்பந்தியின் பிரதான கருத்து யாது?

2. அனைத்து ஆற்றல்களும் எவ்வகை ஆற்றல்களைச் சார்ந்துள்ளன?

3. நாம் காணும் பொருளுக்கும், ஆற்றலுக்கும் உள்ள தொடர்பு என்ன?

4. ஆற்றல் ஒன்றுக்கு உதாரணம் தருக.

5. வெப்ப ஆற்றல் எவற்றில் உண்டு?

**05) புரையோடிப் போயிருக்கும் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வுத்திட்டமே சிறந்தது என்பதை விளக்கி 100 சொற்களில் பத்திரிகைக்கு ஒரு கடிதம் எழுதுக.**

அல்லது


**நாம் ஒவ்வொருவரும் மரம் நடுகையில் ஈடுபட வேண்டும் என்பதை வலியுறுத்தும் துண்டுப்பிரசுரம்.**

## கிராமிய விளையாட்டுக்கள்

- எமக்கு உடல், உள ஆரோக்கியத்தை விளையாட்டுக்கள் தருகின்றன.
- நாம் கல்வி கற்கும் பாடசாலைகளில் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் விளையாட்டுப் போட்டிகள் நடைபெறுவது வழக்கமானது.
- பிரதேச செயலக பிரிவுகளிலும், மாவட்ட மட்டங்களிலும் விளையாட்டுப் போட்டிகள் வருடந்தோறும் நடைபெறுவது வழக்கம்.
- அரசாங்கத்தினால் வருடந்தோறும் தேசிய விளையாட்டுப் போட்கள் நடாத்தப் படுகின்றன.
- விளையாட்டுக்கள் அவற்றின் உருவாக்கம், ஆடப்படும் முறை, தேவை ஆகியவற்றைப் பொறுத்து வேறுபடுகின்றன.


தாயம் போடுதல்


போர்த்தேங்காய்


முட்டி உடைத்தல்


றபான் அடித்தல்


பல்லாங்குழி

சடுகுடு



கபடி

# பலதும் பத்தும்

- குழந்தைகள் பிறந்து பொதுவாக நான்கு மாதங்கள் வரையில் பலமாக அழுதாலும் கண்ணீர் வெளியேறுவதில்லை. கண்ணீர்ச் சுரப்பிகள் முழு அளவில் விருத்தி அடையாமையே இதற்குக் காரணம்.
- தண்ணீரை உறைய வைத்துப் பனிக்கட்டியாக மாற்றுவதைப் போல, திரவ உலோகமான பாதரசத்தையும் உறைய வைத்துத் திண்மம் ஆக்க முடியும். ஆனால் பூச்சிய வெப்ப நிலையையும் தாண்டி, மேலும் 39 பாகை செல்சியசுக்குக் கீழாக (39°C) குளிர்விக்கும் போதுதான் அது உறையத் தொடங்கும். உறைந்த பாதரசம் நீலப்பிரகாசமுடைய வெள்ளி நிறமாக இருக்கும்.
- நாய்க்குட்டிகள் பிறக்கும்போது குருடாகவும், செவிடாகவும், மண நுகர்ச்சி அற்றவையுமாகவே பிறக்கின்றன. பார்வைப்புலன், செவிப்புலன் மற்றும் மணநுகர்ச்சிப்புலன் விருத்தி அடைவதற்கு நாய்க்குட்டிகளுக்கு பொதுவாக இரண்டு வாரங்கள் ஆகின்றன. அதுவரை அவை முற்றுமுழுதாகத் தாய் நாயையே நம்பியிருக்கின்றன.
- பூமியில் தற்போது ஒரு நாள் என்பது 24 மணித்தியாலங்கள். ஆனால் 65 மில்லியன் வருடங்களுக்கு முன்னால் - டைனோசர்கள் உலாவித் திரிந்த காலத்தில் ஒரு நாட்பொழுது என்பது வெறும் 16 மணித்தியாலங்கள்தானாம். இந்த நாள் அளவை, அந்தக் காலப்பகுதியில் வாழ்ந்த பவளப் பாறைகளை ஆதாரமாகக் கொண்டு கண்டறிந்திருக்கிறார்கள்.
- தற்காலத்தில் சிலந்தி என்று அழைக்கப்படும் உயிரினம் சங்க காலத்தில் சிலம்பி என்றே கூறப்பட்டுள்ளது. வேடனின் வலையில் இருந்து தப்பி வந்த புறா கருவேல மரத்தில் சிலம்பியால் பின்னப்பட்ட வலையைக் கண்டு பயந்ததாகச் சங்க இலக்கியங்களில் ஒன்றான நற்றிணையில் பதிவாகியுள்ளது.



கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலயத்தின் பொன் விழா நேற்று பாடசாலை மண்டபத்தில் இடம்பெற்றது. இதன் போது பாடசாலை அதிபர் உரைநிகழ்த்துவதையும் விழாவில் பிரதம விருந்தினராக கலந்துகொண்ட யாழ்.வலய கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமாரிடம் இருந்து பொன்விழா மலரின் முதற் பிரதியை யாழ்.பிராந்திய அஞ்சல் அதிபர் புஸ்பநாதன் பெற்றுக் கொள்வதையும் மாணவர்கள், விருந்தினர்கள் அமர்ந்திருப்பதையும் காணலாம்.

(படம்-ஆர்.இராஜகுமார்)

# "இலவு" குறும்படம் வெளியிடப்பட்டது



(யாழ்ப்பாணம்)

கானாவரோ இயக்கத்தில் கிருத்திகன், ஜெனனி, ரஜித், ஆகியோர் நடிப்பில், வி.கிரியேசன் தயாரித்த "இலவு" குறும்படம் நேற்று முன்தினம் பி.ப 03.30 மணி அளவில் யாழ் நகரிலுள்ள ஹற்றன் நஷனல் வங்கியின் மாநாட்டு மண்டபத்தில் திரையிடப்பட்டது.

இக் குறும்பட வெளியீட்டு நிகழ்வில் குறும்பட படைப்பாளிகள் பலர் கலந்து கொண்டதோடு பெருமளவான இளைஞர்களும் கலந்துகொண்டனர்.

'இலவு' குறும்படத்தை, முன்னாள் வட மாகாண கணக்காய்வுத் திணைக்களப் பணிப்பாளர் வை.குகதாசன் வெளியிட்டு வைக்க, முதல் பிரதியை த.கவாஸ்கர் (ஹற்றன் நஷனல் வங்கி) பெற்றுக் கொண்டார்.

இந்நிகழ்வில் இயக்குநர் கானாவரோ, ஒளிப்பதிவாளர் ரோஷன் நிரோஷ், நடிகர்கள் கவிமாறன் சிவா, ரஜித், கார்த்திக், வத்சாங்கன் மற்றும் நடிகை ஜெனனி ஆகியோரும் கலந்து கொண்டனர். (48)

# பனைசார்ந்த உற்பத்திகளின் விற்பனைக்கூடம் திறந்து வைப்பு

யாழ்ப்பாணத்திலுள்ள கார்கில்ஸ் பூட்சிற்றி ஊடாக பனைசார்ந்த உணவு மற்றும் உணவல்லாத உற்பத்திகளை விற்பனை செய்யும் பொருட்டு அமைககப்பட்ட கூடத்தை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா திறந்து வைத்து அதன் பணி நடவடிக்கைகளையும் ஆரம்பித்து வைத்தார்.

யாழ்.நகரின் மையப் பகுதியில் அமையப் பெற்றுள்ள கார்கில்ஸ் பூட்சிற்றியில் மேற்படி நிகழ்வு நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இவ்விற்பனைக் கூடத்தில் பனைசார்ந்த உணவு மற்றும் உணவல்லாத உற்பத்திகள் விற்பனைக்காக வைக்கப்பட்டுள்ளன.

இதன்மூலம் கார்கில்ஸ் பூட்சிற்றிக்கு வருகைதரும் மக்கள் தமக்கு தேவையான தரமான உற்பத்திகளை நியாய விலையில் பெற்றுக் கொள்ள முடியும்.



அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலுக்கு அமைவாக இவ்விற்பனைக் கூடம் திறந்து வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதன்போது பனை அபிவிருத்தி சபைத் தலைவர் பசுபதி சீவரத்தினம், பொது முகாமையாளர் லோகநாதன், விரிவாக்கல் உத்தியோகத்தர் கோபாலகிருஸ்ணன் ஆகியோருடன் கார்கில்ஸ் பூட்சிற்றியின் வடமாகாணப பணிப்பாளர் நேசகுமார் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

# இந்திய-இலங்கை கடற்படையினர் சர்வதேச கடல் எல்லையில் சந்திப்பு



இந்திய-இலங்கை கடற்படையினர் சர்வதேச கடல் எல்லையில் வைத்து பேச்சுவார்த்தை நடாத்தியுள்ளனர். இச்சந்திப்பு கடந்த 16 ஆம் திகதி சாகர கப்பலில் இடம்பெற்றது.

- இலங்கையின் வடபகுதிக்கான கடற்படைத் தளபதி ரியர் அட்மிரல் சரத் திசாநாயக்க இந்தியாவின் தமிழ்நாடு பாண்டிச்சேரி கொமடோர் மகாதேவன் ஆகியோர் தலைமையில் இச்சந்திப்பு நடைபெற்றது.

போதைப்பொருள் கடத்தலை தடுத் தல் சட்டவிரோத மீன்பிடியை பாக்கு நீரிணை மற்றும் மன்னார் வளைகுடாவில தடுத்தல் மற்றும் சட்டவிரோத போக்குவரத்துகளை தடுத்தல் என்பன் குறித்து இச்சந்திப்பில் விரிவாக ஆராயப்பட்டது. இரு நாட்டு கடற்படையினருக்கும் இடையே இவ்வாறான சந்திப்புக்கள் வருடம் ஒருமுறை இடம்பெறுவது குறிப்பிடத்தக்கது.

# வருடாந்த சம்பள ஏற்றப்படிவங்களை சமர்ப்பிக்குமாறு ஆசிரியர்களுக்கு அறிவுறுத்து

ஆசிரியர்களின் வருடாந்த சம்பள ஏற்றக் கொடுப்பனவுகள் தொடர்பாக ஆசிரியர்கள் பின்பற்ற வேண்டிய செயற்பாடுகள் தொடர்பாக ஆசிரியர்களுக்கு அறிவுறுத்தும் வகையில் வடமாகாணக் கல்விப் பணிப்பாளரினால் சுற்றுநிருபம் வெளியிடப்பட்டுள்ளது.

மேற்படி சுற்றுநிருபத்திற்கமைய ஒவ்வொரு பாடசாலையிலும் கடமையாற்றும் ஆசிரியர்கள் வருடாந்த சம்பள ஏற்றப் படிவங்களை சம்பள ஏற்றத் திகதியிலிருந்து இரு வாரங்களுக்குள வலயக்கல்வி அலுவலக ஆசிரிய நிர்வாகக் கிளைக்கு சம்ர்ப்பிக்க வேண்டும். இதனால் ஏற்படக்கூடிய கால தாமதத்திற்கு குறித்த ஆசிரியர்களே பொறுப்பாளிகளாகக் கருதப்படுவர்.

மேலும் 15.10.2014 வரை சம்பள ஏற்றத்தினை சமர்ப்பிக்காத ஆசிரியர்கள் சம்பள ஏற்றப்படிவங்களை இரு வாரங்களுக்குள் உடனடியாக சமர்ப்பிப்பது டன் 15.10.2014 தொடக்கம் 31.12.2014 வரை சம்பள ஏற்றத் திகதியினைக் கொண்டவர்கள் இரு வாரத்தினுள் கிடைக்கக் கூடியதாக வலயக் கல்வி அலுவலகத்திற்கு தமது விண்ணப்பங்களை அனுப்பி வைத்தல் வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை மாகாணக் கல்விப் பணிப்பாளரின் சுற்றுநிருபத்தின் பிரகாரம் 31.12.2014 ஆம் திகதிக்குப் பின்னர் அனுப்பப்படும் 2014 ஆம் ஆண்டு அல்லது அதற்கு முந்தைய ஆண்டுகளில் சமர்ப்பிக்கப்படாத வருடாந்த சம்பள ஏற்ற நிலுவைகள் யாவும் வழங்கப்படமாட்டாது எனவும் அறிதெரிவிக்கப்பட்டுள்ளது. (03)

# கௌரி விரதம்

யாழ்.வண்ணை ஸ்ரீ வீரமாகாளி அம்மன் ஆலயத்தின் கேதார கௌரி விரத இறுதி நாள் நிகழ்வும் காப்பு வழங்கலும் நாளை மறுதினம் வியாழக்கிழமை சிறப்பாக இடம்பெறவுள்ளது.

காலை 7 மணிக்கு விசேட அபிஷேக பூசைகள் இடம்பெற்று முற்பகல் 10 மணிக்கு கௌரிக் காப்பு வழங்கலும் இடம்பெறும்.

நாளை புதன்கிழமை வரை கேதார லிங்கேஸ்வர பெருமானுக்கு காலை 7.30 மணி முதல் 11.30 மணி வரை அடியார்கள் பால் அபிஷேகம் செய்ய முடியும என அறிவிக்கப்பட்டுள்ளது.

# போக்குவரத்துக்கு இடையூறு

தற்போது நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக தொடர்ந்தாக பெய்யும் மழையால் சில உள்ளக வீதிகளில் வெள்ள நீர் தேங்கி நிற்பதால் மக்களின் போக்குவரத்து நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக் கப்படுகிறது.

குறிப்பாக இணுவில் மானிப்பாய் வீதியில் கந்தசுவாமி ஆலயத்திற்கு முன்பாகவும் மற்றும் பரராஜசேகரப் பிள்ளையார் ஆலய வீதியிலும் வெள்ள நீர் வீதியை குறுக்கறுத்துப் பாய்வதால் அதனுடான போக்குவரத்து தடைப்படுவதுடன் சிரமத்துடனேயே செல்ல வேண்டியுள்ளதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக நகர்ப்பகுதி வீதிகள் காபெற் இட்டு புனரமைக்கப்பட்டுள்ள நிலையில் இத்தகைய உள்ளக வீதிகளையும் ஓரளவு புனரமைக்க உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுப்பார்களா? என பொதுமக்கள் கேள்வி எழுப்புகின்றனர். (66)

# வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :- ..............................

முகவரி :- ..............................

பிறந்த ஆண்டு :- ..............................

கூப்பன் ஐந்தும், புகைப்படமும்

..............................

பெற்றோர் கையொப்பம்

# இடர்பாடுகள் உடைய அரசியல் வாழ்வில் எதைக்கண்டும் அஞ்சப் போவதில்லை

## ஜெயலலிதா சூளுரை



எனது பொது வாழ்வு நெருப்பாற்றில் நீந்துவதற்கு ஒப்பானதாக இருந்து வருகிறது. பொது நலனுக்காக நம்மை அர்ப்பணித்து வாழ்வது, எத்தகைய இடர்பாடுகளை உடையதாக இருக்கும் என்பதை அரசியல் வாழ்வில் நுழைந்த நாளில் இருந்து நன்கு உணர்ந்திருக்கிறேன். என ஜெயலலிதா வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

ஜெயாவுக்கெதிரான தீர்ப்பினை அடுத்து அதனை தாங்கிக்கொள்ள முடியாமல் உயிரை மாய்த்துக் கொண்ட, 193 பேரின் குடும்பங்களுக்கு, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் சார்பில் தலா 3 இலட்சம் ரூபாய் (இந்திய ரூபாய்) நிதியுதவி வழங்கப்படும் என அக்கட்சியின் பொதுச் செயலாளர் ஜெயலலிதா ஜெயராம் அறிவித்துள்ளார்.

ஜெயலலிதா வெளியிட்டுள்ள அறிக்கையில்

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்னும் பேரியக்கத்தைக் காப்பாற்ற வேண்டும் என்பதற்காக உன்னையே நீ அர்ப்பணித்து பணியாற்ற வேண்டும் என்று என்னிடம் எம்.ஜி. ஆர்.பெற்றுக் கொண்ட சத்தியத்தை இதயத்தில் ஏற்று நாளும் வாழ்ந்து கொண்டிருக்கிறேன். தொடர்ந்து அந்தப் பாதையிலேயே என்னுடைய பயணம் அமையும்.

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் வளர்ச்சி என் உயிரினும் மேலான எனதருமைக் கழக உடன்பிறப்புகளின் நலன் எல்லாவற்றிற்கும் மேலாக தமிழக மக்களின் நல்வாழ்வு, முன்னேற்றம், உயர்வு, இவை தான் என் இதயத்தில் என்றைக்கும் நான் பதித்து வைத்திருக்கும் இலக்குகள். இந்தப் பாதையில் என்னுடைய பயணம் நடைபெறும் போது ஏற்படுகின்ற இன்னல்களைப் பற்றியோ; துயரங்களைப் பற்றியோ, சோதனைகளைப் பற்றியோ, வேதனைகளைப் பற்றியோ நான் சிறிதும் கவலைப்படுவதில்லை.

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உடன்பிறப்புகளின் எதிர்பார்ப்புகளுக்கு ஏற்பவும், தமிழக மக்களின் முன்னேற்றத்திற்காகவும் என்றைக்கும் நான் உழைப்பேன் எந்தத் தியாகத்தையும் மேற்கொள்வேன் என்ற உறுதியை நான் உங்களுக்கு அளிக்க விரும்புகிறேன்.

எனக்கு ஏற்பட்ட துயரத்தைத் தாங்கிக் கொள்ள முடியாமல் மரணமடைந்த 193 பேர்களின் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்வதுடன், அவர்களது ஆன்மா இறைவன் திருவடி நிழலில் அமைதி பெற எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திப்பதோடு மரணமடைந்தோர்களது குடும்பத்தினருக்கு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் தலா 3 இலட்சம் ரூபாய் குடும்ப நல நிதியுதவி வழங்கப்படும் என்பதையும் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ள 3 பேர்களின் மருத்துவ சிகிச்சைக்கு தலா ஐம்பதாயிரம் ரூபாய் வழங்கப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்கள் விரைவில் பூரண நலம் பெற்று வீடு திரும்ப எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

எனக்கு ஏற்பட்ட சூழ்நிலையை தாங்கிக் கொள்ள முடியாமல் பல்வேறு காரணங்களால் மரணமடைந்தவர்கள் மற்றும் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்களின் பட்டியலை வெளியிட்டுள்ளேன். தன்னையே மாய்த்துக் கொள்ளும் இத்தகைய செயல்களில் இனி யாரும் ஈடுபடக் கூடாது என்று அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

என் மீது பாசமும், பற்றும் கொண்டுள்ள தமிழக மக்கள் அனைவருக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியை அன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன் என்று அவர் அந்த அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

## கோபிநாத் முண்டே மகள் லோக்சபா தேர்தலில் சாதனை



லோக்சபா தேர்தலில் முன்னெப்பொழுதும் இல்லாத அளவில் மிகப் பெரிய வாக்கு வித்தியாசத்தில் ப்ரீத்தம் முண்டே வெற்றி பெற்றுள்ளார்.

முன்னாள் மத்திய அமைச்சர் கோபிநாத் முண்டேவின் மறைவுக்கு பின் அவர் போட்டியிட்ட பீட் லோக்சபா தொகுதிக்கு கடந்த 15ஆம் திகதி இடைத் தேர்தல் நடைபெற்றது. இத்தொகுதியின் பா.ஜ.க. வேட்பாளராக கோபிநாத் முண்டேவின் மகள் ப்ரீத்தம் முண்டே அறிவிக்கப்பட்டார். இதனையடுத்து கோபிநாத் முண்டேவுக்கு மரியாதை தரும் வகையில் பரீத்தம் முண்டேவை எதிர்த்து வேட்பாளரை நிறுத்தப்போவதில்லை என சிவசேனா மற்றும் தேசியவாத காங்கிரஸ் கட்சி ஆகியவை அறிவித்தன. எனவே அவர் அமோக வெற்றி பெறுவார் என்று கூறப்பட்டது.

இந்நிலையில் அத்தொகுதியில் பதிவான வாக்குகள் எண்ணும் பணி நேற்று முன்தினம் காலை தொடங்கியது. வாக்கு எணணிக்கை முடிவில் பரீத்தம் தன்னை எதிர்த்து போட்டியிட்ட காங்கிரஸ் வேட்பாளரை 6,96,321 வாக்குகள் வித்தியாசத்தில் தோற்கடித்தார். பரீத்தம் 9,22,416 வாக்குகள் பெற்ற நிலையில் காங்கிரஸ் வேட்பாளர் அசோக்ராவ் சங்கர்ராவ் பாட்டில் 2,26,095 வாக்குகளை மட்டுமே பெற்று தோற்றுப்போனார்.

# எபோலா நோய் கண்டு மக்கள் அஞ்ச வேண்டாம்

## ஒபாமா வேண்டுகோள்



மேற்கு ஆபிரிக்க நாடுகளில் 4 ஆயிரத்து 500 பேரை பலி கொண்டுள்ள எபோலா வைரஸ் நோய், அமெரிக்காவையும் அச்சுறுத்தி வருகிறது. அங்கு 3 பேரை ஏற்கனவே இந்த நோய் தாக்கி உள்ளது. ஏறத்தாழ 100 பேர் எபோலா வைரஸ் தாக்குதல் சந்தேகத்தின்பேரில் கண்காணிக்கப்படுகின்றனர்.

இந்த வைரஸ் நோயை ஒபாமா நிர்வாகம், கையாண்டு வரும் விதம், விமர்சனங்களை ஏற்படுத்தி வருகிறது.

மேற்கு ஆபிரிக்க நாடுகளில் இருந்து அமெரிக்கா வருவோருக்கு தடை விதிக்க வேண்டும் என்று அமெரிக்க எம்.பி.க்கள் குரல் கொடுத்து வருகின்றனர்.

இந்த நிலையில், வானொலி மூலம் நாட்டு மக்களுக்கு ஒபாமா உரையாற்றியுள்ளார். அப்போது அவர், மேற்கு ஆபிரிக்க மக்களின் அமெரிக்க பயணத்துக்கு தடை விதிக்கும் யோசனையை ஏற்பதற்கில்லை. இப்படி உலகின் ஒரு மொத்த பகுதிக்கே சீல் வைக்க முற்படுவது, நிலைமையை இன்னும் மோசமாக்கி விடும். வைரஸ் நோய் கண்டு யாரும் மனநோயுக்கு ஆளாகவும் தேவையில்லை. அச்சம் அடையவும் வேண்டாம் என தெரிவித்துள்ளார்.

# ஐ.எஸ்.ஐ.எஸ். தலைமையகத்தை புகைப்படமெடுத்த சிறுவன் கொலை



சிரியாவிலுள்ள ஐ.எஸ். ஐ.எஸ். தீவிரவாதிகளின் தலைமையகத்தை புகைப்படமெடுத்த குற்றச்சாட்டில் 17 வயது சிறுவன் ஒருவனை தீவிரவாதிகள் பகிரங்கமாக 3 நாட்களாக சிலுவையில் அறைந்து படுகொலை செய்துள்ளனர்.

இது தொடர்பில் பிரித்தானிய டெயிலி மெயில் ஊடகம் கடந்த சனிக்கிழமை செய்திகளை வெளியிட்டுள்ளது.

ரக்கா நகரிலுள்ள ஐ.எஸ். ஐ.எஸ். தீவிரவாதிகள் தலைமையகத்தை புகைப்படமெடுத்த மேற்படி சிறுவன் அந்தப் புகைப் படங்கள் ஒவ்வொன்றிற்கும் 500 துருக்கிய லிரா பெறுமதியான பணத்தைப் பெற்ற நிலையில் போராளிகளால் பிடிக்கப்பட்டான்.


இதனையடுத்து அந்த சிறுவனை சிலுவையில் அறைந்த போராளிகள் அவனது கழுத்தில் மேற்படி சிறுவன் மத கொள்கைகளுக்கு எதிராக நடந்து கொண்டதுடன் தனது மதத்தையும் கைவிட்டுள்ளதாக குறிப்பிட்டு கடதாசி அட்டையொன்று தொங்க விடப்பட்டுள்ளது.

மேற்படி சிறுவனுக்கு மரண தண்டனை நிறைவேற்றப்படும் காட்சி ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாதிகளால் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

உலகச் செய்திகள்

# தெற்காசியாவில் அமைதி நிலவ காஷ்மீர் பிரச்சினைக்குத் தீர்வு

## பாக். தலைமைத் தளபதி தெரிவிப்பு



காஷ்மீர் பிரச்சினைக்கு தீர்வு காணப்பட்டால்தான், தெற்காசிய பிராந்தியத்தில் அமைதி சூழல் ஏற்படும் என்று பாகிஸ்தான் இராணுவ தலைமை தளபதி ரஹீல் ஷெரீப் கூறினார். பாகிஸ்தானில் உள்ள காகுலில் உள்ள இராணுவ பயிற்சி முகாமில் நடைபெற்ற அணிவகுப்பு நிகழ்ச்சியில் அந்நாட்டு இராணுவத் தலைமைத் தளபதி ஜெனரல் ரஹீல் ஷெரீப் பங்கேற்றார்.

அவர் கூறியதாவது:'ஐ.நா. சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில் காஷ்மீர் பிரச்சினை தொடர்பாக அந்தப் பகுதியைச் சேர்ந்த மக்கள் தீர்வு காண்பதற்கு அனுமதிக்க வேண்டும். தெற்காசியப் பிராந்தியத்தில் ஸ்திரத்தன்மையும், சமத்துவம் மற்றும் பரஸ்பர மரியாதை சார்ந்த உறவும் நிலவ வேண்டும் என்று நாங்கள் விரும்புகிறோம்.

இப்பிராந்தியத்தில் நீடித்த அமைதியான சூழ்நிலை ஏற்பட வேண்டுமென்றால் காஷ்மீர் பிரச்சினைக்கு தீர்வு காணப்பட வேண்டும். வெளியிலிருந்து வரும் அச்சுறுத்தலை எதிர்கொள்ளும் திறன் பாகிஸ்தான் இராணுவத்துக்கு உள்ளது. பாகிஸ்தானை ஆக்கிரமிக்க நினைத்தால், தகுந்த பதிலடியை தருவோம்.

வஜிரிஸ்தானில் தீவிர வாதிகளுக்கு எதிரான தாக்குதலை வெற்றிகரமாக நடாத்தி வருகிறோம். தீவிரவாதத்தை முற்றிலும் அகற்றும் வரை ஓயமாட்டோம். நாட்டில் அமைதியை ஏற்படுத்த வேண்டும் என்பதே இராணுவத்தின் குறிக்கோள். வஜிரிஸ் தானை மையப்படுத்தி தீவிரவாதிகள் ஏற்படுத்தியிருந்த கட்டமைப்பை அழித்துவிட்டோம். இவ்வாறு ரஹீல் ஷெரீப் கூறினார்.

# தற்கொலைத் தாக்குதல் ஈராக் மசூதியில் 21 பேர் பலி

இராக்கில் ஷியா பிரிவு மக்களைக் குறிவைத்து மசூதியில் நடாத்தப்பட்ட தற்கொலைப்படை தாக்குதலில் 21 பேர் கொல்லப்பட்டனர். மேலும் 25 பேர் படுகாயம் அடைந்தனர்.

இராக் மற்றும் சிரியாவில் ஷியா பிரிவு மக்கள் மீது தொடர்ச்சியாக சன்னிப் பிரிவு ஐ.எஸ்.ஐ.எஸ். கிளர்ச்சியாளர்கள் தாக்குதல் நடாத்தி வருகின்றனர்.

இந்த நிலையில் தலைநகர் பாக்தாத்தில் ஷியா பிரிவு மக்கள் வழிபடும் அபாஸ் அல் அத்லி மசூதியை குறிவைத்து வந்த மர்ம நபர் அங்கு தொழுகை முடிந்தவுடன் தான் நிரப்பி வந்த வெடி பொருட்களை வெடிக்கச் செய்தார். இந்த பயங்கர தாக்குதலில் 21 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். மேலும் 25 பேர் படுகாயம் அடைந்தனர். முன்னதாக இதே பகுதியில் கடந்த சனிக்கிழமை அடுத்தடுத்து நடந்த மூன்று குண்டுவெடிப்பு சம்பவங்களில் 26 பேர் கொல்லப்பட்டதும் 96 பேர் காயமடைந்ததும் குறிப்பிடத்தக்கது.

# அபிவிருத்திக்காக உழைப்பவர்களின் கரங்களைப் பலப்படுத்த முன்வரவேண்டும்

## வடமாகாண எதிர்க்கட்சித் தலைவர் கோரிக்கை

(கோண்டாவில்)

சிறார்களின் எதிர்காலம் ஒளிமயமாக அமைய வேண்டுமாயின் நீங்கள் சமாதானத்தை உருவாக்கி அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுத்து மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காக முன்னின்று உழைப்பவர்களைப் பலப்படுத்த வேண்டுமென வடக்கு மாகாண சபை எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா தெரிவித்துள்ளார்.

கோண்டாவில் இராமகிருஸ்ண வித்தியாலய கேட்போர் கூடம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் திறந்து வைக்கப்பட்டது. இவ்விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இச்சிறார்களின் எதிர்காலம் ஒளிமயமாக அமைய வேண்டுமாயின் நீங்கள் சமாதானத்தை உருவாக்கி அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுத்து மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காக முன்னின்று உழைப்பவர்களை பலப்படுத்தல் வேண்டும். உங்கள் சிறார்களின் எதிர்காலம் சிதைந்து போக வேண்டுமாயின் அழிவுப் பாதைக்கு அறைகூவல் விடுபவர்களை ஆதரியுங்கள் என்று கூறினார்.

இம் மண்டபத்திற்கு முன்னால் இருக்கும் இரண்டு மாடிக் கட்டடத்தில் ஒரு காலத்தில் யாழ்ப்பாணத்திற்கு வெளியில் யாரும் செல்ல வேண்டியிருந்தால் அனுமதிக்காக காத்திருக்க வேண்டிய நிலை இருந்தது. இன்று எவ்வித அனுமதியுமின்றி கொழும்புக்கு ஆறு மணித்தியாலத்தில் சொகுசாக பயணம் செல்லக் கூடியதாக இருக்கின்றது.

அதுமட்டுமல்ல 2009 ஆம் ஆண்டு யுத்தம் முடிவுக்கு கொண்டு வரப்பட்ட காலத்தில் இருந்து இன்று வரை அரசினால் அபிவிருத்திக்கு யாழ். மாவட்டத்திற்கு மட்டும் 89.021 மில்லியன் ரூபா செலவழிக்கப்பட்டிருக்கிறது. இப் பிராந்தியத்தின் வரலாற்றிலேயே இவ்வளவு குறுகிய காலத்தில் இவ்வளவு பெருந்தொகையான பணம் எந்த அரசினாலும் செலவழிக்கப்படவில்லை. நீங்கள் இம்மாவட்டத்தில் எந்த திக்குக்குச் சென்றாலும் அபிவிருத்தியின் சின்னங்களாக காபற் தெருக்கள்,



புகையிரதப் பாதைகள், மின் இணைப்புக்கள், தொலைபேசி கோபுரங்கள், புதிய வைத்திய சாலை கட்டடங்கள், அரச நிர்வாகக் கட்டமைப்புக்கள், இவ்வாறு பல அபிவிருத்தித் திட்டங்கள் நடந்தேறியுள்ளதை நீங்கள் காணலாம்.

இவ்வாறு அவர் தனது உரையில் மேலும் கூறியதோடு தனது தந்தையாரும் அப்பாடசாலையில் ஆசிரியராக இருந்ததை நினைவு கூறி அவரின் நினைவாக பாடசாலை அதிபர் கேட்டதற்கு இணங்க வடமாகாண சபையின் பிரமாண அடிப்படையிலான நிதியில் இருந்து போட்டோ பிரதி இயந்திரமொன்றை வாங்கிக் கொடுப்பதாகத் தெரிவித்தார்.

### தேசத்தின்...

பித்து வைத்தார். இந்நிகழ்வில், கலந்து கொண்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேலும் தெரிவிக்கையில்,

2016 ஆம் ஆண்டு வடமாகாணத்தில் தேசத்தின் மகுடம் கண்காட்சியை நடாத்த வேண்டுமென நான் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் வேண்டுகோள் விடுத்துள்ளேன்.

அவ்வாறு தேசத்தின் மகுடம் கண்காட்சி நடத்தப்படும் பட்சத்தில் யாழ்.மாவட்டம் உள்ளிட்ட வடமாகாணம் பாரியளவிலான அபிவிருத்தியில் முன்னேற்றம் காணும்.

கிடைக்கப் பெறுகின்ற சந்தர்ப்பங்களை மக்கள் சரியான முறையில் பயன்படுத்தி அதனூடாக சிறந்தபயன்களைப் பெற்றுக் கொள்வதற்கு எல்லோரும் ஒன்றிணைந்த ஒத்துழைப்பையும் ஒத்தாசையையும் வழங்க வேண்டும் என்றார்.

யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் வாழ்வின் எழுச்சித் திட்டம் தொடர்பான விளக்கவுரையினை வடக்கு மாகாண சபை எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா வழங்கினார்.

தொடர்ந்து வாழ்வின் எழுச்சித் திட்டப் பயனாளிகளுக்கு பழ மரக்கன்றுகள், விதை பொதிகள், கோழிக் குஞ்சுகள் உள்ளிட்ட வாழ்வாதாரத்திற்கான உள்ளீடுகள் வழங்கப்பட்டன.

நாடெங்கிலும் 25 இலட்சம் மனைப் பொருளாதார அலகுகளை வலுவூட்டும் தேசிய நிகழ்ச்சி திட்டத்தை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஆரம்பித்து வைத்த சமநேரத்தில் மாவட்டங்களின் அந்தந்த அமைச்சர்களாலும் ஆளுங்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களாலும் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

மேற்படி நிகழ்வில் யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ரூபினி வரதலிங்கம், வடமாகாண ஆளுநரின் செயலாளர் இ. இளங்கோவன், சண்டிலிப்பாய் பிரதேச செயலர் சு.முரளிதரன், வாழ்வின் எழுச்சித் திணைக்கள உதவி ஆணையாளர் க.மகேஸ்வரன், யாழ்.மாவட்ட வாழ்வின் எழுச்சித் திட்ட இணைப்பாளர் ஆ.ரகுநாதன், அமைச்சரின் ஆலோசகர் சுந்தரம் டிவகலால, அமைச்சரின் யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்பாளர் வி.கே.குகேந்திரன், ஈ.பி.டி.பி.யின் மானிப்பாய் பிரதேச இணைப்பாளர் வெ.அன்ரன் ஜோன்சன் (ஜீவா), விவசாயத் திணைக்கள மாவட்ட உதவிப் பணிப்பாளர் சிறிபாலசுந்தரம் உள்ளிட்ட திணைக்களங்களின் அதிகாரிகள் எனப் பல்துறைசார்ந்த பலரும் உடனிருந்தனர்.

இதேவேளை, யாழ்.பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட அத்தியடிப் பகுதியில் பயனாளி ஒருவரின் வீட்டுத்தோட்டத்தில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மரக்கறி செடிகளை நாட்டி வைத்தார். இந்நிகழ்வில் யாழ்.பிரதேச செயலர் சுகுணரதி தெய்வேந்திரம் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

### வடக்கில்...

யும். அத்துடன் அதற்காக பணச் செலவை மிச்சப்படுத்திக் கொள்ள முடியும் என்பதுடன் மக்களிடையே சிறந்ததும் சரியானதுமான மனநிலையைக் கட்டியெழுப்புவது இத்திட்டத்தின் முக்கிய நோக்காகும்.

இதனுடன் இணைந்ததாக மாவட்டத்திலுள்ள 15 பிரதேச் செயலர் பிரிவுகளில் தேசிய ரீதியிலான ஆரம்ப நிகழ்வுகள் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர்களின் தலைமையில் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இதில் அரச உத்தியோகத்தர்களின் பங்களிப்புடன் கூடியதாக மாவட்டத்தின் 435 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் கிராம உத்தியோகத்தர்கள், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டு வீட்டுத் தோட்டங்களை அமைப்பதற்கான விதை, தானியங்கள் உள்ளிட்ட உள்ளீடுகளை வழங்கி வைத்தனர்.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் யாழ்.மாவட்டத்தில் 78 ஆயிரத்து 300 குடும்பங்களுக்கு பயன்தரு மரக்கன்றுகள், பழ மரக்கன்றுகள், விதைத் தொகுதிகள் என்பவற்றுடன் பாடசாலைகள், அரச அலுவலகங்கள் மற்றும் வளாகங்களில் நடுகை செய்யப்படுவதற்கான மரக்கன்றுகள் வழங்கி வைக்கப்பட்ட அதேவேளை கோழிக்குஞ்சுகளும் நேற்று வழங்கப்பட்டன.

இவற்றை மாவட்ட திட்டமிடல் செயலகத்தின் ஒருங்கிணைப்புடன் வாழ்வின் எழுச்சித் திணைக்களம், விவசாயத்திணைக்களம், கமநல அபிவிருத்தி திணைக்களம், கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம், தென்னை பயிர்ச் செய்கை சபை போன்றவற்றுடன் பிரதேச செயலர்களும் இணைந்து இத்திட்டத்தை நடைமுறைப்படுத்தவுள்ளன.

### வடக்கு...

விநோநோகராதலிங்கம் பதில் தெரிவித்தும் இருக்கிறார்.

ஏன் இந்த தேவையில்லாத சர்ச்சை. எங்களது ஆயுதப் போராட்டம் தான் இன்றைக்கு உங்களை மாகாண சபையில் கொண்டு வந்து அமர்த்தியுள்ளது என்பதை மறந்து விடாதீர்கள்.

இதை மறந்து நீங்கள் கதைத்தால் நாம் பதவிகளைத் துறந்து போராட வேண்டியேற்படும்.

எனது பிரேரணையை பிரேரிக்க வேண்டாம் எனக் கட்சியின் தலைமைப் பீடம் தெரிவிக்கட்டும். அதைவிடுத்து நிகழ்ச்சி நிரலில் சேர்க்காது கட்சித் தலைமை சொல்லியுள்ளது என்று சொல்வது விடயம் புரியாதவர்களுக்கு சொல்வது போன்றது என்றார் எம்.கே. சிவாஜிலிங்கம். (இ,25)

# டெங்கு தாக்கம் அதிகரிப்பு நேற்று வரை 39 பேர் அனுமதி

யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒருவரும், மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி மாணவர்கள் இருவர் உட்பட நான்கு பேர் நேற்று டெங்கு நோய்த் தாக்கம் காரணமாக யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதில் நாகர்கோவில் பகுதியைச் சேர்ந்த ஒருவரும் உள்ளடங்குவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இவர்களுடன் இந்த மாதம் நேற்று வரை இவ்வாறு 39 பேர் யாழ். போதனா வைத்திய்சாலையில் டெங்கு நோய்ச் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டதாக யாழ். போதனா வைத்தியசாலை அதிகாரி தெரிவித்தார். (பா)

# விவசாயத்தை மேம்படுத்துவோம் கோப்பாய் மத்தியில் இன்று நிகழ்வு

## லயன்ஸ் உப-ஆளுநர், வலயத் தலைவர் பங்குபற்றுவர்

(கோப்பாய்)

விவசாயத் தொழிலை மேம்படுத்துவது தொடர்பான கருத்தரங்கு நாளை காலை 9.00 மணிக்கு கோப்பாய் மத்தி இராசன் சனசமூக நிலைய மண்டபத்தில் இடம்பெறும்.

லயன். வி.இரஞ்சன் தலைமையில் நிகழ்வு இடம்பெறும்.

கோப்பாய் லயன்ஸ் கழகம், கோப்பாய் மத்திய விவ்சாய சம்மேளனம் ஆகியன இணைந்தே விவசாய தொழில் மேம்பாடு மற்றும் சந்தைப்படுத்தல் தொடர்பான கருத்தரங்கு இடம் பெறும்.

இந்நிகழ்விற்கு பிரதம அதிதியாக சர்வதேச லயன்ஸ் கழகங்களின் மாவட்ட உப அளுநர் டாக்டர் வை.தியாகராசாவும், சிறப்பு விருந்தினராக லயன் வலயத் தலைவர் டாக்டர் எஸ். குணதாசன் ஆகியோர் கலந்து சிறப்பிப்பர். (08)

# புலிகள் மீதான தடையை தொடர ஐரோப்பிய ஒன்றியத்தில் மேன்முறையீடு

## அரசு நடவடிக்கை

விடுதலைப் புலிகள் இயக்கம் மீதான தடையை நீக்கி ஐரோப்பிய ஒன்றிய நீதிமன்றம் அளித்த தீர்ப்புக்கு எதிராக, இலங்கை அரசாங்கம் மேல் முறையீடு செய்யவுள்ளது. விடுதலைப்புலிகள் இயக்கத்துக்கு விதித்த தடையை நீக்கி, ஐரோப்பிய நீதிமன்றம் கடந்த 16ஆம் திகதி தீர்ப்பு அளித்தது. இந்த உத்தரவு, 3 மாதங்களுக்கு பின் நடைமுறைக்கு வரும். விடுதலைப்புலிகள் இயக்கம் மீதான கட்டுப்பாடுகள் அவசியம் என்றால் அதுபற்றி 2 மாதங்க ளுக்குள் யோசனைகளை வழங்கலாம் என்றும் தீர்ப்பில் கூறப்பட்டுள்ளது. இந்த தீர்ப்பை எதிர்த்து, இலங்கை 2 மாதங்களில் மேல் முறையீடு செய்ய முடியும்.

இந்த நிலையில், ஐரோப்பிய யூனியன் நீதிமன்றத் தீர்ப்புக்கு எதிராக ஆதரவு திரட்டுவதற்காக, தனது தூதர் ரோட்னி பெரேராவை அரசாங்கம் ஐரோப்பிய நாடாளுமன்றம் அமைந்துள்ள ஸ்டிராஸ்பர்க் (கிழக்கு பிரான்ஸ்) நகருக்கு அனுப்புகிறது.

அவர் ஐரோப்பிய யூனியன் நாடாளுமன்ற கூட்டத்தில் கலந்து கொள்வார். அப்போது அவர், விடுதலைப் புலிகளுக்கு எதிராக அங்குள்ள 2 முக்கிய குழுக்களான வெளியுறவு குழு, பாதுகாப்பு குழு ஆகியவற்றின் ஆதரவை பெற முயற்சி எடுப்பார் என தெரிய வந்துள்ளது. இந்த விவகாரத்தில் அவர், ஐரோப் பிய கவுன்சிலின் ஆதரவையும் பெறுவதற்கு முயற்சிப்பார் என தகவல்கள் கூறுகின்றன.

### வவுனியாவிலும்....

பெற்ற இந்த நிகழ்வின்போது கிராம அபிவிருத்தி சங்கத்தின் தலைவர் கந்தசாமியினால் மரக்கன்று நடப்பட்டதுடன், மக்களுக்கு மரக்கறிக் கன்றுகளும் வழங்கப்பட்டன.

இதன்போது கிராம அலுவலர், திவிநெகும அபிவிருத்தி உத்தியோகத்தர், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர், கிராம பொலிஸ உத்தியோகத்தர் உட்பட பலரும் கலந்துகொண்டனர்.

### கன மழை....

அகற்றுவதற்காக பாரிய இயந்திரங்களை அப்பகுதிக்கு கொண்டு சென்றிருந்த போதும் கடுமையான சகதியினால் வாகனங்களை உள்ளே கொண்டு செல்ல முடியாத நிலை உருவாகியுள்ளது. இதனால் மனித வலுவைப் பயன்படுத்தி வாய்க்கால்கள் வெட்டியே நீரை வெளியேற்றி வருகின்றோம்.

எனினும் பெரிதாக வெள்ளநீர் வழிந்தோடியதாக இல்லை. இந்த நிலையில் பாதிக்கப் பட்டிருக்கும் மக்களுக்கு உலர் உணவுகளை வழங்குவதற்கான நடவடிக்கைளை, மாவட்டச் செயலகம் மேற்கொண்டுள்ளதாக அரசாங்க அதிபர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை ஒவ்வொரு வருடமும் நாங்கள் வெள்ளத் தினால் பாதிக்கப்படுகின்றோம். ஆனால் எம்மை எவரும் கண்டு கொள்ளவில்லை. நாங்கள் மக்களா? மந்தைகளா? என பாதிக்கப்பட்டிருக்கும் மக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

### ஈழக்கோரிக்கையைக்...

தேர்தல்களில் போட்டியிட்டு தற்போதைய எமது தேர்தல் விஞ்ஞாபன கொள்கையின் படியே வென்றுள்ளோம்.

எமது இந்தத் தேர்தல் விஞ்ஞாபனங்களில் எந்தவொரு இடத்திலும் நாட்டை பிரிக்கும் சொல் இடம்பெறவில்லை. நாம் ஐக்கிய இலங்கைக்குள்ளேயே அதிகாரப்பகிர்வைக் கேட்கின்றோம்.

எனவே எமது இந்தக் கொள்கை தொடர்பாக பொது மக்கள் மத்தியில் தவறான தகவல்கள் வழங்கப்படுகின்றன. நாம் ஈழக் கோரிக்கையை எப்பொழுதோ கைவிட்டுவிட்டோம்.

எனவே ஜனாதிபதி மகிந்த நிறைவேற்று ஜனாதிபதி முறையை ஒழிக்க வேண்டுமென அவர் தெரிவித்துள்ளார்.

# தேர்தல் விஞ்ஞாபனம்; தயாரிக்கிறது ஐ.தே.க

கடந்த வாரம் மாதுளுவாவே சோபித தேரரைச் சந்தித்து உரையாடிய எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, தனது தேர்தல் விஞ்ஞாபனத்தை அவரிடம் கையளித்துள்ளார்.

மாதுளுவாவே சோபித தேரர் மற்றும் முக்கிய மதகுருமார்களின் ஆலோசனையின் பின் குறித்த தேர்தல் விஞ்ஞாபனத்தில் சிறியளவிலான மாற்றங்கள் இடம்பெறலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தி மாகாண சபைகளுக்குரிய அதிகாரத்தை வழங்குதல், சுயாதீன ஆணைக்குழுக்களை மீண்டும் உருவாக்குதல், தேர்தல் முறையில் சீர்திருத்தம், வாழ்க்கைச் செலவு குறைப்பு போன்ற விடயங்கள் இந்தத் தேர்தல் விஞ்ஞாபனத்தில் இடம்பெற்றுள்ளன.

இவற்றுடன் அரச ஊழியர்களுக்கான சம்பள அதிகரிப்பு, ஓய்வூதியக் கொடுப்பனவு அதிகரிப்பு போன்ற கவர்ச்சிகரமான திட்டங்களையும் இந்த தேர்தல் விஞ்ஞாபனம் உள்ளடக்கியுள்ளது.

இதற்கிடையே ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இதுவரை தனது தேர்தல் விஞ்ஞாபனத்தை இறுதி செய்ய முடியாத நெருக்கடி நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்.

மஹிந்த சிந்தனை - அபிவிருத்தி யுகம் என்ற தலைப்பில் அவர் தனது தேர்தல் விஞ்ஞாபனத்தை தயாரித்துக் கொண்டிருப்பதாக தகவல் கிடைத்துள்ளது.

எனினும் சிறுபான்மை மக்கள் தொடர்பான தெளிவான வாக்குறுதிகள் எவையும் இதுவரை உள்ளடக்கப்படாத நிலையில், தமிழ் மக்களின் எதிர்பார்ப்புகள் நிறைவேற்றப்படும், முஸ்லிம்களின் அபிலாசைகள் பூர்த்தி செய்யப்படும் என்றவாறான பொதுவான வாசகங்கள் தேர்தல் விஞ்ஞாபனத்தில் இடம்பெற்றுள்ளன.

# கிளிநொச்சி மாவட்டத்தில் வாழ்வின் எழுச்சி ஆறாம் கட்டம்

(கிளிநொச்சி)

வாழ்வின் எழுச்சி தேசிய நிகழ்ச்சித்திட்டத்தின் ஆறாம் கட்டம் நேற்று கிளிநொச்சி மாவட்டத்தில் காலை பத்து மணி ஏழு நிமிடத்திற்கு வெகு சிறப்பாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

மாவட்ட ரீதியாக ஏற்பாடு செய்த நிகழ்விடத்திலும் மற்றும் பிரதேச கிராமிய ரீதியாக ஏற்பாடு செய்த இடங்களிலும் இத்திட்டம் குறித்த நேத்தில் வெகு சிறப்பாக ஆரம்பமாகின.

அதற்கமைவாக மாவட்ட ரீதியாக கண்டாவளை பெரிய குளத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வில் ஈ.பி.டி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினரும் குழுக்களின் பிரதித்தலைவருமான மு.சந்திரகுமார்முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு செயற்திட்டத்தை ஆரம்பித்து வைத்து பயனாளிகளுக்கு பழ மரக்கன்றுகள், விதைதானியங்கள் தென்னங்கன்றுகள் கோழிக்குஞ்சுகளையும் வழங்கினார்.

இந்நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட செயலர் திருமதி ரூபவதி கேதீஸ்வரனும் மற்றும் திணைக்களம் சார்ந்த பொறுப்பதிகாரிகளும் கலந்துகொண்டிருந்தனர்.

இதேவேளை பிரதேச ரீதியாகவும் மாவட்டத்தின் கரைச்சி பச்சிலைப்பள்ளி பூநகரி கண்டாவளை ஆகிய பிரதேச செயலர் பரிவுகளில் ஏற்பாடுசெய்த இடங்களில் நிகழ்வுகள் நடைபெற்றன.



கரைச்சி பிரதேச செயலர் பிரிவில் மலையாளபுரம் கிராமத்தில் நடைபெற்ற நிகழ்வில் ஈ.பி.டி.பி.யின் வடக்குமாகாணசபை உறுப்பினர் வை.தவநாதன் முதன்மைவிருந்தினராகக் கலந்துகொண்டு மரக்கன்றுகளை நடுகைசெய்து திட்டத்தை ஆரம்பித்துவைத்தார்.

இந்நிகழ்வில் கரைச்சி பிரதேச செயலர் நாகேஸ்வரனும் கலந்துகொண்டார். இதேவேளை பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர்பிரிவில் கச்சார் வெளிக்கிராமத்தில் நடைபெற்ற நிகழ்வில் பச்சிலைப்பள்ளி பிரதேசசபை உறுப்பினர் அன்ரன் அன்பழகன் கலந்துகொண்டு திட்டத்தை ஆரம்பித்துவைத்தார்.

இதில் சிறப்புவிருந்தினராக பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் திருமதி ஜெ.பரமோதயன் கலந்துகொண்டிருந்தார். குறித்த நேரத்தில் பூநகரிப்பிரதேச செயலர் பிரிவிலும் தெளிகரை கிராமத்தில் நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது இதில் பூநகரி பிரதேசசபை உறுப்பினர் இராசலிங்கம் மற்றும் கரைச்சி பிரதேசபை உறுப்பினர் மனோகரன் ஆகியோரும் கலந்துகொண்டு திட்டத்தை ஆரம்பித்துவைத்தனர் அந்நிகழ்வில் பூநகரிபிரதேச செயலர் சத்தியசீலனும் கலந்துகொண்டிருந்தார்.

இதேவேளை இந்நிகழ்வுகளில் பெருமளவான பயனாளிகளும் மக்களும் கலந்துகொண்டு திட்டத்தின் பயன்களைப் பெற்றுக்கொண்டனர்.

# அச்சுவேலி – ஆவரங்கால் இருளில் மூழ்கியுள்ளன

அச்சுவேலிச் சந்தியில் இருந்து ஆவரங்கால் சந்திவரையான வீதிகளுக்கு மின் விளக்குகள் இன்மையால் வீதிகள் இருளில் மூழ்கியுள்ளன.

பிரதான பேருந்து மார்க்கமான 750, 751 இ.போ.ச மற்றும் தனியார் பேருந்துகள் போக்குவரத்தில் ஈடுபடும் இவ்வீதியால் இரவு வேளைகளில் பயணம் செய்வோர் மற்றும் பேருந்தில் பயணத்தை மேற கொண்டுவிட்டு தமது வீடுகளுக்குச் செல்வோர் பெரும் இன்னலுறுகின்றனர்.

எனவே இதனை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடன் நடவடிக்கை எடுக்குமாறு பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (85)

# ஊடகவியலாளர் மீது பாலியல் வன்புணர்வு

## நால்வர் கைது

(கொழும்பு)

கொழும்புக்கு சுற்றுலா வந்திருந்த திருமணமாகாத பெண் ஊடகவியலாளரை பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்திய சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட 4 பேரில் ஒருவர் எதிர்வரும் 21 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

மலேசிய ஊடகவியலாளரான இந்தப் பெண் அனுராதபுரம் பழைய புனித நகரில் இவ்வாறு பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

இந்த குற்றச் செயலுக்கு உதவியதாக 4 இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர்.

சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேக நபரை 24 ஆம் திகதி அடையாளம் காணும் அணிவகுப்புக்கு உட்படுத்துமாறு அனுராதபுரம் நீதவான் சிறைச்சாலை அத்தியட்சகருக்கு உத்தரவிட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட 4 பேரில் மூன்று பேர் தலா ஒரு இலட்சம் ரூபா பிணையில் விடுதலை செய்யப்பட்டதுடன் அவர்களையும் 24 ஆம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு நீதவான் மேலும் உத்தரவிட்டுள்ளார்.

# ரணில் சிங்கப்பூருக்கு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க இரண்டு நாள் விஜயமாக சிங்கப்பூருக்கு புறப்பட்டுச் சென்றுள்ளார்.

நேற்று புறப்பட்டுச் சென்ற அவர், எதிர்வரும் 23 ஆம் திகதி நாடு திரும்ப உள்ளதாக எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகம் அறிவித்துள்ளது.

# இரணைமடுச் சந்தியில் விபத்து லாண்ட்மாஸ்டர் சாரதி காயம்



கிளிநொச்சி, இரணைமடுச் சந்திக்கு அண்மையில் இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்றுக் காலை 5.30 மணியளவில் ஏ9 வீதியில் குறித்த விபத்து இடம்பெற்றுள்ளது. கிளிநொச்சி பகுதியிலிருந்து வவுனியா நோக்கி சென்று கொண்டிருந்த பிக்கப் வாகனம், அதே பகுதியில் பயணித்துக்கொண்டிருந்த இருசக்கர உழவு இயந்திரம் மீது மோதியதில் குறித்த விபத்து இடம்பெற்றுள்ளது.

உழவு இயந்திரத்தில் பயணித்தவரே காயமடைந்த நிலையில் கிளிநொச்சி பொது வைத்தியசாலையில் அவசர சிகிச்சை பிரிவில் சிகிச்சை பெற்று வருவதாக தெரிவிக்கப்படுகிறது. விபத்து தொடர்பாக மாங்குளம் பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (29)

# ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

மீன்பிடித்துறை அமைச்சுக்கு முன்னால் ஆர்ப்பாட்டமொன்று நடாத்தப்பட்டுள்ளது.

மீன்பிடி உபகரணங்களை பகிர்ந்தளித்தல் தொடர்பில் ஏற்பட்டுள்ள பிரச்சினையை முன்னிலைப்படுத்தியே இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

சுமார் 500 இற்கும் மேற்பட்ட மீனவர்கள் இவ்வார்ப்பாட்டத்தில் கலந்துகொண்டுள்ளதுடன், இதன்போது கற்களை வீசி தாக்குதல்களும் நடத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

# வாழ்வின் எழுச்சியில் ஜனாதிபதி



திவிநெகும தேசிய திட்டத்தின் ஆறாம் கட்டம் ஜனாதிபதி மகிந்த ராஜபகஷ தலைமையில நேற்று அல்ரி மாளிகையில் ஆரம்பமானது.

நேற்றுக் காலை 10.07 மணிக்கு பிறந்த சுபநேரத்தில் கிழக்கு பார்த்து தென்னங்கன்றொன்றை ஜனாதிபதி நட்டதை யடுத்து திவிநெகும ஆறாம் கட்டம் நாடு முழுவதும் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

அமைச்சர்களான எஸ்.எம். சந்திரசேன, ஜனாதிபதி செயலாளர் லலித் வீரதுங்க, பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் நிஹால் ஜயதிலக்க, திவிநெகும பணிப்பாளர் நாயகம் ஆர்.ஏ.ஏ. ரணவக்க, உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2014 ஒக்ரோபர் 21 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.